


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


***With Best Compliments From***



# NEW EASTERN PHARMACY

**Pharmaceuticals, Chemists & Groceries**

**#23,Grandpass Road,**
**Colombo - 14.**
**Tel : 011 - 2338827**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LUX DE COELO

# தமிழ்க்கலாமன்றம்

## புனித அந்தோனியார் கல்லூரி

## கண்டி

# கலை விழா 2010

## பிரதம அதிதி

## அனுஷியா சிவராஜா

மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர்

ஊடக அனுசரணை

வெற்றி FM

வெற்றி TV

தினக்குரல்

இணை அனுசரணை

Group '99
OBA SACK

இடம் – கல்லூரி மண்டபம்

நேரம் – பி.ப. 2 30 மணி

காலம் – 2011ம் ஆண்டு மாசி மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை

தங்கத்தளமிடும் மங்கா வளமுள
கொங்கு களமிதில் தமிழே தளைத்திட வாளிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Not just tiles, LifeStyle*

Group of Asian

# ASIAN CERAMIC

**Importers & Distributers of All kinds of Wall Tiles, Floor Tiles, Bathroom Fittings & Sanitarywares, Etc.**

**Showrooms : * Akurana *Katugastota * Dambulla.**

**No.23, Main Street ,
Kurunegala.**

**Tel : 037 - 4935904
037 - 4982662
Fax : 081 - 2497899**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வான் மொழி வாழியவே !
ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே !
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினை தரு தொல்லையகன்று
சுடர்க தமிழ் நாடே !
வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து

## மன்ற கீதம்

கலைவிளக்கே ஒளி விளக்கே
கவின் விளக்கே வாழ்க !
கலாமன்றம் எனும் இனிய
தமிழ் விளக்கே நீ வாழ்க !

இயல் வளர்ப்பாய் இசை வளர்ப்பாய்
நாடகமும் வளர்ப்பாய்
எல்லோரும் புகழ்ந்திடுவர்

வாழிய வாழியவே ~ கலை விளக்கே
தெய்வ மகன் பொருளுரைத்தாய்
தெளிந்தவர்கள் தொழுதார்
தேனனைய இசை பொழிந்தாய்

தெளிந்தவர்கள் மகிழ்ந்தார் ~ கலை விளக்கே

இயற்றியவர்

புலவர் - பார்வதிநாதசிவம்

**இன்சொல் வழங்குவதால் நாக்கு ஒருபொழுதும் காயமுறுவதில்லை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

# THE MANAGEMENT
# OF

# JANATHA STEELS,
# 20,QUARRY ROAD,
# COLOMBO 12.

**TEL : 011-2 421 412**

**FAX : 011-2 345667**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM THE PRINCIPAL FOR KALAI VIZHA 2010

Can we breathe peacefully now, saying that we have peace in our country? Certainly we cannot yet. It might need lot of time, and lot of sacrifices from each one. It demands a great change of heart of each one. We as a community, St.Antonians are also doing our best to promote, lasting peace, unity and brotherhood not only among human beings but also among animals and plants as well. There may be some who do not get what we are trying to communicate. But there had been such people all along history, causing all sorts of turmoil among the peace loving world.

We as a community, consists all ethnic and religious groups in this country, still can be proud of setting a living example of such peaceful living, a powerful and meaningful example for the rest of our country. We are a community empowered with Christian morals and ethics, even thought we consist of deferent faiths and ethnic groups. Thanks to each and every one who upheld this philosophy during the past 167 years, and who has passed through the portals of St.Anthony's College to the world during this long history, to plant and water the seeds of love, peace, unity and forgiveness. We are a part of that great endeavour. Be proud to be an Antonian !

We are happy to celebrate Kalai Vizha 2010 in our College. We the Antonian fraternity come together to celebrate and wish the blessing from above, especially upon the Tamil brotherhood of our community.

Thank you Mrs. Prisca Thevadasan and all the supportive teachers, young Antonians and all the other financial and moral supporters who rallied round us to make this event a meaningful one.

May God bless you and all your loved ones.

Rev Fr B K Titus Rodrigo OSB

**Two different minds, the same world is a hell and a heaven**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

# ANCHOR STEELS

**Importers, Plywood & General Hardware Merchants**

**No. 329, Old Moor Street**
**Colombo - 12.**

**Tel : 2424226**
**Fax - 2478103**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Minister } 081 2385373
081 2387384

Mobile } 071 6875030

Fax } 081 2387384

Secretary } 081 2384173
081 4929446

Fax } 081 2387410

# ANUSHIA SIVARAJAH J.P.

**MINISTER**

**Ministry of Industries,Sports,Women Affairs,Rural Development,Estate Infrastructure Development, Hindu Cultural,Youth Affairs and Education(Tamil)**

**CENTRAL PROVINCIAL COUNCIL**

## வாழ்த்துச் செய்தி

இயற்கை எழில் கொஞ்சும் மலைநாட்டில் கல்விக்கூடமாக அமைந்திருக்கும் கண்டி புனித அந்தோனியார் கல்லூரியின் தமிழ்க் கலாமன்றம் வருடந்தோறும் பெருமையுடன் வழங்கும் கலைவிழா இவ்வருடமும் மிக விமர்சையாக நடைபெறுவதையிட்டும், அவ்விழாவிலே வெளியிடப்படும் கலைமதி சஞ்சிகைக்கு நான் வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டும் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

மாணவர்கள் வகுப்பறைக் கற்றலோடும், ஆசிரியர்கள் வகுப்பறைக் கற்றலுக்கு வழிக்காட்டுவதோடும் நின்று விடக்கூடாது. பாடசாலைகளில் மாணவர்களது ஏனைய திறன்களும் வளர்க்கப்படுவது அத்தியாவசியமானதாகும். அதற்காக அப்பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் பணிகளை மேற்கொள்ள வேண்டும். கல்வியின் இறுதி நோக்கமாகத் திகழ்வது முழுமையான ஆளுமையுடைய ஒரு மனிதனை சமூகத்திற்கு அளிப்பதாகும். ஆளுமையென்பது வெறும் ஏட்டுக் கல்வி மட்டுமல்ல, ஒரு மனிதனிடம் இலைமறை காயாக விளங்கும் ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவதுமாகும். இவ்வாற்றல்களை வெளிக் கொணர்வதற்கு பாடசாலையைப் பொறுத்தவரையில் களம் அமைத்துக் கொடுப்பது இவ்வாறான கலை விழாக்களே என்றால் மிகையாகாது.

நமது தமிழ் மொழி வாழ்வாங்கு வாழ வேண்டும். இது இன்றைய மாணவர்கள் கையில் தங்கி இருக்கின்றது. இப்பாடசாலையில் பயிலும் ஒவ்வொரு மாணவனும் " இவன் தந்தை எண்னோற்றான் கொள்" எனும் வள்ளுவன் வாக்கிற்கிணங்க வாழ்த்தினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**அனுஷியா சிவராஜா**
**மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர்**

**தைரியமாக வாழ்வதற்கு வகை செய்யக் கூடிய ஒன்றே கல்வியின் குறிக்கோளாக இருக்க முடியும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

R.S. Sudhakaran
Managing Partner

# POPULAR STATIONARY

Dealers in Paper & Specialist in Computer Ribbons,Cartridges, Photocopy Toners, All Kind of School & Office Stationaries.

LEXMARK hp Canon advanced simplicity TOSHIBA imation EPSON

27A,Maliban Street,Colombo - 11.
Tel : 2433998,Tel/Fax : 2433997,
Mobile : 0771522298

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளம் பெற வாழ்த்துகின்றேன் ..........

ஆதி சிவன் பெற்றுவிட்ட தமிழ் ; அதனைக் கண்டு மகிழ்ந்த அகத்தியனால் மேவும் இலக்கணம் செய்து செய்து கொடுக்கப்பட்ட தமிழ் ; மூன்று குலத் தமிழ் மன்னர்களால் நித்தம் வளர்க்கப்பட்ட தமிழ் ; தெள்ளு தமிழ் புலவர்களால் பல தீஞ்சுவைக் காவியங்கள் செய்து கொடுக்கப்பட்ட தமிழ், காலன் ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சிய தமிழ் எங்கள் தமிழ்மொழி! இத்தகைய சிறப்பான தமிழ்மொழிக்கு, கவின்பணிகள் செழித்தோங்கிட கலைப்பணியாற்றி தமிழ்-தாய்க்கு காணிக்கை செலுத்தும் உன்னத நோக்கோடு உருவாக்கபட்டதுதான் கண்டி புனித அந்தோனியார் கல்லூரி தமிழ்க்கலாமன்றம்.

1967ம் ஆண்டு புரட்டாதித் திங்கள் ஒன்பதாம் நாள் அருட்தந்தையர்களின் ஆசீர்வாதத்தோடு ஆரம்பித்து வைக்கப்பட்ட இம்மன்றம், வேரூன்றி விருட்சமாகி நான்கு தசாப்தங்களைக் கடந்து 43 வருடங்களைப் பூர்த்திசெய்துள்ளது. இந்த நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் ஆசிச்செய்தி வழங்க எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

"நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ" என்பதற்கமைய கலாமன்றத்தை தொடர்ந்தும் வளர்ச்சிப்பாதையிலிட்டுச் சென்ற, இட்டுச் செல்லும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், வர்த்தகப் பெருமக்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

நாளைய உலகின் தலைவர்களாகிய மாணவ மணிகளே! தமிழன்னையின் தாழ்பணிந்து, தமிழ் பாரம்பரியத்தைப் பேணி அன்னைத் தமிழுக்கு முத்தமிழ் காணிக்கை செலுத்தும் நன்னாள் இன்று. இந்நாளில் உங்கள் கலைப்பயணம் இடரின்றித் தொடர இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

கையெழுத்துப் பத்திரிகையாக அன்று ஆரம்பித்து வைக்கப்பட்ட 'கலைமதி' இன்று முழுமதியாக மெருகுடன் உங்கள் கைகளில் தவழுகின்றது. இந்த சஞ்சிகைக்கு மெருகூட்டிய அனைவருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இச்சஞ்சிகை மென்மேலும் வளமுற வாழ்த்துகின்றேன்.

'வாழ்க தமிழ் மொழி !

வளர்க தமிழ்க்கலாமன்றம் !

இவ்வண்ணம்,

திருமதி. இந்திரா சிவரத்தினம்
(முன்னாள் பிரதி அதிபர்/ மன்ற போஷகர்
(முன்னாள் கண்டி வலய மேலதிக கல்விப்பணிப்பாளர்)

**கடவுளை மறுக்கிறவன் தன்னையே மறக்கிறான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

THE
# LANKA PHARMACY

**Pharmacy & Groceries**
**Specialist for Pharmaceuticals**

**No.60,Fernando Avenue,**
**Negambo**
**Tel : 031- 2233737**
**031 -2223218**
**0777-258282**

**CHENNELLING**
**Service Available**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මධ්‍යම පළාත් සභාවේ අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව.
மத்திய மாகாண சபையின் கல்வித் திணைக்களம்.
Education Department of Central Province

## வாழ்த்துச் செய்தி


ஒரு சமூகத்தின் கலை, கலாசார விழுமிய, பண்பாட்டுக் கோலங்களை எடுத்துக் காட்டுவது கலை விழாக்களே. வாழ்ந்தவர்கள் விட்டுச் சென்ற மிச்சங்கள், எச்சங்களாக இளைய தலைமுறையினருக்கு விட்டுச் செல்லப்படுகிறது. அதை காத்து நிற்கும் பொறுப்பில் பாடசாலைகள் பெரும் பங்காற்றுகின்றன.

மனிதர் மறந்து விட்ட விடயங்களை ஞாபகப்படுத்துவதும் மறக்கடிக்கப்பட்ட விடயங்களுக்கு உயிரூட்டுவதும் இந்நிகழ்வுகளே.

ஆளுமைமிக்க மாணவர்கள் மத்தியிலே மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்தி சமூகத்திற்கு அடையாளப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள அதிபர் உள்ளிட்ட பணிக்குழுவினருக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களையும் நல்லாசிகளையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

யாவும் இனிதே நடைபெற நல்வாழ்த்துக்கள்.

P.S.சதீஸ்
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மத்திய மாகாணக்
கல்வித்திணைக்களம்,
கண்டி.



**படிப்பும் பணமும் செல்வாக்கும் இருந்து விட்டால் மட்டும் ஒழுக்கம் வந்துவிடாது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

***MOHAMED FERONI USOOF (OLD BOY)***

MOHAMED SAALIM USOOF - GRADE : 13 T

UMMER USOOF - GRADE : 10 D

***MOHAMED MAUFFER USOOF ( OLD BOY)***

TARNISH USOOF - (OLD BOY)

***MOHAMED RIAZ USOOF (OLD BOY)***

MOHAMED ADNAN USOOF - ( OLD BOY)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கண்டி கல்வி வலயத்தில் இயங்கும் புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரியின் தமிழ்ப்பிரிவுக் கலாமன்றம் நடாத்தும் வருடாந்த கலைவிழாவின் போது வெளியிடப்படும் 'கலைமதி' சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். இச்சஞ்சிகை மாணவர், ஆசிரியர்கள், அதிபர் ஆகியோரின் ஆக்கங்களைக் கொண்டு வெளிவரும் சிறப்பான இலக்கிய ஆக்கமாகும் என எண்ணுகின்றேன். 21ம் நூற்றாண்டு அறிவும், தேர்ச்சியும் தொழில் நுட்பமும் நிறைந்த சவால் மிக்கதாகும். வகுப்பறை கற்றலோடு பரீட்சை பெறுபேறுகளை மட்டும் மையமாகக் கொண்டு நடாத்தப்பட்ட கல்வி முறைமையானது பல குறைபாடுகளைக் கொண்டதாகவும் மாணவர்களின் ஆக்கத்திறன், மொழித்தேர்ச்சி, ஆளிடைத்தொடர்பு விஞ்ஞான தொழில்நுட்பத் தேர்ச்சிகள் குறைந்ததாக உள்ளதால் பூகோளமயமாக்கப்பட்ட சந்தைப் பொருளாதார அமைப்பிலும் சமூக நிலை மாற்றத்திற்கும் முகம் கொடுக்கக் கூடிய மாணவர் சமுதாயத்தை உருவாக்கத் தவறியுள்ளது. இவ்வாறான நிலைமைகளை மாற்றி அமைத்து சிறந்த கல்வி கற்ற மாணாக்கர்களை உருவாக்குவதில் இவ்வாறான சஞ்சிகைகள் கைகொடுக்கும். அத்துடன் மாணவரின் ஆன்மீக, இலக்கிய நய, இயல், இசை, நாடக தேர்ச்சிகளின் ஊடாக பல மதிநுட்ப (Multiple Intelligent) திறன்களைக் கொண்ட மாணவர்களை உருவாக்க இச்சஞ்சிகை ஊன்று கோலாக அமையும்.

இக்கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்கள் முத்தையா முரளிதரன் போன்ற உலக தரம் வாய்ந்த தேர்ச்சிகளை வெளியிட்டு தமது கல்லூரிக்கும் பிரதேசத்திற்கும் நாட்டுக்கும் சேவையாற்ற பிரார்த்திக்கின்றேன்.

செம்மொழியான தமிழ்மொழிக்கு தாங்கள் ஆற்றும் செயற்பாட்டுக்கு வாழ்த்துக்கள்.

வாழ்க வளமுடன்.

உங்கள்

A. இராசையா . J.P
B.A. Sc.Trained PGDEM,
SLEAS III
மேலதிக வலயக் கல்வி பணிப்பாளர்,
கண்டி கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

# Rainbow

## Rainbow Stationers(Pvt)Ltd.

**18,Maliban Street, Colombo 11.**
**Voice : 2433906(hunting) 2433907, 2433908**
**Fax : +94 11 2433904 e-mail : rainbowst@sltnet.lk**

## Importers,Dealers in Paper & Stationery

**All types of Stationery,Paper & Board, Packing Materials, Computer, Typewriter Recording / Printing Accessories, Digital Duplication links, Stencil Master Rolls Photo Copy Papers & Toners, Fax Papers, Fax Ink Films & Cartridges etc.............**

---

# MULTI STEEL COMPANY

No.5, Abdul Jabbar Mawatha,
Colombo 12,
Sri Lanka.

Tel : +94 11 2432144,
2332917
Fax : + 94 11 2459883

E-Mail : multisteel@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பு விருந்தினரின் வாழ்த்துச் செய்தி


மத்திய மலை நாட்டிலே, கண்டி மாநகரக் கலங்கரை விளக்காய்த் திகழும் கத்தோலிக்கப் பாடசாலையும், தமிழ்க் கலாசாரத்தைப் பேணுவதில் பெருமைமிக்க அடையாளமுமாக விளங்கும் புனித அந்தோனியார் கல்லூரியின் தமிழ்க் கலாமன்றக் கலைவிழாவிலே கலைமதிக்கு ஆசிச்செய்தியை எழுதுவதில் பெருமையடைகின்றேன்.

இப்பாடசாலையில் ஆரம்ப வகுப்பிலிருந்தே எனது மகன் கல்வி கற்றவர். அறிவிலும், விளையாட்டிலும், ஒழுக்கத்திலும் சிறப்புற்று, சாதாரண, உயர் தரங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று, இன்று லண்டன் மாநகரில் உயர்கல்வியுடன் விளையாட்டிலும் மேன்மையடைந்து ஒழுக்க சீலனாக திறமையுடன் திகழ்கின்றாரென்றால், இத்தனை சிறப்புக்கும் புனித அந்தோனியார் கல்லூரியே காரணமாகும்.

கலையென்பது எமது சிந்தனை, சொல், செயலில், இருந்து வெளிப்பட்டு உருவெடுக்கும் உண்மையான கலையுணர்வின் வெளிப்பாடு மானிடருள்ளங்களை பரவசமடைய வைக்கும். இப்பேர்பட்ட சக்தியை இக்கல்லூரியும் தாங்கிச் சென்று விருட்சமாக வேண்டும். மாணவர்களும், ஆசிரியர்களும் இணைந்து முத்தமிழை வளர்த்து புனித அந்தோனியாரின் நாமத்தை விருட்சமாக்கிடல் வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

"காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே- என்னைக்
கைதூக்கியாள் தெய்வமே."

திரு. நமசிவாயம் பிள்ளை-
முகாமைத்துவப் பணிப்பாளர்
நதீக்கா நகைமாளிகை
இல.27,பிரதான வீதி,
கேகாலை.



**பூரணமான அறிவுக்கு அடையாளமாயுள்ளது கற்பிக்கும் ஆற்றல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

VALAMPURI

# Valampuri Textile

**Dealers in Textiles & Ready made Garments**

**Specialist Shirts**

**# 121,2nd,Cross Street,**
**Colombo 11.**
**Sri Lanka.**
**Tel : 2384333**

---

AJ

# A. J.

Dealers in textiles & Specialist for

**Abaya** meterials

**J.B. SUPER MARKET**
**196E, Keyzer Street,**
**Colombo - 11**
**T.P. 2446696**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்பு விருந்தினரின் ஆசிச்செய்தி

**"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"**

மகாவலி கங்கைக் கரையோரம் கம்பீரமாகக் காட்சியளிக்கும் புனித அந்தோனியார் கல்லூரியில், ஆண்டுதோறும் கலைவிழா ஒன்றுடன் வெளிப்படும் கலைமதிக்கு ஆசிச் செய்தியை எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

எதிர்கால கலங்கரை விளக்காய்த் திகழும் மாணவச் செல்வங்களின் படைப்பாற்றலின் தீபமாக விளங்கும் கலைமதி இக்கல்லூரிக்கோர் வரப்பிரசாதம் என்பதை உணர்கின்றேன். வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டிய இளம் உள்ளங்களின் வாசிப்புணர்வுடன் கூடிய எழுத்தறிவும், கலையுணர்வும் விருட்சமடைய வேண்டுமென விழைகின்றேன். பாரதியின் கூற்றுப்படி "சோம்பல் மிகக் கெடுதி" என்பதையும் "ஒரு மாணவனின் வெற்றி அவனது அயராத உழைப்பிலேயே தங்கியுள்ளது" என்பதையும் நினைவூட்டலாமென எண்ணுகின்றேன்.

"காலம் பொன்னானது கடமை கண்ணானது" என்பதை சிரமேற்கொண்டு இயல், இசை, நாடகம், ஓவியம் போன்ற ஏதோவொரு கலையில் நாட்டத்தை ஏற்படுத்திக் கொள்வது மாணவனின் கடமையாகும். இதனால் நல் ஒழுக்கவிழுமிய சீலர்களாக முன்னேறிச் சென்று வெற்றி முரசு முழங்க ஆசிக்கின்றேன்.

இக்கலைவிழாவின் கதாநாயர்களாகத் திகழும் மாணவர்களையும், வழிநடத்திய அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவரையும் பெருமையுடன் நினைவு கூர்ந்து, சிறப்பு விருந்தினராக அழைத்தமைக்கு நன்றி கூறி வாழ்த்துகின்றேன்.

”கலை விளக்கே,<br>
இயல் வளர்ப்பாய் இசை வளர்ப்பாய்<br>
நாடகமும் வளர்ப்பாய்<br>
எல்லோரும் புகழ்ந்திடுவார்<br>
வாழிய வாழியவே”

திரு.M. செல்வராஜ்<br>
சிறப்பு விருந்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

**Modern Hardware Centre**

MHC

IMPORTERS, DEALERS & STOCKISTS OF IRON AND STEEL

43,ABDUL JABBAR MAWATHA,
COLOMBO 12, SRI LANKA
TEL : 2435468(Hunting)
FAX : +94 11 2431890
E-mail : modern43@sltnet .lk

***N.Ravindran***
**Managing Partner**

WE

**No. 356,1/6, Old Moor Street,**
**Colombo 12.**
**Tel : 2348315 Fax : 2459031**
**Mobile : 0777- 480069**
**E-mail : westernengineers@gmail.com**

WESTERN ENGINEERS

***Importers,Dealers in Hardware,Electricals,Engineering Tools &***
***Bearing's Supliers to Govt., Boards & Corporations.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிறப்பு அதிதியின் ஆசிச்செய்தி

சகல கலைத்துறைகளிலும் முன்னேற்றம் கண்டு வருகின்ற கண்டி, புனிதஅந்தோனியார் கல்லூரியின் தமிழ்க்கலாமன்றம் நம் தாய்த்தமிழை பறைசாற்றும் விதமாக ஒழுங்குசெய்கின்ற கலைவிழா வெற்றியடைய வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழை விஞ்சியும் சில மொழிகள் இன்று போட்டிபோடும் காலத்திலும் பண்பின் உறைவிடம், கலைகளின் கூடம் நம் தமிழ் என நிரூபிக்கும் வகையில் அந்தோனியர்களின் இந்த ஏற்பாடானது வரவேற்கத்தக்கதாகும். நாளைய நாயகர்களாகிய இன்றைய மாணவர்களிடையே திட்டமிடல் தலைமைத்துவம், முயற்சி, மற்றும் கூட்டுறவு எனும் நற்பண்புகள் வளர இத்தகைய மன்றங்கள், விழாக்கள் என்பன பெரிதும் உறுதுணையாக அமைகின்றன. அத்துடன் கலை இலக்கிய உணர்வுகள் மாணவர் மனதினைப் பண்படுத்தி அவர்களின் எதிர்கால இலட்சியம், குறிக்கோள் என்பவற்றை வெற்றிகரமாக அடைய உதவுகின்றது.

சமூகத்திற்கு, ஏன் இந்த வையகத்திற்கே நன்மை பயக்கின்ற வகையில் அமையும் இவ்விழாவினை ஏற்பாடு செய்த மன்ற ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஒழுங்கமைப்பாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்களது இம்முயற்சியானது எதிர்காலச் சந்ததியினருக்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இர.மோகன் நாகலிங்கம்,
(அகில இலங்கை சமாதான நீதவான்)



**கல்வியின் இலட்சியம் மதிப்பெண் அல்ல. அறிவு நலம் பெறுவதே ஆகும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

P.Pathmanathan
*Proprietor*

# R.V. MEDICALS

Dealers in Fancy Goods,Gift,Foot Wear,
Pharmacy & Photo Copy Services



Tel : 052-2269310

No.53/1 A, St.
Margrets Bazaar,
Udapussellawa.


# ANTHON VALLIPURAM & P.PARAMESHWARAN



89 - Batch.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபரின் ஆசிச்செய்தி

பாரெங்கும் புகழ்பரப்பி, கல்விக் கடலாய் விளங்கும் கண்டி புனித அந்தோனியார் கல்லூரியின் தமிழ்கலாமன்றம் வருடந்தோறும் நடாத்தி வரும் கலைவிழாவிற்கும், அதனோடு இணைந்து வெளியிடப்படும் கலைமதி சஞ்சிகைக்கும் எனது உளமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எமது கல்லூரியின் வரலாற்றிலே பெரும் எதிர்பார்ப்புடன் கொண்டாடப்படும் இக்கலைவிழா பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது. மாணவர்களின் ஆற்றல்கள், திறமைகள், அவர்களது புத்தாக்கச் சிந்தனைகள் என்பனவற்றை வெளிப்படுத்தும் ஓர் களமாக இக்கலைவிழா அமைந்துள்ளமை விசேட அம்சமாகும்.

நீண்ட இடைவெளிக்குப்பின்னர் வெளிவரும் எமது கலாமன்றத்தின் சஞ்சிகையாம் கலைமதியும் வெகு சிறப்புடன் வெளியிடப்படுவது இவ்விழாவிற்கு மெருகூட்டும் ஓர் முக்கிய நிகழ்வாகும். ஆக்கங்களை வெளிக்கொணர்ந்த மாணவச் செல்வங்கள், அவர்களை வழிநடாத்திய ஆசான்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன்.

எமது கல்லூரியின் பாரம்பரியத்திற்கமைவாக கல்லூரியின் முன்னேற்றத்திலும், அதன் வளர்ச்சியிலும் எப்போதும் எமக்கு உதவிபுரிகின்ற பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் நன்றியுடன் நினைவுகூர்கின்றேன். கடந்த காலங்களில் இங்கு சேவையாற்றிய அதிபர்கள், பிரதி அதிபர்கள், அன்புக்குரிய ஆசிரியர்கள், அனைவரையும் நினைவுகூர்வதோடு கலைவிழா சிறப்புடன் இடம்பெற உளமாற வாழ்த்துகின்றேன்..

'வாழ்க எமது தமிழ்க்கலைமன்றம்
வளர்க அதன் தமிழ்த்தொண்டு'

நன்றியுடன்,
திரு.அ.சிறில்மார்ட்டினஸ்,
இலங்கை அதிபர் சேவை தரம் 1
Dip. in. Management



**வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்கும் திறமை கல்வியேயாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

****With Best Compliments From****

# NEW ELGO CHEMIST


**Dispensing Chemist ,Druggist & Grocers.**

267C, Kirula Road,
Narahenpita, Colombo-05.

Telephone :
2368080

---

# P.M.M. MEDICAL



No.84, Ragala Bazaar,
Halgranoya.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM THE DEP. PRINCIPAL


It gives me immense pleasure to pen a few words to the annual publication of the "Kalai Mathi" the souvenir published in view of the Kalai Vizla yet another important function of our school Calendar.

St.Anthony's is the Portal of communal unity and ethnic harmony. The students under the wings of this institution always work hand in hand with each other, Which enhances to foster unity among their brethren. It is quite noteworthy witness the Antonians march forward in all spheres outside the college always maintaining their Antonian identify as the Antonian Fraternity. Every child who enters through the portals of St.Anthony's college behaves and entangles himself in the chain of ethnic unity to strengthen communal harmony. This attitude amongst our students indeed is the pressing need of the hour I am indeed proud to witness this amongst our fraternity.

Last but not least I make this an opportunity to thank the staff and students including the organizing Committee of the Kalai Vizla for all their untiring efforts to stage a colorful and meaningful show while maintaining the hallowed identity of our Alma Meter.

Thank You and God Bless You.

Mrs. Renuka Wijerathne
(Deputy Principal)



**Life doesn't have to be long, though short is worth.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

ALLWIN
CERAMICS

Dealers in Hardware,Sanitary Ware,
Bathroom Accessories,
Hot/Cold(PVC) Pipes & Fittings
Wall/Floor Decorative Tiles etc..

No.25,King's Street,
Kandy.
Tel 081 - 2203631, 081 - 4944700

TOPSTEEL
(PVT) LIMITED

IMPORTERS, GENERAL HARDWARE
MERCHANT & BUILDING MATERIALS

DEALERS FOR LANKA
TOPSTEEL

No.450,454,Old Moor Street,
Colombo-12.
Sri Lanka.

Tele : 2330099
2434063
2348636
Fax : 2470360

S.P.Sunthar
Proprietor

MAYURA TRAVELS

The Reliable Way to Travel

AGENTS FOR ALL AIR LINES

For competitive,rates,reliable & a courteous
service, even others talk about

No. 8/1/2,3, BRISTOL STREET,
COLOMBO - 01

TEL : 2392651,2392652
FAX : 2392652
MOBILE : 0777- 879130

E - Mail - mayura_trvis@yahoo.com

EMCO

S.M. DEVA

Dealers in Textiles
Wholesales & Retail

# 57/11, Keyzer Street,
Ameen Trade Centre,
Colombo - 11.
Tel : 4 - 712832

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM THE DEPUTY PRINCIPAL

Once again the most anticipated event Kalai Villa 2010 is to be staged. Hence I wish to congratulate all of you who are involved in organizing this color full celebration. As part of the Antonian fraternity. We all have we all have share in this multi cultural activity after lapse of 2 years,

So let us join hands to not only Participate but appreciate the toil of each and every one involved in the success of this event.

Ms .S.P.Senarathne,
(Deputy Principal)

**Don't. be afraid your life will end, be afraid that it will never begin.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

# Batch of 2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பிரிவு பகுதித் தலைவியின் ஆசிச் செய்தி

மலையகத்தின் தலை நகரில் அறிவொளி பரப்பி வரும் புனித அந்தோனியார் கல்லூரியின் தமிழ்க் கலாமன்றம் தமிழன்னைக்கு தான் சூட்டிய ஆரத்திற்கு புது மணம் சேர்க்கும் நன்னாள் இது. இந்நாளில் இளம் மாணாக்கர் படைத்திருக்கும் கலைமதிக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

மூவேந்தர் போற்றிக் காத்த முத்தமிழால் எல்லோரையும் மகிழ வைக்கும் இம்மன்றத்திற்கு வித்தூன்றி, உரமிட்டு, வேருக்கு நீர்ப் பாய்ச்சி, விருட்சமாய் வளர்த்தெடுத்த அனைவருக்கும் முதற் கண் " நன்றி " கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இம்முறையும், மாணவர்களது அயராத முயற்சியைப் பாராட்டுகின்றேன். தடைகள் பல வந்த போதும், சவால்களை எதிர் கொண்டு மாணவர்கள் நமது கலை ஆக்கத் திறன்களை வெளிக் கொணர்வது வரவேற்கக் கூடியதாகும்.

கல்வி என்பது பாடங்களை மட்டும் கற்பதல்ல. துணையாக இருக்கும் கலைகளையும் இணையாய் மதித்து கற்பது தான் கல்வி. அதற்கு சான்று பகர்கின்றது எம் கலைவிழா.

முத் தமிழே, மூத்த தமிழே, மூவேந்தர் கால முதிர்ந்த தமிழே உன்னை வளர்த்து உழைக்கும் மாணவர்களுக்கு நல்லாசிகள் உரித்தாகட்டும்.

கலைமதியின் வாசனை அது என்றும் வீசட்டும். ஔவையின் நாவில் பிறந்த கௌரவத் தமிழே, நீ வாழ, நாம் வாழ என்றும் நிலைத்திருக்கும் தர்மம் வாழ வாழ்த்துகின்றேன்.

**"தமிழன்னை தான் போற்றி**
**தமிழ் எங்கள் உயிர் போற்றி"**

செல்வி. M.T.சின்னப்பா
தமிழ்ப்பிரிவு பகுதித் தலைவி

**இன்சொல்லே நாவினைப் படைத்த இறைவனின் பெருமையை உயர்த்துகிறது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***




Mrs.K.Radakrishnan
43/1,Lady McClillum's Drive
Nuwara Eliya

Tel : 052-2223051
072-7172668
Fax : 052-2234033
E-mail : kuhananthiny@gmail.com

Rasheediya
**ENTERPRISES**

IMPORTERS OF BRAND NEW
& RECONDITIONED MOTOR VEHICLES
PAT EXCHANGE LEASING & FINANCING



**M.R.SAMSUDEEN**
**Partner**

No.105, King Street,
Matale, Sri Lanka,
Cell : 0777 805930
066-2222198
Fax : 066-22223535

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்திலிருந்து வீழ்ந்த சில துளிகள்......

"அமுதே தமிழே அழகிய மொழியே எனதுயிரே

சுகம் தரும் தமிழிசைப்பா

சுவையொடு கவிதைகள் தா

தமிழே நாளும் நீ பாடு"

தூய அந்தோனியாரின் நாமத்தைத் தாங்கி நிற்கும் எமது கல்லூரியின் தமிழ்க்கலா மன்றக் கலைமதியானது, ஆயிரமாயிரம் நெஞ்சலைகளைத் தாங்கி வரும் மாணவ உள்ளங்களின் பிரதிபலிப்பாகும். இப்பேர்பட்ட கலைமதிக்கு எனது ஆசிச் செய்தியை வழங்குவதில் களியுவகையடைகின்றேன்.

தர்மத்திற்கும் அதர்மத்திற்குமிடையே இடம்பெறும் போராட்டத்தின் மத்தியில், இன்று முத்தமிழுக்கு விழா எடுக்கின்றோமென்றால் எம்மவர்க்கு இஃதோர் பெரும் சவாலெனக் கருதுகின்றேன். இச்சந்தர்ப்பத்தில் "அரிது அரிது மானிடராதல் அரிது" என்ற ஔவைப்பிராட்டியின் வாசகத்தை ஒரு கணம் எண்ணிப் பார்க்கின்றேன். அரிதான மனித பிறவியை கொடையாகப் பெற்ற நாம், அரிய பல செயல்களை செய்ய வேண்டும். இவ்வரிய செயல்களைப் பெற ஆய கலைகள் அறுபத்து நான்கில் ஒன்றையேனும் கற்று பண்புடையோனாக மாற வேண்டும்.

பாரம்பரியத்திலிருந்தே பைந்தமிழில் பண்ணிசைத்து பாடி இன்புற்ற தமிழர்கள் இசைத்திறனும், மொழிப்புலமையும் இறையுணர்வும் கொண்ட மேதைகளாக உருவாகினர் என்பதையும் மறக்க முடியாது. எம்மத்தியிலே ஒளிவிளக்காய்த் திகழும் மாணவர்கள், கலைஞர்கள் என்ற பட்டத்தை மறைமுகமாகப் பெற்றுக் கொள்ளும் நாளைய தலைவர்களாவர். தமது கலை வெளிப்பாட்டை அரங்கேற்றி தமிழ்க் கலையைக் கட்டிக்காப்பதில் முன்னின்றுழைக்கும் இளம் உள்ளங்களுக்கு எம்மாலான ஒத்துழைப்பை சிறப்பாக வழங்குதல் வேண்டும்.

கத்தோலிக்க திருச்சபையின் தற்போதைய தலைவர் திருத்தந்தை பதினாறாம் ஆசீர்வாதப்பர் பன்னாட்டுக் கலைஞர்களிடையே வத்திக்கானில் சந்தித்து உரையாற்றிய போது கூறிய விடயத்தைச் சுட்டிக்காட்டலாமென நினைக்கின்றேன்.

"கலைஞர்கள் உலகில் அழகின் பாதுகாவலர்கள்

அழகின் மேன்மையையும் அதை மனித சமுதாயத்திற்கு

வெளிப்படுத்துவதில் கொண்டுள்ள பொறுப்பையும் உணர்ந்து

கலைஞர்கள் செயற்படல் வேண்டும்" என்றார்


கலைஞர்கள் திடீரெனத் தோன்றுவதில்லை. சிறுவயதிலிருந்தே குடும்பம், பாடசாலை, கலாசாலை, பல்கலைக்கழகம் என வியாபித்து உருவாக்கப்படவேண்டியதாகும். இவற்றை உணர வேண்டிய மானிடராகிய நாம் மாணவர்களிடையே நல்லுணர்வுகளை வளர்த்து இயலிசை, நாடகம், ஓவியம் போன்றவற்றில் ஆர்வத்தையும், ஆற்றலையும் ஏற்படுத்தி செயற்பட ஆவண செய்தல் வேண்டும். கல்விப்பணியில் முத்தமிழின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமதியும், கலைவிழாவும் திறம்பட செயலூக்கம் பெற ஒத்துழைத்த அதிபர், ஆசிரியர்கள், பற்றுறுதி கொண்டோர், பழைய மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள், மாணவர்கள் அனைவரையும் நன்றியோடு நினைவு கூருகின்றேன்.

"தமிழே தமிழர்க்குத் தாய்மொழி
தமிழே தெவிட்டாத பக்திமொழி
தமிழே இசைபாடும் இசைமொழி
தமிழே கலைமகளின் முதன்மொழி
தமிழே பக்தித் திருமொழி நண்பா
தேடலில் பக்தித் தமிழ்க்கலையைத் தேடியே பெற்றிடு நாடியே போற்றிடு."

திருமதி. சி. பிறிஸ்கா தேவதாஸன்
தமிழ்க் கலாமன்றப் பெருந்தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவத் தலைவனின் மனங்கனிந்த சில மணிகள்...

"செந்தமிழே ! உயிரே ! நறுந்தேனே
செயலினை மூச்சினை உனக்களித்தேன்"

என்பது பாரதிதாசனின் பறைசாற்றலாகும்.

"தொட்டாலும் கைமணக்கும் ; சொன்னாலும் வாய்மணக்கும் துய்யசேற்றில் நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே" என்றொரு கவிஞன் பாடியுள்ளான்.

கவிஞன் பாரதிதாசனின் கூற்றுப்படி எமது செயலினையும் மூச்சினையும் கல்லூரியின் கலாமன்றக் கலைவிழாவுக்கு அர்ப்பணித்து, தமிழன்னைக்கு சமர்ப்பித்துள்ளோம்.

தொட்டாலும் கைமணக்கும் சொன்னாலும் வாய்மணக்கும் என்பது போல, தூய அந்தோனியார் கல்லூரி மாணவர்கள் தமிழ்ப்பயிராய் தத்தமது கலை அமுதத்துளிகளை அள்ளிப் பிழிந்து வடித்து சக்கரையும் தேனுமாகப் படைத்துள்ளனர்.

எமது தமிழ்க்கலா மன்றம் நவீன தொழில் நுட்பப்பாணியில் நடைமுறைக்கு ஒட்டிய வகையில் தன்னை வளர்த்துக் கொண்டுள்ளது. இயலிசை நாடகம் எனும் முத்தமிழ் வித்தைகளை தனக்கேயுரிய பாணியில் மேடையேற்றியுள்ளது.

இக்கலைவிழாவிற்கு சிறந்த வழிகாட்டியாகவும் ஒத்துழைப்பாகவும் இருந்த அதிபர், எமது கல்லூரி முன்னாள் ஆசிரியராக, பிரதியதிபராக, மேலதிக வலயக் கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய திருமதி. இ.சிவரடனம், கல்லூரி பிரதியதிபர், பகுதித் தலைவர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் நன்றியுடன் எண்ணிப் பார்க்கின்றேன்.

"எம் கல்லூரியின் தமிழ்க்கலை வாசனை
தரணியெங்கும் பரவட்டும்"

பைந்தமிழ் மைந்தன்
P.லக்ஷிதன்
மாணவத் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டறிக்கை 2010

உலக மரபுரிமை நகர் ...... மலையகத் தலைநகர் கண்டி மாநகர்தனிலே தன்னகரில்லா தனிப்பெருமையுடன் தலைநிமிர்ந்து தமிழ் மணம் வீசும் மங்காப்புகழ் கலையகம் புனித அந்தோனியார் கல்லூரியின் தமிழ்க்கலாமன்றம் தமிழ் அன்னைக்கு மகுடம் சூட்டி கலைவிழா எடுக்கும் இச்சுந்தர வேளையில் மன்றத்தின் கடந்த நிகழ்வுகளை நினைவலைகளாக உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன் ஆண்டறிக்கையாக .

பதினைந்து தசாப்தங்களைத் தாண்டி வீறு நடைபோடும் எமது அந்தோனியார் கலையகத்தின், தமிழ்க்கலாமன்றம் தனது நாற்பத்தோறாவது விழாவை இயலால், இசையால், நாடகத்தால் அரங்கேற்றம் செய்கின்றது என்பதை பெருமையுடன் நினைவு கூர்கின்றேன்.

எமது கலாமன்றத்திற்கு வயது நாற்பத்தொன்றானாலும் 2003ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிகழ்வுகள் கல்லூரியின் வருடாந்த செயற்பாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்திற்று. அது எமது கலைவிழா ஒன்றையும் தவறவிடச் செய்து விட்டது என்பதை துயருடன் குறிப்பிடுவதுடன், இன்றைய நிகழ்வு 2010க்குரிய கலைவிழாவாகும் என்பதையும் ஞாபகமூட்டுகின்றேன். நடப்பாண்டு கலைவிழா நாட்குறிப்பேட்டில் குறித்தபடி நடைபெறும் என்பதை அறியத்தருவதில் பெருமிதம் அடைகின்றேன். தொடர்ந்து .........

இன்றைய கலைவிழா களை கட்டுவதற்கு காரண கர்த்தாவாகவும், கல்லூரிச் செயற்பாடுகளுக்கு வழிகாட்டியாகவும் எம்மோடு எப்போதும் துணைநிற்கும் மதிப்பிற்குரிய பிதா அதிபர் "டைட்டஸ் ரொட்ரிகோ" உட்பட விழாவின் நாயகரான மத்திய மாகாண சபைக் கல்வியமைச்சர் கௌரவ அனூஷியா சிவராசா அவர்களே ! கௌரவ விருந்தினர்களாக விழாவிற்கு பெருமை சேர்க்கும் எமது முன்னாள் தமிழ்ப்பிரிவுத் தலைவியும் கண்டி வலய கல்விப்பணிமனை மேலதிகப் பணிப்பாளருமான இந்திரா சிவரட்ணம் அவர்களே ! தற்போதைய மத்திய மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் சதீஸ் அவர்களே ! வலயக் கல்விப் பணிமனை மேலதிகப் பணிப்பாளர் திரு. இராசையா அவர்களே ! மேலும் விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக வீற்றிருக்கும் திரு. நமச்சிவாயம் பிள்ளை , திரு. மோகன் நாகலிங்கம் , திரு.செல்வராஜ் அவர்களே ! தாங்கள் அனைவரினதும் பெருவரவு ஆக்கமும், ஊக்கமும் கொண்ட எம் மாணவச் செல்வங்களுக்கு புத்துணர்வையும், புதுப்பொழிவையும் அளித்துள்ளது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை என்று கூறி உங்கள் வரவு நல்வரவாகுக என்று வரவேற்றுக் கொள்கின்றேன்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் - உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு" (குறள்)

என்ற பொதுமறையின் பொய்யா மொழிக்கொப்ப சென்ற 2008ம் வருட கலைவிழாவைச் சிறப்பிக்க வருகை தநது உதவிகளை வழங்கிய பிரதம அதிதி நம் பழைய மாணவர் திரு. அன்ரன் வள்ளிபுரம் அவர்களையும் சிறப்பு அதிதிகளாக சபை அமர்ந்த ஜனாப் M.S. யூசுப், ஜனாப் ரமீஸ் மொஹிமீன் ஜனாப் M.அஷாட், திரு. ரவிகிருஷ்ணா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. S.A. சரவணன் ஆகியோருக்கும் நன்றிகளை முன்மொழிவதுடன், இக் கலைவிழா சிறப்புற அமைய பலவழிகளிலும் அயராது உழைத்த தமிழ்ப் பிரிவு தலைவி செல்வி T.சின்னப்பா அவர்களுக்கும் எமது நன்றி கலந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமிதமடைகிறோம். கடந்து சென்ற ஈராண்டுகளில் தமிழ்ப்பிரிவின் தலைமைத்துவத்தை ஏற்று எம்மை சீராக வழி நடாத்தும் பிரதி அதிபர் திரு. ' சிறில மாட்டினஸ்' எதிலும் சமநிலை கண்டு எம்மன்றத்திற்கு போஷகராக இருந்து போசிப்பது என்றும் உவப்பிற்குரிய விடயம் எம்மோடு புதிதாக திருமதி R.புஸ்பலதா ஆசிரியை இணைந்து கொண்டமை எம்மாணவர்களுக்கு புத்தூக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் எனக் கூறி அவரையும் எம்மன்றம் வரவேற்றுக் கொள்கின்றது.

"தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத்தமிழ்
இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

" செம்மொழியாம் தமிழுக்கு தொண்டு செய்து அதனை வளர்ப்பாருக்கு இறப்பில்லை" என்பது புரட்சிக்கவியின் விதி. இவ்விதியின் வழியில் எம்மாணவர்கள் பயணித்து தமிழ் வளர்க்க இயல், இசை, நாடகப் போட்டிகளில் திறமை காட்டி சாதனை படைப்பது எம் கலாமன்றத்திற்கும் என்றும் புதுமையல்ல. அவ்வகையில் வலய, மாகாண, தேசிய மட்டங்களில் பங்கு பற்றி ஸ்தானங்களை ஈட்டிக் கொள்வதில் என்றும் பின்னிற்பதில்லை.

சென்ற வருடம் தமிழ்த்தினம் போட்டியில் கவிதையாக்கத்தில் வலயமட்டப் போட்டியில் தரம் 11ஐச் சேர்ந்த செல்வன் செல்வச்சந்திரன் முதல் இடம் பெற்றமையும், விவாதப் போட்டியில் விஞ்ஞானப்பிரிவு உயர்தர மாணவர்கள் B. மிதுன திரிபுவன்
K. ஸ்ரீ ரங்கன்
S. இதர்ஷன் ஆகியோர்
தமது சொல் வளத்தால் வலய, மாகாண மட்டங்களில் முதல் இடத்தையும் தேசிய மட்டத்தில் நான்காம் இடம் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர். அவர்களைப் பயிற்றுவித்த ஆசான்களுக்கு எம்மன்றம் நன்றிகளை சமர்ப்பணம் செய்கின்றது. மேலும் சமூகக் கல்வி பொது அறிவு கண்டி வலய மட்டப் போட்டியில் தரம் 7 மாணவன் R. மதூசன் 2ம் இடத்தையும் தரம் 9 மாணவன் T.பென் ரொஸ்ன் 1ம் இடத்தையும் தரம் 10 மாணவன் M.N.M. சம்ரி 3ம் இடத்தையும் பெற்று இவர்கள் அனைவரும் மாகாண மட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று அகில இலங்கை மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளமை தமிழ் மன்றத்திற்கு பெருமை சேர்த்துள்ளது. இவர்களுக்கு பயிற்சிகளை வழங்கிய ஜனாபா ஹுசைமா ஆசிரியையை மன்றம் நன்றியுடன் நோக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கேடில் விழச் செல்வம் ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை" (குறள்)

மாண்புறு கல்வியை மாசற வழங்கும் அந்தோனியார் கலையகத்தின் தமிழ்ப்பிரிவின் சாதனைகள் மாணவச் செல்வங்களின் பெறுபேற்று முடிவுகள் பறை சாற்றுகின்றன.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு 2009ல் நாற்பது மாணவர்கள் தோற்றி 11 மாணவர்கள் சித்தி பெற்றமையும் 2010ல் நாற்பது பேர் தோற்றி 12 மாணவர்கள் சித்தி பெற்றமையும் நினைவு கூரத்தக்கது. 2009ல் அதிகூடிய புள்ளி 169ஐ செல்வன் U.முஹம்மட் அர்சாட் அவர்களும் 2010ல் அதிகூடிய புள்ளி 175ஐ செல்வன்.R.வெரோசன் பெற்றுத் தந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

க.பொ.த (சாதாரண) பரீட்சைக்கு 2009ல் தோற்றிய நாற்பத்தைந்து மாணவர்களில் நாற்பது பேர் உயர்தரம் படிப்பதற்கு தகைமையைப் பெற்றதும் அதே வேளை ஆங்கில மொழியில் தோற்றிய தமிழ் மாணவர்கள் அனைவரும் உயர்தரத்திற்கான தகைமை பெற்றமை எமது மாணவர்களின் கல்வி மீதான அபரிதமான ஈடுபாட்டைக் காட்டுகின்றது. மேலும் க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் 2009ல் கணிதப் பிரிவினில் தோற்றிய பதினாறு மாணவர்களில் 31.3% மாணவர்களும் விஞ்ஞான பிரிவினில் தோற்றிய 05மாணவர்களில் 60% மாணவர்களும் வணிகப் பிரிவில் தோற்றிய 26 மாணவர்களில் 76.9%மாணவர்களும் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கான தகைமையைப் பெற்றனர்.

அடுத்து வந்த 2010ம் வருட பெறுபேற்றில் கணித பிரிவில் தோற்றிய 14 மாணவர்களில் 14.3%மாணவர்களும் விஞ்ஞானப் பிரிவில் தோற்றிய 23 மாணவர்களில் 34.8% மாணவர்களும் வணிகப் பிரிவில் தோற்றிய 41 மாணவர்களில் 48.8% மாணவர்களும் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கான தகைமை பெற்றமை இங்கு சபைப்படுத்த வேண்டிய விடயமாகும்.

மேலும், எமது மாணவர்களின் ஆளுமையில் ஆதிக்கம் செலுத்தும் இணைப்பாடச் செயற்பாடுகளின் ஈடுபாடு பற்றியும் இங்கு இயம்புவது விட்டு விடக் கூடியதொன்றல்ல. அவ்வகையில் பாடசாலை விளையாட்டுக் குழுக்களில் முக்கியமாக கிரிக்கட்டில் தரம் 13ஐச் சேர்ந்த மாணவன் நடராஜா கேசவன், ரகர் குழுவில் தரம் 13 வணிகப் பிரிவு மாணவர்கள் ரொஷான் ரோச், தன்சதையான் இடம் பிடித்திருப்பது விஷேட அம்சமாகும். அத்துடன் தரம் 10 மாணவன் J.ஜெரால்ட் நவீன் நீளம்பாய்தல் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றமை அதேவகுப்பு மாணவன் சனோஜன் தேசிய மட்டத்தில் உயரம் பாய்தலில் முதலிடம் பெற்றமையும் அதே வகுப்பு மாணவன் சமீர் அஹமட் (Kik Boxing) மாவட்ட மட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றமையும் மன்றத்திற்கு பெருமை தருகின்றது.

தமிழ்ப்பிரிவின் ஈராண்டு நிகழ்வுகளின் வரலாற்றுச் சுருக்கங்கள் அவ்வாறிருக்க எமது அந்தோனியார் கலையகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாதும் ஊரே யாவரும் கேளீர்" எனும் மரபு மொழிக்கு அர்த்தம் சேர்ப்பது போல்,

பல்லின, மத, மொழி, கலாசாரப் பாரம்பரியங்களைக் கொண்ட இக்கலையகம் வேற்றுமையில் ஒற்றுமை காணும் தத்துவத்திற்கு தனித்துவமாக நின்று பாருக்கு பறைசாட்டுகின்றது. மேலும் மனிதத்துவத்தையும், பொதுமைப்பாட்டையும் தன்னகத்தே கொண்டு மாணவர்களுக்கு வழிகாட்டும் இக்கல்லூரியின் செயற்பாடுகள் அனைத்தும் மற்றவர்களுக்கு சிறந்த முன்மாதிரியாகும்.

தமிழ் மொழி மூல மாணாக்கரின் கலையுணர்வுகளை வெளிக்காட்டும் இவ்விழா சிறக்கவும், அதற்கு தடம் அமைத்துக் கொடுத்த கல்லூரி அதிபர் கௌரவ டைட்டஸ் ரொட்ரிகோ அவர்களே! தமிழ்ப்பிரிவு பிரதி அதிபர் மதிப்பிற்குரிய திரு.சிறில் மாட்டினஸ் அவர்களே! ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு பயிற்சி வழங்க காலத்தையும், களத்தையும் பெற்றுத் தந்த பகுதித் தலைவி திருமதி. ஆன் அவர்களே! எமது கலைப்பணி தொடர கை கொடுத்துதவிய எமது ஆசிரிய பெருந்தகைகளே! எம்மோடு எப்போதும் இணைந்திருக்கும் பழைய மாணவர்களே! மாணவ மணிகளே! கலை விழா களைகட்ட உதவிய விளம்பரதாரர்களே! பயிற்றுவிப்பாளர்களே! நலன் விரும்பிகளே! கல்வி சாரா ஊழியர்களே! சளைக்காமல், சலிக்காமல் ஒத்துழைக்கும் பெற்றோர்களே! உங்கள் அனைவருக்கும் பலகோடி நன்றிகளை தமிழ்க்கலாமன்றம் சமர்ப்பணம் செய்கின்றது.

நன்றி கூற எவரேனும் தவறி விட்டால்
எமதுள்ளமதில் நிலை நிறுத்தி நன்றி நவில்கின்றோம்.

"குறைகளில் மாசெனக் கொள்ளாது மறந்திடுவீர்
நிறைதனை மறைக்காது பிறர் கேட்க-
பறைசாற்றும் பண்புடையீர் எனும் வீராப்பில்
விழாவினை அரங்கேற்றுகின்றோம்"

நினைத்திடுவோம் நன்றியுடன் உடலால், உள்ளத்தால், அன்பளிப்பால் உதவிக்கரம் நீட்டிய அனைவருக்கும் நிகழாண்டில் மீண்டுமொரு கலை விழாவுக்கு வாழ்த்துக்கள் கூறியவனாக.


திரு.I.U.A.கபூர்
கௌரவ செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW CENTRAL HARDWARES

General Hardware Merchants & Estate Suppliers
Dealers in Power Tools,Engineering Tools, Sanitary ware,
Garden Shade Netting & Equipment, Bolts & Nuts.





No.39,Colombo Street,
Kandy - Sri Lanka.

Tel : 081-2223242
Fax : 081-2234103
Hotline : 077-3526626
Mobile : 077-7842457
E-mail : prasansel@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ செயலாளரின் சித்தத்தில் சில முத்துக்கள்

உலக மணிமேடையில் தமிழெனும் தீபம் சுடர்விட்டெறிந்து கொண்டிருக்கும் தருணத்தில், மார்தட்டித் தமிழ் முழக்கம் செய்திட நம் கலைவிழா ஒரு மார்க்கமாய் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்த்தாய் தன்னிலை தவறித்தத்தளித்த காலம் கரைந்து, தரணியில் வீறுநடை போடும் வேளை விரைகிறது. அப்பயணத்தில் நாம் ஒரு மைல் கல்லாய் இவ்விழாவை விமர்சையாக படைத்துள்ளதையிட்டு பேருவகை அடைகின்றேன்.

அகரம் கொண்டு சிகரம் படைத்திடும் அந்தோனியின் புதல்வர்கள் இனிதே ஒழுங்கமைத்திட்ட கலைவிழாவில் பக்கபலமாக நின்று தக்கதுணை சேர்த்த அனைத்து உள்ளங்களுக்கும்,

இக் 'கலைமதி' எனும் பொக்கிஷ ஏடு உங்கள் கரங்களில் தவழ்ந்திட எங்கள் உழைப்பில் பங்கெடுத்த நெஞ்சங்களுக்கும்,

உபயகரம் நீட்டி எம் விஜய கரத்திற்கு வீரம் சேர்த்திட்ட இதயங்களுக்கும்,

தேன் மதுரத்தாலாட்டில் பைந்தமிழன்னை மடியினில் அயர்ந்திடும் பாலகன் என்ற ரீதியில் என் நன்றியுணர்வினை எழுத்துருவில் வடிக்கின்றேன்.

எங்கள் பயணம் மென்மேலும் தொடர உங்கள் ஆசிர்வாதங்களை என்றென்றும் எதிர்ப்பார்க்கின்றோம்

**எங்கள் வாழ்வும்**
**எங்கள் வளமும்**
**மங்காத் தமிழென்று**
**சங்கே முழங்கு**

பைந்தமிழ் மைந்தன்,
எஸ். மோபிர்சாந்த்.
மாணவ செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியரின் இதழ்களிலிருந்து ..........

" எம் முன் எத்தனை அம்புகள் வீழ்ந்தாலென்ன
எத்தனை பேர் வீறு நடை போட்டாலென்ன
எம்மையும் வீழ்த்த எதை செய்தாலுமென்ன
வீழ்வது நாமானாலும்
வாழ்வது தமிழாகட்டும்"

தடைகளைத் தாண்டி தமிழுக்கு தன்னாளான தனிப்பெரும் சேவையை வழங்க காத்திருக்கும் எம் கல்லூரி மைந்தர்களுக்கு இக் 'கலைவிழா' கலைக்கோர் மகுடம் சூட்டட்டும்.

க/புனித அந்தோனியார் கல்லூரியின் வருடந்தோறும் நடைபெறும் தமிழன்னைக்கு மகுடம் சூட்டும் கலைவிழாவில் கலை நிகழ்வுகள் கண்களுக்கு விருந்தளித்து, வானவில்லாய் மறைந்த போதும், தேயாத முழு நிலவாய் எம் மனதிற்குள் நின்று அவ்வெண்ண ஓட்டங்களை எம்முள் அசைபோட்டு கனிய வைக்கும் 'கலைமதி' சஞ்சிகை சிறப்புற,


அனுமதி வழங்கிய அதிபர் அவர்களே.....!

பெருமையடைய செய்த பெருந்தலைவரே .......!

ஆக்கங்கள் வழங்கி எம்மை ஆட்கொண்ட சின்னஞ்சிறு கலைஞர்களே, எம்முள் எமக்காய் உழைத்த எம் ஆசான்களே........! விறுவிறுவென விளம்பரங்களை வாரிய வள்ளல்களே..... திரைமறைவில் திரல்களாய் திகழ்ந்த இனிய நெஞ்சங்களே....... தலைவர்களாய் தமக்குள் தலைமை தாங்கி 'தொகுப்பு' முதல் அச்சில் வார்த்த பிரதிவரை எம்மோடு நின்ற அன்பு நெஞ்சங்களே......

இதையும் தாண்டி எம்மை ஆட்சி செய்து வழிநடத்திய என் இயேசு பிரானே இதழாசிரியராய் இதழ்களால் கூற முடியாத எண்ணற்ற நன்றிகளை வாரி இத்தாளில் விதைக்கின்றேன். இவை மீண்டும் பூக்கட்டும் 2011ல் நல்ல மலர்களாய்.

என்றும் அன்புடன்,
'ரத்னதீபம்' S.F வசந்தன். J.P
(ஊடகவியலாளர்) இதழாசிரியர
கண்டி ரத்னதீபம்
அமைப்பின் ஆறுமுக நாவலர்
மன்றத்தின் கௌவர தலைவர்
க/புனித அந்தோனியார் கல்லூரி
கண்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ இதழாசிரியரின் எண்ணத் துளிகள்

**சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்**
**செல்வங்கள் யாவும் கொணர்ந்து இங்கு சேர்ப்பீர் !**

கலைமதி' எனும் இச்சஞ்சிகையை கலை அன்னையின் மடியில் சமர்ப்பிக்க எட்டுத்திக்கும் சென்று விளம்பரங்களை மட்டுமே ஏந்தி வராது, புனித அந்தோனியார் கல்லூரியினின்றும் மணி முத்துக்களாய்ச் சிதறிச் சென்று எட்டுத்திக்கும் மின்னொளி வீசி தலை நிமிர்ந்து நிற்கும் பழைய மாணவர்களின் ஒத்துழைப்பையும், பழைய ஆசிரியர்களின் பெருந்துணையையும் ஒருங்கே பெற்று இக்கலைமதிக்கு பெரும் மதிப்பை பெற்றுத்தந்துள்ளது எனக் கூறின் மிகையாகாது.

தமிழின் வளம் பெருக, இம்மலருக்கு மணம் சேர்த்த பெற்றோர்கள், நலன் விரும்பிகள் நல்கிய உதவிகள், நல்தரத்தை என்றும் விரும்பும், நாடும் வண.பிதா அதிபர் அவர்களின் ஊக்குவிப்பு, கல்லூரி ஆசிரியர்களின் வழிக்காட்டல், சகோதர மாணவர்களின் தமிழ்த்திறமையையும், தமிழ்ப்பற்றையும் வெளிக்கொணர்ந்த ஆக்கங்கள் இந்த மலருக்கு ஒளியேற்றி பிரகாசிக்க செய்திருக்கின்றது. பழைய ஆசிரியர்கள் நல்கிய மனமுவந்த ஆசிகளும் உதவிகளும் எம் நெஞ்சம் என்றும் மறவா.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும் என பாரதியார் கூறியதுபோல புனித அந்தோனியார் கல்லூரியின் புகழ் மணம் உலகெங்கும் பரவ 'கலைமதி' மணம் பரவ உதவிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகள்.

பைந்தமிழ் மைந்தர்
பி.அஜே
மாணவ இதழாசிரியர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாளரின் ஆசிச்செய்தி

இந்து சமுத்திரத்தின் முத்தாம் இலங்கைத் தீவின் மத்திய மாகாணத்தில் கண்டி மாநகரில் மகாவலிக்கரையிலே தலைநிமிர்ந்து நிற்கும், இன,மத,மொழி பேதமின்றி எல்லோரையும் அரவணைத்து வளர்த்தெடுக்கும் கல்லூரியாம் கண்டி புனித அந்தோனியார் கல்லூரி. எமது கல்லூரியின் தமிழ்க்கலாமன்றம் நடாத்தும் கலைவிழாவில் "கலைமதி" சஞ்சிகை வெளிவருவதனையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தின் முன்தோன்றிய மூத்தமொழியான செம்மொழியாம் தமிழ்மொழியை,அதன் பெருமையை வெளிக்கொண்டு வந்து இயல், இசை,நாடகம் என்னும் முத்தமிழையும் வளர்த்தெடுக்கும் நோக்கில் எமது கல்லூரியில் ஆண்டாண்டு காலமாக இவ்விழாவினை எடுத்து வருகின்றோம்.இந்த வகையில் சென்ற ஆண்டிற்கான கலைவிழா இவ்வாண்டு நிகழ்வதனையிட்டு பெருமையடைவதோடு இக் "கலைமதி"சிறப்பாக வெளிவர நல்லாசிகளை கூறிக்கொள்கின்றேன்.

மேலும் இக்கலைவிழா சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் பொருளாளர் என்ற வகையில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழின் புகழ்!!

கு.உபேந்திரன்
மன்றப் பொருளாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ பொருளாளரின் இதயத்தில் எழுந்த உதய நாதங்கள்

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய மூத்த தமிழ்" எனத் தொன்மைப் புகழ் கொண்ட தமிழ்மொழியை, "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்" என்ற புதுமைக் கவிஞன் பாரதியின் கவி வாக்கைப் பொன் போல் போற்றி கலங்கரை விளக்காய் ஒளிபரப்பிக் கொண்டிருக்கும் தெய்வத் தன்மையின் உறைவிடமாகத் திகழும் புனித அந்தோனியார் கல்லூரியின் தமிழ்க் கலாமன்றம் ஆண்டுதோறும் அருந்தமிழை உயிராகக் கருதி முத்தமிழ் கலைகள் ஒளிர தமிழன்னைக்கு விழா எடுத்து வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் நவில்வதோடு மன்றத்தின் முத்தமிழ் விழா இனிதே சிறக்க, இறைவனை வேண்டிக்கொள்கின்றேன்.

" தமிழே அமுதே
அழகிய மொழியே
எனதுயிரே"

என்ற உணர்வுடன் மாத்திரமல்லாது தமிழ் மன்றப் பெருவிழாவுக்கு அகமும் முகமும் மலர்ந்து கலைவிழா சிறக்க அன்பளிப்புக்களையும் நன்கொடைகளையும் வாரி வழங்கிய கல்லூரியின் முன்னாள் சகோதரர்களுக்கும் பெற்றோர்களுக்கும் வணிகப் பிரமுகர்களுக்கும் அன்புள்ளங்களுக்கும் இதயத்து நன்றிகளை இணையிலா உவகையுடன் இருகரம் கூப்பித் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"தமிழ் காப்போம் எங்கெங்கும் ஓங்க"

பைந்தமிழ் மைந்தன்,
பி. ரொஷான் ரோச்
மாணவ பொருளாளர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

# OLD BOYS

## W.R.SUGANTHAN
## B.SENTHILKUMAR
## R.VIVEKANANTHAN



---

Abhishek.U
Ahamed M.K.R.
Ahamed M.S.S
Ajith P
Alles K
Andrew P.C
Anjo C.S.
Dhanushraj K
Dilakson S
inesh P
Dirsohan T
Fazly F.M.M.
Fernando J
Frank J.K.R
Salman M.K.M

Gamini B.G.
Gunasekara N
IForne R.T.L
Jeyatharen M
Kaleel M.A
Kannadasan N
Krithees K
Labrooy C.K
Naweena J.R.G.
Prasad M.D
Priyanthan A.A
Ramakrishnan T.
Ranjan Calistan L
Rikaz M.A.M
Rohan A.R.
Dhanishan

Sadurshan M.D
Sajeewan K
Sanjeewan V.M.S.G
Sachindran I.R.S
Shane Prageeth C.M
Sherly S.M.P.D
Solomons T.C.
Stephan D
Thevathasan B.R
Usman S.M
Usoof U.M.M.M.T
Usoof U
Yuwadarshan C
Zamir M.S.M
Shakir
Shein Roinston

**Class Teacher - S.F.Wasanthan**

## GRADE 10 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க்கலாமன்றச் செயற்குழு 2010

| | | |
|---|---|---|
| **போஷகர்கள்** | - | வணபிதா.டைடஸ் ரொட்ரிகோ (அதிபர்) |
| | - | திரு.சிரில் மார்டினஸ் (தமிழ் பிரிவு அதிபர்) |
| | - | செல்வி. M.T. சின்னப்பா (பகுதித் தலைவர்) |
| **பெருந்தலைவர்** | - | திருமதி. C.P.தேவதாஸன் |
| **உபதலைவர்** | - | திருமதி புஸ்பராணி |
| **கௌரவ செயலாளர்** | - | திரு.I.A.U.கபூர் |
| **உபசெயலாளர்** | - | திரு.A.S.M.பீலிக்ஸ் |
| **பொருளாளர்** | - | திரு.G.உபேந்திரன் |
| **உபபொருளாளர்** | - | திருமதி.H.L.நிபாநா |
| **கௌரவ இதழாசிரியர்** | - | திரு.S.M. வசந்தன் |
| **உப இதழாசிரியர்** | - | திருமதி.P.மங்கையர்கரசி |

**மன்ற உறுப்பினர்கள் :**

திருமதி.S.H.H.உசைமா

திருமதி.S.H.ராசிக்

திரு.S.வென்சன்லாஸ்

திரு.I.N. நேசக்குமார்

திரு.L.விஜயகுமாரன்

திரு.J.R.J.ஜோர்ஜ்

திரு.N.M.வாஹிட்

திரு.M.இந்திரராசு

திருமதி.டி.சசிகலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் செயற்குழு

| | | |
|---|---|---|
| **தலைவர்** | - | P.லக்ஷிதன் |
| **உபதலைவர்** | - | K.ஸ்ரீரங்கன் |
| **செயலாளர்** | - | S.மோபிர்சாந்த் |
| **உபசெயலாளர்** | - | A.ரோய் அமல்டன் |
| **இதழாசிரியர்** | - | P.அஜே |
| **உபஇதழாசிரியர்** | - | M. F. அகமட் சரீப் |
| **பொருளாளர்** | - | P. ரொஷான் ரோஜ் |
| **உபபொருளாளர்** | - | A. அர்ஷாட் அஹமட் |

### குழு அங்கத்தவர்கள்

S.டனூஸ் டயான்
A.நிஷாந்தன்
A.R.M. ருஷான்
S.கிரிஷாந்தன்
A.ஸ்டென்லி என்தனி
S.தமீஸ் அகமட்
M.A.வசிம் அக்ரம்
A.பிரசான்
N.டென்சில் டேவிட்
S.மனோஜ்
M.I.அசீக்
S. இதர்ஷன்
M. F. அஹமட்
J. கிளின்டன் ராஜ்
R. மனோஜ்

S. கோபிநாத்
S. விஜேந்திரன்
A. அன்ஷாப்
A. அர்ஷாட்
S. ரிகாஸ்
M. மனாஷிர்
R. இர்ஷான்
A. சாஜித்
S. சுலைம்
M. R. M. ரயிஸ்
S. ஜோன்சன்
S. ஜோசப் மைகல்
A. A. எரோமியாஸ்
R. தயாசாகர்
S. A. வினிஸ்டன்

P.டெரிக் சசேந்திரன்
P.நிராஜ்
S.நெஸ்டர் டேமியன்
S.ருஷாந்தன்
S.யூசுப்
M.S.சப்ரி
R.ரதீஸ்
B.மிதுன திரிபுவன்
M.R.D.S.மைக்கல்
A.பிரபுராம்
M. துஷாந்தன்
N. கேசவன்
A. அதிக்
C. டிஷான்
S. மகேஸ் பிரவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பத்தமிழ் மொழி

பன்மொழிகள் படைக்கப்பட்ட மேதினில் வன்மொழியாம் தமிழ்மொழி முதலிடம் பெற்ற விந்தைதான் என்ன? "மெல்ல தமிழினிச் சாகும் அந்த மேற்கு மொழிகள் புவியிசை ஓங்கும்" என பாவேந்தர் பாரதியார் தட்டியெழுப்பியதற்கமைய இந்த உலகம் எனும் மணிமண்டபத்தில் என்றும் உயரப் பறக்கின்றது தமிழ் கொடி. இதற்கு காரணம் தமிழ் தாய் மடியினிலே பிறந்து தமிழ் மண்ணில் தவழ்ந்து, தமிழ் வாசனையை நுகர்ந்த தாரகை நடுவன் தண் மதி போன்றும் சில தலை சிறந்த வையகம் போற்றும் தமிழ் தாயின் புதல்வர்கள் ஆவர். அவ்வாறானோர் பாரதியார், கம்பர், வள்ளுவர், விவேகானந்தர், அறிஞர் அண்ணா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழ்மொழி இறையோடு சங்கமித்து பல்லாயிரம் ஆண்டு தொன்மை வாய்ந்த மொழியாகும். இந்த நீண்ட காலகட்டத்தில் எத்தனையோ அரசியல் மாற்றங்கள் கலாசார மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றை எதிர்க் கொண்ட தமிழ் தாய் தன் தரத்தை உயர்த்தி நிலை பெற்றிருக்கின்றாள். "கல் தோன்றி மண் தோன்றா காலத்திற்கு முன் தோன்றிய மூத்த தமிழ்" இவ்வரியை நோக்கும் பொழுது தமிழின் தொன்மை தெரிகின்றதல்லவா? இயல், இசை, நாடகம் எனும் மூன்று பிரிவுகளைக் கொண்ட இத்தமிழ் மொழியை முத்தமிழ் எனவும் அழைப்பர்.

வல்லினம், மெல்லினம், இடையினம் எனும் மூன்று பிரிவுகளைக் கொண்ட இத்தமிழுக்கு இனிமை என்றும் பொருள். இதனால்தான் பாரதியார் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்" என்றும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் "தமிழுக்கு அமுதென்று பெயர். அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று சிறப்பித்துள்ளனர்.

தமிழ்மொழி இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்களாலும் உயிரும், மெய்யும், உயிர்மெய்யும், ஆயுதமும் சேர்ந்து உருப்பெற்றது. இலக்கியமும் இதிகாசமும் செறிந்து காவியமும் காப்பியமும் மலிந்து சொற்சுவையும் பொருந்தி கற்றோரையும் மற்றோரையும் கவர்ந்து, எளியதும் இனியதும் சேர்ந்து இவ்வனைத்தையும் மூன்றே எழுத்துக்களில் உள்ளடக்கியதே இத்தேமதுர தமிழாகும்.

எழுத்து, சொல், யாப்பு, பொருள், அணி எனும் ஐந்திலக்கண அலகும் நம் தமிழுக்கே உரியது. எண்ணற்ற இலக்கண நூல்கள் மற்றும் ஐம்பெரும் காப்பியம் என்பன நம் தமிழ் நங்கையை மேலும் அலங்கரிக்கின்றது.

இலக்கியத்துறை, நாடகத்துறை, தொடர்பாடல்துறை என்று பல்வேறுபட்ட துறைகளிலும் தனது நுணுக்கங்களையும் காட்டி தனக்கென ஒரு அகலமான நீண்ட பாதையை அமைத்து அதில் வீறு நடைப்போடுகின்றது. எங்கள் தங்கத்தமிழ், வெள்ளையருக்கு எதிராக போராடிய வீர பாண்டிய கட்டபொம்மன் தொட்டு பண்டார வன்னியன் வரை நெஞ்சறையை இரும்புக் கவசம் ஆக்கி போராடிய வீரத் தமிழர் பலருள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21ம் நூற்றாண்டில் தமிழின் வளர்ச்சியை பார்ப்போமானால் இனிய கானமாக ஒலிக்கும் தமிழ் நாதம் இன்று கணனியிலும் பெரும் ஆதிக்கம் செலுத்துவது தமிழின் பெருமைக்கு மெருகூட்டுகின்றது. விலை மதிப்பற்ற பொக்கிஷமாக கருதப்பட்டு வரும் எமது இலக்கியங்கள் இன்றைய இளைய சமுதாயத்திற்கு கணனி கைப்பட்டு அருமருந்தாக உயிரூட்டி வருகின்றது. ஆகவே இவ்வாறு "தடுக்கி விழுந்தாலும் தமிழாக ஒலிக்க வேண்டும்" என்ற கொள்கையின் அடிப்படையில் வளர்ந்து வரும் தமிழை மணிமண்டபத்தின் உயரத்தில் இருக்கும் தமிழ்க் கொடியை என்றும் அந்நிலையில் பேணுவோம்.

"தமிழ் தாய் மடியினிலே பிறந்து
தமிழ் மண்ணில் தவழ்ந்து, தமிழ் காற்றை சுவாசித்து
தமிழ் புகழ் எங்கும் பரப்பி
தமிழ் கொடி எங்கும் பறக்க
தமிழர் நாமே வழியமைப்போம், வாரீர் .........

M. ருசான்,
13$^{T}$ (வர்த்தகப்பிரிவு)
2011 A/l

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் தாய் மொழி தமிழ்

உலகில் காணப்படும் காலத்தால் மிக மூத்த மொழிகளில் ஒன்றே தமிழாகும். தான் பிறந்து பல்லாயிரம் ஆண்டுகள் ஆகியும் அது அழகும், இளமையும் குறையாமல் இன்றும் நிலைத்து நிற்கின்றது. அத்தகைய மொழியைத் தம் தாய் மொழியாக்கிக் கொள்ளும் பாக்கியத்தைப் பெற்ற நாம் எவ்வளவு பெருமைக்குடையோர் என்பதை நினைத்துப் பார்க்கையில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ் மொழி இந்தியத் துணைக் கண்டத்தின் தென் பகுதியில் வாழ்ந்த மக்களால் பேசப்பட்டது. எனவே, அம்மக்கள் 'தமிழர்' எனவும், அவர்கள் வசித்த தேசம் 'தமிழ் நாடு' எனவும் கூறப்பட்டது. அன்றைய தமிழ் நாட்டை சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். அவர்களும், அவர்களின் கீழ் அதிகாரஞ் செலுத்திய சிற்றரசர்களும் தமிழ் மொழியை வளர்க்க அரும்பாடுபட்டனர். தமிழ்மொழியைப் போற்றிப் பாடிய புலவர்களைப் பொன்னும், பொருளும் வழங்கி கௌரவித்தனர்.

முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் ஆகிய சங்கங்களில் இருந்த உறுப்பினர்கள் பல தமிழ் நூல்களை இயற்றி, ஆராய்ந்து தமிழ் மொழிக்கு மென்மேலும் வளத்தை ஊட்டினார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட கடைச்சங்க நூல்களுள் பல அழிந்தொழிந்தாலும், சில இந்நாளிலும் கிடைக்கின்றன. தொல்காப்பியம் அவற்றுள் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. சங்க காலத்து ஆக்கங்களைப் பற்றிப் பேசும்போது, கபிலர், நக்கீரர், பரணர் போன்ற சான்றோர்களின் அரிய பாடல்கள் மறக்க முடியாது.

இத்தகைய புகழும், பெருமையும் கொண்ட தமிழ் மொழியை புகழ்ந்துப் பாடிய ஈழத்துத் தமிழ் பெரியாரும் உளர். விபுலானந்தர், ஆறுமுகநாவலர், சின்னத்தம்பிப் புலவர் போன்ற சான்றோர்கள் தம் ஆக்கங்களால் தமிழை மேலும் அழகுபடுத்தியுள்ளனர். 'நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே' என்று சொல்லும் அளவுக்கு நாவலரின் தொண்டு அமைந்திருந்தது. இது இலங்கைத் தமிழர் எமக்குப் பெருமையல்லவா?

கம்பர், வள்ளுவர், இளங்கோ, பாரதியார் போன்ற தமிழுக்கு அரும்பாடுபட்டு உழைத்த பெரியோரின் புகழ் இன்றும் நிலைத்து நிற்கின்றது. அத்துடன், தமிழ் நூல் பரப்பு திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பெரிய புராணம், தேவாரம், திருவாசகம் போன்ற பெரும் நூல்களால் ஆக்கப்பட்டது.

> செம்மையும், இனிமையும் படைத்த தமிழ்த்தாயே உன்னை
> பாரதியார், 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
> இனிதாவதெங்கும் காணோம்'

என்று போற்றிப் பாடியதற்கு வேறு ஆதாரந்தான் தேவையோ?

J.M.அர்ஷாட்
தரம் - 9T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

**CROWN**
**ELECTRONICS**

Dealers in Amplifier Kits Printed Circuit Boards.
Electronic Spare Parts and Etc...

Mics, Woofers,Buffles,Tweeters,Speakers,
Equalizers,Amplifiers,Mid Rangers,Sub Woofers,
Car Speakers,Electronics Spare Parts

No : 88 2/5, Second Floor, 1st Cross Street, Colombo-11.
Tel : 011 2543639, 4712689,Fax : 2543639

PTC
**Pratha Trading Co.**

Suppliers to Confectioners & Bakers, Importers
of all kinds of Food Colours Essence Chemicals etc.

No.64, Dam Street,
Colombo - 12,
Sri Lanka.

Tel : 2445626, 4990743
Tele/Fax : 2394336
E-mail : s_prathaaban@yahoo.com

**New Gold Star Textile**
Imports & Wholesale

106/A, Third Cross Steet ,Colombo-11
Tel: +94 11 2449497 +94 11 2433503
Fax: +94 11 2360284 Mobil: 0777 884523

K.Siddharth Avinash
(Managing Director)

**V.A.S.T.K.S. NADAR & COMPANY (PVT) LTD.**
*Importers & General Merchants*

Office :
41, Dam Street,
Colombo 12,
Sri Lanka.

Tel : +94-11-2336121, +94-11-2436003,
+94-11-2441306
Fax : +94-11-2433729
Mob : +94-11-715410043
E-mail : castks@gmail.com

**MEL - TEX**

Ameen Trade Centre
57/23, Keyzer Street,
Colombo 11.
Tel : 2332466

Wholesale & Retail Dealers in Textiles
Specialist for Overall and Table-Cloth Fabric

CHS
**COLONIAL**
**HARDWARE STORES**
Importers, Distributors & General Hardware Merchants

#427,Old Moor Street,
Colombo 12,
Sri Lanka.

Tel : 2431950, 2435414, 2347981-83-89
(Direct) 2471003, 2387827,2391792
Fax : 2334090,2387826
Hotline : 0777 399416, 0777 760132
E-mail : colonial@slt.lk,
info@colonialhw.com
Web : www.colonialhw.com

**MONARA STEEL CENTRE**
IMPORTERS & GENERAL HARDWARE MERCHANTS

No.333 2/8, OLD MOOR STREET,
COLOMBO-12

Tel : 2470738,2470739
Hotline : 2390882
Fax : 2320108
E-mail : monara333@sltnet.lk

**Maruthi Agency**
*Importers Wholesale in*
*Stationaries & Fancy Goods.*

157-B, PRINCE STREET,
COLOMBO - 11.
T.P : 2335022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூர்ப்புக் கொள்கையும் இறைவனின் படைப்பும்

பரந்த இப்பூவுலகை நாம் ஒரு முறைச் சுற்றிப் பார்த்தோமானால் சிறிய புல் பூண்டு முதல் பெரிய மரங்கள் வரையும் எளிய விலங்குகள் முதல் பெரிய விலங்குகள் வரை விதவிதமான அமைப்புகளையும், வேறுபட்ட வித்தியாசமான தோற்றங்களையும் அவதானிக்கலாம். இலை வேறுபட்டிருந்த போதிலும் இவற்றுக்கிடையே பல அடிப்படை ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவை ஒன்று தொடர்பாயுள்ள என்பதும், மிக நீண்டகாலமாக அவற்றிடையே ஏற்பட்ட மாறுதல்கள் என்பதும் பெறப்படுகின்றன. இம்மாறுதல்களுக்கு ஏற்றவாறு முன்பு காணப்பட்ட எளிய அமைப்பாங்குடைய உயிரினங்கள் சூழலில் ஏற்படும் மாறுதல்களுக்கு இசைவாக்கமடைந்து, அச்சூழலிலே வாழும் தகவை பெற்று காலப்போக்கில் அவற்றை விட அமைப்பாங்கில் சிறத்தல் அடைந்த உயிரினங்கள் தோன்றலே கூர்ப்பு எனப்படும்.

இக்கூர்ப்பைப் பற்றி பல சான்றுகள் காணப்படுகின்றன. தாவரங்களையும், விலங்குகளையும் பாகுபடுத்தி அறிந்தபோது அவை மிக எளிய அமைப்பிலிருந்து, சிக்கல் வாய்ந்த அமைப்பை நோக்கி சிறத்தலடைந்து காணப்பட்டன.

பலகோடி வருடங்களுக்கு முன்னும் உயிரினங்கள் வாழ்ந்தன என்பதை உயிர்ச் சுவடுகளை ஆதாரமாகக் கொண்டு அறியப்பட்டன. உதாரணமாக ஆரம்பகாலத்தில் வாழ்ந்த குதிரையொன்று பதினொரு அங்குல உயரமுடையதாகவும், நான்கு விரல்களையும் ஒரு சிரா என்பையும் கொண்ட கால்களையுடையதாகவும் காணப்பட்டது. காலப்போக்கில் இவை பதினான்கு அங்குல உயரமுடையதாகவும் மூன்று விரல்களைக் கொண்டதாகவும் மாற்றமடைந்தன. இவ்வாறு படிப்படியாக மாறுதலுக்குட்பட்டு தற்காலத்தில் அறுபத்துநான்கு அங்குல உயரமுடைய குதிரை இனங்கள் காணப்படுகின்றன. எனினும் இவ்வாறு இக்குதிரை இனம் சிறத்தலடைய ஐந்து பில்லியன் வருடங்கள் சென்றன என அறியப்பட்டுள்ளது. மேலும் பல தாவரங்களும், விலங்குகளும் இயற்கை அனர்த்தங்கள் காரணமாகவும் பாறைகளின் கீழும் பனிப்பாறைகளுக்கு அடியிலும் விறைப்பாக்கப்பட்டு தற்காப்புச் செய்யப்பட்டுக் காணப்பட்டன. உதாரணமாக இனமழிந்த ஒருவகை யானையாகிய மம்மூத்து எனும் யானை பூரணமாக உறைந்த நிலையில் காணப்பட்டது.

ஒப்பீட்டு உடலமைப்பிலிருந்தும் உருவவியலில் இருந்தும் பெறப்பட்ட சான்றுகளின்படி உயிரினங்கள், எளிய அமைப்பிலிருந்து அவற்றின் தொழிலுக்கேற்ப, சூழல் காரணிகளுக்கேற்ப, அவற்றின் அமைப்பும், ஒழுங்கும் சிக்கல் வாய்ந்த அமைப்பாக மாறியுள்ளது அறியப்பட்டது. உதாரணமாக முள்ளந்தண்டுள்ள விலங்குத் தொகுதியொன்றை எடுத்துக் கொண்டால் அவற்றின் அங்கங்கள் ஒரே அடிப்படையில் உற்பத்தியாகி அவற்றின் தொழில்களுக்கேற்ப திரிபடைந்துள்ளது. உதாரணமாக எலியின் முன்னங்கால்கள், திமிங்கிலத்தின் துடுப்புகள், பறவையின் சிறகுகள், வௌவாலின் சிறகுகள் ஆகியவற்றை குறிப்பிட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சுற்றோட்டத்தொகுதி, கழித்தல் தொகுதி, சுவாசத்தொகுதி போன்ற பல்வேறு தொகுதிகளும் படிப்படியாக பல்வேறு மாறுதல்களுக்குட்பட்டு அங்கிகளுக்கு அங்கி வேறுபடுகின்றன. இவ்வாறு மேலும் பல கொள்கைகளும் சான்றுகளும் காணப்படுகின்றன.எனினும் முதன் முதலாக கூர்ப்புக் கொள்கையைப் பிரபலப்படுத்தியவர் சார்ல்ஸ் டார்வின் என்பவராவார். ஆயினும் இவருக்கு முன்பாக லமார்க் என்பவர் கூர்ப்பு தொடர்பாக விளக்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். லமார்க் தமது கொள்கையில் சிக்கலான அங்கிகள், எளிய அங்கிகளிலிருந்து விருத்தியடைந்தன என்றும் அவை கூர்ப்பின்போது சூழலுக்கேற்ப இசைவாக்கம் அடைந்துள்ளன என்றும், ஆனால் சார்ல்ஸ் டார்வின் என்பவர் லமார்க்கின் கொள்கையை ஆதாரமாகக் கொண்ட போதிலும், அதிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து ஏற்றுக் கொள்ளக்கூடியவாறான கொள்கையை முன்வைத்தார். ஊதாரணமாக கிரகர் மெண்டலின் பிறப்புரிமை விதிகள், கலப்பிரிவு தொடர்பான கருத்துகள், ஒபரின் உயிர் உற்பத்தி பற்றிய கருத்துகள் போன்றவை இதில் உள்ளடங்கும்.

இவ்வாறு கூர்ப்பு என்பது சூழலில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவும் வாழ்க்கைப் போட்டி காரணமாகவும், வேறு பல காரணங்களாலும் அங்கியியொன்றில் ஏற்பட்ட படிப்படியான மாறுதல்கள் என்ற போதிலும், இக்கூர்ப்பு பற்றி பல சமயங்களிலும் பல்வேற விதமாகக் கூறப்படுகின்றன. அதாவது இறைவனின் படைப்பை வெளிப்படுத்துகின்றன. இறைவன் மனிதனைப் படைக்க முன்னர் பல்வேறுபட்ட உயிரினங்களை படைத்த போதிலும் நிலையான மனிதனுக்கு தனது வாழ்க்கைத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மனிதனைச் சூழ பலவிதமான உயிரினங்களைப் படைத்துள்ளான். அதுவும் காலத்திற்கேற்றவாறு மாறுபடுகின்றன. இருந்த போதிலும் இவற்றுக்கிடையே இடைத்தாக்கங்கள் காணப்படுகின்றன. மனிதன் சமயத்தை நம்புகிறானோ! இல்லையோ? எனினும் விஞ்ஞானமானது மனிதனை சமயத்தின் பால் ஈர்க்கின்றது. இதற்கு சிறந்த வழித்துணையாக கூர்ப்பு விளங்குகின்றது. மனிதனேதான் வியக்குமளவிற்கு பல்வேறு பொருட்களைக் கண்டு பிடிக்கும்போது, அப்படிப்பட்ட மனிதனைப் படைத்த இறைவனைச் சற்று சிந்திக்கமாட்டானா? இன்றைக்கு பல பில்லியன் வருடங்களுக்கு முன்னே உலகம் தோன்றிற்று, அப்படிப்பட்ட உலகத்தையும், உலகிலுள்ள உயிரினங்களையும் காலத்திற்கேற்றவாறு மாறுதல்களுக்கு உட்படுத்தி வளமானவற்றை உருவாக்கிய இறைவனை, எல்லா சமயங்களும் கூறுகின்றன. இவ்வாறாக இறைவன் படிப்படியாக உயிரினங்களைப் படைத்தது போலவே மனிதனுடைய அறிவு வளர்ச்சியையும் பெருக்கியுள்ளான் என்பது தெளிவாக விளங்குகின்றது.

பா. மிதுன திரிபுவன்,
விஞ்ஞான பிரிவு,
தரம் - 13T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய இளைஞர்கள் மத்தியில் தமிழின் நிலைப்பாடு

" இனிமையோடு தனிமையும்
இளமையோடு வளமையும் - கொண்டு
தரணி வாழ் மொழிகளுக்கெல்லாம்
தாயெனத் திகழுமாம் தமிழ் மொழி"

இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்ததொரு மொழியாக எமது தமிழ்மொழி காணப்படுகின்றது. இம்மொழியானது, ஏனைய மொழிகளை விடத் தொன்மையானதும், சுயம்புவாக உருவானதும் (தானாகத் தோன்றியமை), இலக்கியச்செறிவும், வளமும் உள்ள மொழியாக காணப்பட்டதனாலேயே செம்மொழி எனும் உயரிய அந்தஸ்த்தை அடைந்தது. இத்தகைய மகத்துவம் வாய்ந்த மொழியின் இன்றைய நிலைப்பாடுதான் என்ன?

" ஐம்பூதங்களின் ஆட்சிமொழி
ஐவகை நிலங்களை ஆண்டமொழி
ஐம்பெருங்காப்பியங்கள் ஆற்றியமொழி"

என்றெல்லாம் போற்றப்பெற்ற எமது மொழி இன்று

"கமம் அழித்தது போக.....
கறையான் அழித்ததுபோக ......
கடல்கோள் அழித்தது போக ....... மிகுதியை நவீன
கலாசாரமும் அழித்து வருகின்றது"

இன்றைய இளைஞர்கள் முற்போக்குவாதிகளாகவும், சிறந்த கற்பனாவாதிகளாகவும், பகுத்தறிவாளர்களாகவும் காணப்படுகிறார்கள். எந்திர வேகம் மிக்க இந்த உலகிலே தங்களது எதிர்கால வாழ்வை நிர்ணயிக்கும் கல்விக்கும், தங்கள் திறமைக்கும் முக்கியத்துவம் தருகிறார்கள். இவ்வாறான இக்கட்டான சூழலில் அவர்கள் தங்கள் தாய்மொழியான தமிழை புறந்தள்ளுகிறார்கள் என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. 'தங்களின் தாய்மொழியான தமிழை பிறருடன் கதைக்கத் தெரிந்த அளவுக்கு அறிந்து வைத்தால் போதுமானது. அன்றி இதில் இலக்கண, இலக்கிய செறிவு இம்மொழியின் தொன்மை, இம்மொழியின் முக்கியத்துவத்தை அறிந்து வைப்பதால் என்ன இலாபம்? என்பது இன்றைய இளைஞர்களின் பரவலான கருத்தாக இருந்து வருகிறது. தமிழில் இன்று சிறுகதை, புனைக்கதை, நாவல், கட்டுரை, கவிதை போன்றவற்றை பொழுதுபோக்காகவும் வாசித்து அதை நயப்பதற்கு தற்கால இளைஞர்கள் தயங்குகிறார்கள். ஒரு சாரார் இவற்றைச் செய்வது நேரவிரயம் எனவும், மறு சாரார் ஆங்கில மோகம் கொண்டு இவற்றை புறக்கணித்தும், பிரிதொரு சாரார் இவற்றை நயப்பதற்கு போதிய அறிவற்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இத்தகைய பிரச்சினைகளுக்கு பல காரணங்கள் காணப்படுகின்றன. அவற்றில் முதன்மையானது இன்றைய இளைஞர்களுக்கு கலாசாரத் தேவைக்கும், வயிற்றுத் தேவைக்கும் இடையிலான இடைவெளியை புரிந்து கொள்ள முடியாமையே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான இளைஞர்கள் தமிழ் படிப்பதால் அது தமமு தொழிலுக்கு உதவாது எனக் கூறுவதுடன் வேற்று மொழி கற்பதில் ஆர்வங்காட்டுகின்றார்கள். இவ்வாறானவர்களினால் உருவாகும் சந்ததியினருக்கும் தமிழின் அருமை பெருமை பற்றி தெரிய வாய்ப்பில்லை. இவ்வாறே போனால் தமிழை மறந்த சமுதாயம், தமிழை மறந்த தலைமுறை உருவாகிவிடும். இவ்வாறான இளைஞர்கள் ஜப்பானியர்கள் மற்றும் சீனர்களை பற்றி சிறிது சிந்திக்க வேண்டும் அவர்கள் பல்வேறு துறைகளில் இன்று உச்சியில் இருந்தாலும் தாய்மொழியில் கதைப்பதையே பெருமிதமாக கொள்கிறார்கள். பல்வேறுபட்டவர்கள் அமர்ந்திருக்கும் சபை நடுவே கூட அவர்கள் தங்கள் தாய்மொழியில் தயக்கமின்றி உரையாடுகிறார்கள். ஆகவே இன்றைய தமிழ் இளைஞர்கள் பிற மொழிகளைவிட தமிழ்மொழிக்கு சற்று முக்கியத்துவம் தர வேண்டும். இன்றைய சூழலில் நாம் மற்ற மொழிகளை கற்க வேண்டியது காலத்தின் கட்டாயம். ஆனால் தாய் மொழியை கற்க வேண்டியது கலாசாரத்தின் கட்டாயம்.

அடுத்து தமிழர்களாக இருந்தும் தமிழைக் கொலை செய்யும் பிரிதொரு சாராரும் இருக்கத்தான் செய்கிறார்கள். இது மிகவும் வருத்தத்திற்குரிய விடயமாகும். அண்மையில் செம்மொழி மாநாட்டிற்கு வந்த கலையரசி என்ற சீனப் பெண்மணி மிக வருத்தப்பட்டு " நான் வேற்று நாட்டில் இருந்து வந்த ஒரு பெண்மணி நான் சரளமாக தமிழ் கதைத்தாலும் என்னுடன் பலர் தமிழில் கதைக்க தயங்குகிறார்கள். இது வேதனைக்குரிய விடயம். இதைவிட ஊடகங்களில் தமிழக்கொலை செய்கிறார்கள். இவ்வாறிருப்பின் இந்த தமிழ்தானே நாளைய சந்ததியினரிடையேயும் வளரும். ஆகவே சூழலை ஆரோக்கியமான தமிழ் வாழுமிடமாக மாற்றுங்கள்" என கூறுகிறார். தமிழை வளர்ப்பது எப்படி என தமிழனுக்கு வேறொருவர் அறிவுரை கூறுமளவு நமது நிலைமை அவலமாக இருக்கிறது. இன்றைய சூழலில் அனேகமானவர்கள் தமிழில் அதிக எழுத்துப்பிழை விடுபவர்களாகவும், தமிழை ஒழுங்காக உச்சரிக்கத் தெரியாதவர்களாகவும், கோர்வையாக வாசிக்கத் தெரியாதவர்களாகவும் இருக்கின்றார்கள். இது போன்ற காரணங்களினால் தமிழானது அழியும் நிலையை அண்மிக்கின்றது. தவிர அதன் தனித்தன்மை நிர்மூலமாக்கப்படுகின்றது.

"மொழி என்பது எழுத்தல்ல. காரணம் எழுத்தின் வடிவம் மாறும். கம்பனும், வள்ளுவனும் எழுதிய எழுத்து இன்று இல்லை. எனினும் ஒலி அவ்வாறானது அல்ல. ஒரு மொழியின் வடிவத்திற்கு ஒலியின் பங்களிப்பே அதிகமாகும். ஆகவே அதனை பிழையற உச்சரிப்பது தமிழர்களாகிய எமது கடமையாகிறது" இது கவிஞர் வைரமுத்துவின் கருத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளையில் தோன்றும் சிந்தனையானது அடுத்த கணமே தாய்மொழிச் சொற்களாகவே வடிவம் பெறுகின்றன. ஆகவே தமிழர்களாக பிறந்த குழந்தைகள் ஆரம்பத்தில் தமது சிந்தனைகளை தமிழில் சிந்திக்க ஆரம்பிக்கும் கணத்தில், அவர்களை பாலர் வகுப்பிலேயே ஆங்கில மொழியில் கல்வி கற்க வைக்க முயலும் போது அவர்களின் சிந்தனைகள் முடிக்கப்படுகின்றன. இதனாலேயே குழந்தைகள் தமது முதல் மூன்று தரங்களையும் தாய்மொழியிலேயே கற்க வேண்டும் என அரசாங்கம் சட்டம் இயற்றியுள்ளது. இதையேதான் புதுமைப்பித்தன் "நமது தாய்மொழியை கைவிடுதல் எமது அடுத்த கட்டமாக தமிழர்கள் வெறும் மொழியாராய்ச்சியிலும் மொழிசார்ந்த துறைகளிலும் மட்டும் பிரகாசிக்காது, பிற துறைகளிலும் பிரகாசித்து வெற்றிக்கொடி நாட்ட வேண்டியது அவசியமாகவுள்ளது. இதன்போது அத்துறை சார்ந்த ஆளுமைகளை பெற குறித்த துறைசார்ந்த புத்தகங்கள், கையேடுகள், வழிகாட்டிகள் தமிழில் கிடைப்பது அரிதாகவுள்ளது. இளைஞர்கள் பிற மொழியை நாடிச் செல்வதற்கு இதுவும் ஒரு பிரதானமான காரணமாக அமைந்துள்ளது. ஜப்பான் மொழியை உதாரணமாக எடுத்துக் கொண்டால் உலகில் எந்த தொழில்நுட்பவியல் சார்ந்த புத்தகமும் எந்த மொழியில் வெளிவந்தாலும் அதை அடுத்த ஒரு வாரத்திற்குள்ளாகவே அவர்களது மொழிக்கு மொழிபெயர்க்கும் வசதி அங்கு காணப்படுகின்றது. மொழி ஆய்வாளர்கள் விரைவாக இத்தகைய பணியை ஜப்பானில் மேற்கொள்கிறார்கள். இதுபோன்ற நிலை இன்று தமிழில் ஓரளவு காணப்பட்டாலும் அதை துரிதப்படுத்துவதோடு விசாலப்படுத்தினால் இன்றைய இளைஞர் சமுதாயமும் அதனூடு பயன்பெறும். இல்லாது மொழியானது காலத்தோடு சேர்ந்து முன்னேற வேண்டுமென்பதையே பாரதி,

" சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!"

எனக் கூறுகின்றார்.

இதன் வழியே இன்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினால் எழுபத்தைந்து ஆயிரம் கலைச் சொற்கள் அடங்கிய மிகப்பெரிய தமிழகராதி இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

ஆகவே, தமிழர்களாக பிறந்த நாம் வெறும் மொழியாக மட்டுமே தமிழைக் கற்காது அதன் பெருமை உணர்ந்து அதன் தேவையை உணர்ந்து தமிழெனும் ஆழ்கடலில் கற்றவற்றை நம்மளவோடு நிறுத்தாது திக்கெல்லாம்ப பரவும் வகையில் வழி செய்வோம்! தமிழனெனக் கூறுவதில் பெருமை கொள்வோம்!

K. ஸ்ரீரங்கன்
13T விஞ்ஞானம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரோக்கியம்

சுகத்தின் உற்ற நண்பன் நோயின் பகைவன் !
நற்குடும்பத்தின் செல்வன் !
இறைவனின் இணையற்ற ஈவு !
சிறார்களின் எதிர்காலம் !
சுகாதாரத்தின் விம்பம் !
சுகத்தின் நிறைவே உள்ளத்தின் மகிழ்வு !
உள்ளத்தின் மகிழ்வே நோயற்ற வாழ்வு !
நோயற்ற வாழ்வு ஆரோக்கியம் !

ஆக்கம் - P. யதூர்ஷன்
தரம் - 3D


## மரம்



- மரம் பெரியது.
- மரத்தில் பழம் இருக்கும்.
- மரத்தில் குருவிகள் கூடு கட்டி வாழ்கின்றன.
- மரத்தில் மிக நீளமான வேர் உண்டு.
- மரத்தில் நிறைய கிளைகள் உண்டு.

J.S. எஞ்சலோ
தரம் - 2 D

## யானை



யானை பிளிறும்.
யானை கறுப்பு நிறம்.
யானை மரங்களை உடைக்கும்.
யானை கரும்பு தின்னும்.
யானை காட்டில் வாழும்.

V. டீரோன்
தரம் - 2 D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி வசந்தம் வீசும்

அந்தி மயங்கும் நேரம், மெல்லிய தூறல் சதீஸ் வேலை முடிந்து தனது காரில் வீடு நோக்கி போய் கொண்டிருந்தான். சதீஸ் பிரபல்யமான தொடர்பாடல் நிறுவனத்தில் நிர்வாக அதிகாரியாக கடமைபுரிகிறான். வீட்டிற்கு ஒரே பிள்ளை. அம்மாவும் அப்பாவும் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்.

வழி நெடுகிலும் ஒரே வாகன நெருக்கம். மழையும் விட்டபாடில்லை. அப்போது தான் சதீஸின் பார்வை சட்டென வீதி ஓரத்தில் பஸ்ஸிற்காக நின்று கொண்டிருந்த இளைஞன் மீது விழுகிறது. ஆ அது ரமேஸ்தானே. உடனே காரை விட்டு இறங்கி ஓடிப்போய் தன்னை அறிமுகம் செய்து கொண்டான். பின் இருவரும் காரில் வந்தமர்கின்றனர்.

இனி எப்படி ரமேஸ். இப்போது என்ன செய்கிறாய். பாடசாலையை விட்டு விலகி 5 வருடங்கள் ஆகி விட்டனவே என ஆரம்பித்தான் சதீஸ். அப்போது ரமேஸிற்கு தம்முடைய கல்லூரி காலம் மனநிழலில் வருகின்றது.

ரமேஸும் சதீஸும் தம்முடைய க.பொ.த சாதாரண தரம் வரை ஊர் பாடசாலையின் படித்து சிறந்த சித்திகளை பெற்று நகரத்தில் பிரபல்யமான பாடசாலையில் உயர்தரத்தில் வணிக பிரிவில் கற்பதற்காக சேர்ந்தார்கள்.

ரமேஸும், சதீஸும் நல்ல நண்பர்கள். படிப்பில் கெட்டிக்காரர்கள். போட்டி போட்டு கொண்டு படிப்பார்கள். புதிய கல்லூரி, புதிய விடுதி சூழல், புதிய நண்பர்கள் எல்லாம் அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தின.

இப்படி சிறிது காலம் சென்று கொண்டிருக்கும் போதுதான் சதீஸுக்கு ஒன்று புரியத் தொடங்கியது. ரமேஸ் தன்னை விட்டு கொஞ்சம் கொஞ்சமாக விலகி கொண்டிருப்பதாக உணர்ந்தான். ரமேஸ் தற்போது வகுப்பில் பாடங்கள் நடைபெறும் போது கவனம் செலுத்துவதில்லை. சில மாணவர்களுடன் சேர்ந்து வேறு கதைகள், சினிமா, கதைகள் என காலத்தை கழிக்க தொடங்கியிருந்தான். விடுதியிலும் சேர்ந்து படிப்பதை தவிர்த்திருந்தான்.

அன்று கல்லூரியின் கலைவிழா சதீஸும் குழுவினரும் மேடை நாடகமொன்றிற்கு பங்குபற்றியிருந்தனர். என்ன அருமையான நாடகம். எவ்வளவு நல்ல விடயங்களை இவ்வாறான சமூக நாடகம் மூலம் வெளிக் கொண்டு வர முடியும் என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தது.

கலை விழா நிகழ்ச்சிகள் இனிதே நிறைவு பெற்றன. சதீஸும் ரமேஸும் விடுதி நோக்கி பயணமாயினர். இருவரும் தனியே பேசுவதற்கு தக்க சந்தர்ப்பமாக உணர்ந்த சதீஸ் பேச தொடங்கினான். "ரமேஸ் இப்ப எத்தனையோ நாட்களாக உன்ன பார்த்து கொண்டுதான் வாறேன். ஏண்டா நீ இப்படி மாறிட்டாய். ஏன் இப்போ படிப்பில் இன்ட்ரஸ் இல்லாமல் இருக்கே" என்றான். அதற்கு ரமேஸ் "இல்லையே அப்படி ஒன்றுமில்லை" என்றான். ரமேஸ் ஏன் பொய் வேற சொல்றே என்றான் சதீஸ். நீர் சேர்ந்த நண்பர் கூட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவர்கள் இல்லை. அவர்கள் உனது வாழ்க்கையையே நாசப்படுத்தி விடுவார்கள் என்றான். இன்னும் எவ்வளவோ சொல்லியும் அவன் கேட்பதாகவே இல்லை. அவர்கள் விடுதியை அடைந்தார்கள்.

காலம் தான் யாருக்காகவும் காத்திராமல் தனது வேலையை செம்மையாக நிறைவேற்றி கொண்டிருந்தது. ஆம் பரீட்சை நெருங்கி கொண்டு வந்தது. சதீஸ் முன்னேற்பாடாக நன்றாக திட்டமிட்டு நேரத்தை சரியாக பயன்படுத்தி தனது பாடங்களை கற்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தான்.

பரீட்சை நாளும் நெருங்கி வந்தது. கற்ற விடயங்களை வைத்து இறைவன் துணையுடன் நன்றாக பரீட்சையை எழுதி முடித்தான். பரீட்சை முடிந்தவுடன் விடுதியிலிருந்து வீட்டுக்கு வந்து சேர்ந்தான். இன்னும் இரண்டு மாதங்களில் பரீட்சை பெறுபேறு வந்ததை அறிந்து பாடசாலைக்கு சென்றபோது தானும் தனது நண்பர்களும் பாடசாலையிலே சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளதை அறிந்தான். அதிலும் சதீஸ் முதல் மாணவனாக தேறியிருந்ததை அறிந்து அளவில்லாத மகிழ்ச்சியடைந்தான். அதே நேரம் ரமேஸின் பெறுபேறுகளை அறிந்து கவலையடைந்தான்.

அப்போது ரமேஸுதட சதீஸும் சந்தித்து கொண்டனர். மனதின் கவலையை முகம் காட்டி கொடுத்து விடுமே. ரமேஸின் கண்கள் சிவந்திருந்தன. "அடே சதீஸ் நான் மோசம் போய்விட்டேன். அப்பவே நீ சொன்னதை கேட்டிருந்தால் என்னுடைய நிலைமை இப்படி ஆகியிருக்காதே என்று அழுதான். சதீஸ் ரமேஸை ஆறுதல்படுத்தி மீண்டும் ஒருமுறை பரீட்சை எடுக்குமாறு அறிவுரை கூறினான்.

அந்த நாளுக்கு பின் இன்றுதான் ரமேஸை காண்கிறான். சரி ரமேஸ் இப்ப என்ன செய்கிறாய் என்றான் சதீஸ். ஒரு கடையில் கணக்கு எழுதுவதாக சொன்னான். சதீஸ் நீ சொன்னது போல நான் மீண்டும் ஒரு தடவை பரீட்சை எழுதி சித்தியெய்தினேன் என்றான். கவலைபடாதே நண்பா, நான் உனக்கு என்னுடைய நிறுவனத்தில் எக்கவ்டிங் செக்ஷனில் வேலை ஒன்று பெற்று தருகிறேன். அத்துடன் மேலே படிக்கிறத்துக்கு உதவி செய்கிறேன் என்று சொல்லி நண்பனை ஆரத்தழுவினான். கெட்ட நண்பர்களால் வாழ்வே நாசமாகி போவதை போல நல்ல நண்பர்களால் வாழ்வில் வசந்தம் வீசும் என்பதை உணர்ந்தவனாய் வெளியே மழை பெய்வதை ரசிக்க ஆரம்பித்தான் ரமேஸ்.

திருமதி. எம்.எஸ்.எம். இர்ஷானா,
உயர்தர பிரிவு ஆசிரியை,
புனித அந்தோனியார் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் தொன்மையும் அதன் எதிர்காலமும்

## ஒரு தொலை நோக்கு ......................

மேலை ஐரோப்பிய நாடுகளில் பண்டைக்காலத்தில் மிகவும் சிறந்து விளங்கிய கிரேக்க, இலத்தீன் மொழி இலக்கியங்களே செவ்விலக்கியம் என (Classical Literature) ஐரோப்பியர் கருதினர். அதனாலே அவ்விரு மொழிகளையும் செம்மொழிகள் (Classical Language) எனப் புகழ்ந்தனர். இம்மொழிகளே ஆங்கிலம், பிரெஞ், ஜேர்மானியம், ரஸ்யம், ஸ்பானியம், இத்தாலியம் போன்ற பின்னர் வந்த மொழிகளின் வழி காட்டிகளாகவும் அமைந்திருந்தன என்பதை இலக்கிய ஆய்வாளர்களும் ஏற்றுள்ளனர். இதுதவிர 1800களில் சீனம், அபிரேயம், சமஸ்கிருதம், அரபிக் போன்ற மொழிகளும் செம்மொழிகள் என்ற வரிசையில் சேர்க்கப்பட்டன. ஆனால் மிகவும் தொன்மையான, செம்மையான, தூய்மையான, இனிமையான மொழியாகப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக தமிழ்மொழி விளங்கி இருந்தது என்பதை ஆய்வாளர்கள் அறிந்திருந்த காரணத்தால், அம்மொழியைப் புறந்தள்ளியிருந்தனர்.

1816களின் பின்னர் வைட் எல்விஸ் என்ற அறிஞர் தமிழ்மொழியின் தொன்மைபற்றி விதந்துரைத்தார். அவரின் வழியில் 1856 களில் றொபட் கால்டு வெல் "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற மாபெரும் ஆய்வு நூலை வெளியிட்டு தமிழ் ஆய்வாளர்களுக்குப் பாதையைத் திறந்து விட்டிருந்தார். (தமிழியம் - திராவிடியம்)

செம்மொழிகளாக முன்னர் கூறப்பட்ட மொழிகள் காலத்தால் வழக்கிழந்து போக உண்மையான செம்மொழியான தமிழ்மொழி அன்றுபோல் இன்றும் புதுப்பொலிவுடன் காணப்படுவது அம்மொழியின் சிறப்புக்கும், உயர்வுக்கும் ஓர் எடுத்துக்காட்டு.

வடவேங்கடம் முதல் தென்குமரிவரை வியாபித்திருந்த தமிழர்களின் ஆளுகை பின்னர் தமிழில் இருந்து பிரிந்து போய்விட ஏனைய திராவிட மொழிபேசும் மக்களின் தொகையால் சிதைவுற்றுச் சிறுக ஆரம்பித்தது. வடமொழி, போன்ற வேறுமொழிகளின் ஊடுறுப்பால் கி.பி.100ம் ஆண்டளவில் தெலுங்கும் தெலுங்கர்களும், கி.பி 500ம் ஆண்டளவில் கன்னடமும் கன்னடர்களும், கி.பி 1500ம் ஆண்டளவில் மலையாளமும் மலையாளிகளும் தமிழியக் குடும்பத்தில் இருந்து பிரிந்து சென்ற சில திராவிடர்கள் என்பார் அறிஞர் கால்டு வெல்.

சங்க இலக்கிய நூல்களை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை என்று கண்டறிந்து அச்சேற்றப்பட்ட (காணாமல் போனவை தவிர) சில தொல்லிலக்கியங்கள் மேனாட்டாரையே வியக்க வைத்தன. இந்த செம்மையான தனித்துவமான இலக்கியங்களை ஆராய்ந்த மொழியியல் ஆய்வாளர்கள், வல்லுனர்கள் யாவரும் இணைந்து 1920ம் ஆண்டளவில் தமிழையும் செம்மொழிதான் என ஒத்துக் கொண்டனர்.

ஆனால் சமஸ்கிருத மொழியை தம்மொழியாகக் கொண்ட 'பார்ப்பனர்' சமூகம் தமிழை அரைச் சமஸ்கிருதக் கலவையாக்க எடுத்த முயற்சிகள் 13ம் நூற்றாண்டில் வீறு கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் ஒரு அங்கமாக 'மணிப் பிரவாக நடை' தமிழ்மொழியாகி தீவிரமாகப் பேசப்பட்டது. அத்தகைய நச்சு முயற்சிகள் தமிழ் பற்றாளர்களால் முறியடிக்கப்பட்டது. பின்னர் 18ம் 19ம் நூற்றாண்டளவில் ஆங்கில மொழி ஊடறுத்து தமிழை கலவை மொழியாக்க (தமிங்கலமாக்க) பாடுபட்டது. அதற்கு பக்கபலங்களாக உயர்பதவிகள், பட்டங்கள், அந்தஸ்து போன்றன மனிதப் பலவீனங்களுக்குள் திணிக்கப்பட்டன. இருந்த போதும் தமிழின் இனிமை, தொன்மை, செம்மை மாறாமல் அன்றே தனித்து நின்று வெற்றி கண்டது. அதன் விளைவாகவே 2004இல் இந்திய மத்திய அரசு தமிழ்மொழி என்பதும் செம்மொழிதான் என ஏற்றுக் கொண்டு அறிவுப்புச் செய்தது.

தற்காலத்தில் ஆங்கில மொழியின் தாக்கம் 'உலகமயமாக்கல்' என்ற பொருளாதாரச் செயற்பாட்டினால் மீண்டும் தளைத்து வளருகின்றது. இது ஏனைய மொழிகளை வீட்டில் பேசும் மொழிகளாக மாற்றிவிடக்கூடிய நிலைக்குத் தள்ளி வருகிறது. உதாரணமாக அவுஸ்திரேலியாவுக்கு வடக்கேயுள்ள 'நியூகினி' தீவுகளில் வாரத்துக்கு ஒரு மொழியாக அழியும் அபாயம் இருப்பதாக யுனெஸ்கோ ஆய்வுக் குழுவினர் அண்மையில் அறிக்கை வெளியிட்டுள்ளார்கள்.

"ஒட்டுமொத்தமாக மூளைச் சலவைக்கு உருவாக்கப்பட்ட தொலைகாட்சி மற்றும் வானொலி, கணனி, வலைப்பின்னல், கையடக்கத் தொலைபேசிகள் காணப்படுவதாகவும் இவற்றின் பெருக்கம் தற்கால நலினப்பட்ட தமிழ்பேசும் மக்களின் கலாசாரப் பாரம்பரியங்களின் பெருந்தாக்கங்களை ஏற்படுத்துவனவாகவும் அவர்களுக்கான நேரமின்மையை ஏற்படுத்தி மனித பகுத்தறிவுச்சிந்தனைகளுக்கும் தடை போடுவனவாகவும் இருக்கின்றன." என்கிறார் மொழியியல் ஆய்வாளர் பி. இராமநாதன்.

எது எப்படியாயினும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோராக இருந்தாலென்ன, மற்றவர்களாக இருந்தாலென்ன தமிழின் செம்மைத்தன்மைக்கு ஊறு ஏற்படாத வகையில் வாழ்வது, வழிகாட்டுவது எல்லோருக்கும் எக்காலத்துக்கும் பொருந்தும்.

"யாமறிந்த மொழிகளிலே
தமிழ் மொழிபோல்
இனிதாவது எங்கும காணோம்"
பாரதியார்

நன்றி

ஆசிரியர்,
A.S.M. ஃபீலிக்ஸ்
(Sc.Trd,B.Ed, PGDT)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T.Ambikaibalan
*Director*

# THE DRAPERS

The Drapers

# 15/1/A, Duplication Road, Colombo-04,Sri Lanka.

T : +94-11-2508500,2595287
F : +94-11-2553882
M : +94-77-7788571
E : info@thedrapers.com.cn
: thedrapers@click.lk
W : www.thedrapers.com.cn

Specialist in
Curtaining Furnishing
& Household Linen

# TEX LINK

*Wholesale Dealers in Readymade Garments*

TL

**Kiddies Plaza,**
**No. 92/4, Keyzer Street,**
**Colombo - 11.**

**Tel : 2438575**
**2472789**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாமன்ற ரசிகர்களின்

1. மங்கள விளக்கேற்றல்
2. தமிழ் தாய் வாழ்த்து
3. மன்ற கீதம்
4. கணபதி ஸ்துதி
5. வரவேற்புரை
6. வரவேற்பு நடனம்
7. தலைமையுரை
8. கதம்ப நடனம்
9. செயலாளர் அறிக்கை
10. குழுப்பாடல்
11. வங்காளி நடனம் (பாங்ரா)


**VISHAL**

**Importers & Wholesale Dealers in Textile & Readymade Garments**

**F/6 Fancy Trade Centre,**
**155,Keyzer Street,**
**Colombo 11.**
**Sri Lanka.**

**Off - +94 11 2471673**
**Fax - +94 11 2423865**

**E - mail - pnapbl@gmail.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்தேடும் வண்ணங்கள்

12. அதிபர் ஆசியுரை
13. கலைமதி சஞ்சிகை வெளியீடு
14. ஸ்ரீமன் நாராயணா (பரதம்)
15. இலக்கிய நாடகம்
16. சிங்கள கலாசார நடனம்
17. பிரதம விருந்தினர் உரை
18. பரிசளிப்பு
19. சமூக நாடகம்
20. நன்றியுரை
21. தேசிய கீதம்


***with best compliments from***

# BATCH OF





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

# WIS

Wijay Kanagasundaram
BA(Hons), MSc Director

## ACCOUNTANCY
We Make It All Add Up

E wijay.kanagasundaram@wis-accountancy.co.uk

T +44(0)207 5588 213 M +44 (0)783 8133 090

WIS Accountancy Ltd.

247 New North Road, London N1 7AT

www.wis-aoountancy.co.uk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

N.Dinesh
M.Ravindakumar
B.C. Pradeep
M.Ikram
K.Kathees
M.Azeem

P.Chandrasingh
M.Malhar
A.Abdulla
M.Manazir
P.Subagaran

S.Chrishnasri
T.Prassannah
M.Paramaswaran
M.Rishad
S.Sanjeevkumar
S.Kalingam
S.P.Sadeesh



# O/L 95 & A/L 98

A.Praween
K.Wijayababu
P.Prabaharan
R.Sivakumar
T.Rifki

M.Ifam
M.H. Riyas
M.Premkumar
J.Devaprasath
A.Suresh

M.Ifran
M.Imran
M.Shiraz
P.Kenneth
B.Pathepan

T.Partheepan
M.Fahim
S.Sajeeswaran
S.Mohanraj
J.Allossius

M.H.H.Sadigue
S.Mohan
R.Sudharashan
N.Mohankumar
M.Nithiyanandan

S.Sujeewan
T.Tyron
N.Nirmalan
D.Jesudasan
S.Ravishankhar

M.Fezor
S.Sivakumar
M.Raufdeen
T.Surendramn
M.Jotyraj

A.Thivagar
V.V.Prasath
P.Suthakar
S.Rajakulendran

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயமாகும் இனிய காலை

கதிரவன் வரவினால் காலை மலர்கிறது
மலர்ந்த காலையில் மலர் மணம் கலக்கிறது
கலக்கும் மணத்திலே கருவண்டு ரீங்காரமிடுகிறது
ரீங்கார ஒலியிலே சங்கீதம் பிறக்கின்றது.

ஒளிரும் ஆதவனின் கதிர்களால் உலகு ஜொலிக்கிறது
உறங்கிய உயிரெல்லாம் உன்வரவால் உதயமாகிறது
இளந்தென்றல் தழுவும்போது இதமாக இருக்கிறது
இரை தேடும் புள்ளினங்கள் இன்பமாக சிறகடிக்கிறது.

விடிவெள்ளியும் விடியலில் தன்னொளி மறைக்கிறது
துள்ளியோடும் கன்றினால் பசுவின் மடி கனக்கிறது.
கதிரவனின் ஒளியிலே விண்மீனும் ஒளிக்கிறது
பால் நிலாவும் பனித்துளிபோல் தொலைகிறது

இனிதாக இவ்வுலகில் பூபாளம் கேட்கிறது
இளமையாக உதயமாகும் இன்றைய நாளின் தேடல்
இவ்வலையத்தில் அனைவருக்கும் இதமாக தித்தித்திடவே
இன்றை விடியல் இங்கிதமாய்ப் புலரட்டும்

ஆக்கம் : - ப. நிரூஷன்
10T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த ஒரு நாள் .........

பிரிவுத்துயரத்தின் பின் தாயை சந்திக்கும் போதும் தாய் நாட்டை சந்திக்கும் போதும் ஏற்படுகின்ற இன்ப உணர்வு ஒன்றுதான்.

கடந்த நான்கு வருடங்களாக லண்டனில் பொறியியல் துறைக்கல்வியை படித்த என்னை மீண்டும் என் தாய்நாட்டுக்கு பாதுகாப்பாக கொண்டு வந்த விமானிக்கும் விமானத்துக்கும் நான் என்னவென்று என் நன்றியை சொல்வது. தாய் மண்ணில் கால் தடம் பதித்ததுமே நான் உயர் கல்வியை கற்ற எனது பாடசாலை நாட்கள் என் கண் முன் நிழலாடின. கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் போல் கடைசி நேர பரீட்சை ஆயத்தம், கடைசி நேர சண்டைகள், நண்பர்களுடன் சேர்ந்து குழுவாக கற்றல் போன்றவை மறக்க முடியாத அனுபவங்கள்.

இவற்றை எண்ணிக் கொண்டே விமான நிலையத்தை விட்டு வெளியே பாதையோரம் வரும் போது " பீப் பீப் " ஒலி கேட்டு சற்று திரும்பினேன். வேகமாக செல்லும் ஒரு வண்டிச் சாரதி பாதையை பார்த்து மாறத் தெரியாதா? என்று கேட்கும் வகையில் என்னை பார்த்து முறைத்து கொண்டே வண்டியில் தாண்டிச் சென்றது தெரிந்தது. என்ன செய்வது சிந்தனையோட்டத்தை தடுத்து நிறுத்த யாரால் முடியும்?

எனது சக நண்பன் சுனில் அப்போதுதான் கண்டிக்கு செல்வதற்கு ஒரு வாகனத்தை பேசி அழைத்து என்னருகே வருவதை அவதானித்து வண்டியில் ஏறினேன். சுனில் என்னுடன் லண்டனில் கல்வி கற்றவன், அங்கிருந்து என்னுடன் துணையாக வந்தவன் ஆவான்.

இருவரும் காலி முகத்திடல் வழியாக பயணித்து கொண்டு இருந்தோம். அது டிசம்பர் மாதம் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு அடுத்த நாள் என்பதால் வீதியில் ஒரு சந்தடி அற்ற அமைதியும் வழக்கத்துக்கு மாறான ஒரு சூழல் நிலையும் காணப்பட்டது. நானும் சுனிலும் காரின் ஜன்னலின் ஊடாக கடற்கரையை அவதானித்தவாறே கதைத்து கொண்டு இருந்தோம். அப்போது வித்தியாசமான ஒரு காட்சி காணக் கிடைத்தது. கடலில் வழக்கத்துக்கு மாறான முறையில் பேரலை ஒன்று வருவது போல் இருந்தது. சாரதியோ அதனை கண்டு பேயறைந்தவன் போல வண்டியை நிறுத்தினான்.

எனக்கும் சுனிலுக்கும் அது கடற்பேரலை என்பது புரிந்தது. எனவே நாம் உடனே வண்டியை விட்டு இறங்கி சாரதியையும் அழைத்துக் கொண்டு கடலுக்கு எதிர் திசையில் ஓடினோம். எதிரே தூரத்தில் இருந்த தென்னை மரத்தை நோக்கி ஓடி அதன் மேல் நான் ஏறினேன். சாரதியும் அதே போல் ஒரு மரத்தில் ஏறினான். பேரலைகள் கரையை நோக்கி வர வர பெரிதாகிக் கொண்டு வந்தது. வந்த வேகத்தில் வேடிக்கை பார்த்த மக்கள், ஓடிக் கொண்டு இருந்தவர்கள் என அநேகமானவர்களை நீர் வெள்ளம் இழுத்துச் சென்றது. வாகனங்கள் யாவும் நீரில் மிதந்து பிரட்டப்பட்டும் நீரோட்ட வேகத்தால் அடித்து கொண்டும் செல்லப்பட்டன. இவ்வாறே இன்னுமொரு அலை. அதன் பின் மயான அமைதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரை பிணபூமி போல காட்சி அளித்தது. வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டு இருந்தன. புத்திசாலித்தனமாக உயரமான இடங்களில் ஏறி இருந்தவர்கள் இறங்கிக் கொண்டு இருந்தார்கள். " ஐயோ மகே புத்தா !"# " மல்லி ", " ஐயோ அம்மே " என இறந்தவர்களை குறித்து மற்றவர்கள் இடும் ஒப்பாரி எனது மூலையை களங்கச் செய்தது. ஒருவாறு நானும் சாரதியும் கீழ் இறங்கினோம். சுனிலை காணவில்லை என்பது அப்போதுதான் என் நினைவுக்கு எட்டியது.

எனது நெஞ்சினுள் ஒரு கதறல். எனது நண்பனை காணவில்லை. ஒரு வேளை அவனும் ஆழிப்பேரலையால் மாண்டு இருக்கலாம் என்று கருதிய போது வெளியே கேட்ட ஒப்பாரி எனக்குள்ளும் கண்ணீருடன் வரத் தொடங்கியது. சாரதியும் ஒருவாறு என் நிலைமையை புரிந்து கொண்டு என் கையை பிடித்தவாறே விழுந்து கிடந்த பிணங்களை உற்று நோக்கிக் கொண்டே " சுனில் மஹத்தயா " என உரக்க கூப்பிட்டவாறு அவனை தேடலானான். நானும் அவன் இறந்திருந்தால் அருகில்தான் இருப்பான் என்பதால் வேகமாக தேடலானேன். அவனை தேடித் தேடியே இரவாகிவிட்டது.

இறுதியாக பிரேத அறைக்கு அனைத்து பிணங்களும் கொண்டு வரப்பட்டுள்ளது என அறிந்து கொண்டு அங்கு சென்றேன். உறவுகளை இழந்த உறவினர்கள், நண்பர்களை தேடும் நண்பர்கள் என ஒப்பாரியாலும் கதறலாலும் அவ்விடம் நிறைந்து இருந்தது. நானும் கண்ணீருடனேயே நண்பனை தேட வரிசையில் நின்றேன்.

பிரேத அறையை நெருங்க நெருங்க கல் நெஞ்சன் என்று பெயர் பெற்ற எனது நெஞ்சும் கரைந்து கொண்டு இருந்தது. அறை வாசலை அடைந்ததும் சுனிலைப் போலவே ஒருவரினது சடலம் காணப்பட்டது. நானும் அதனை சுனில் என எண்ணி கதறலுடன் அவனருகே சென்று நோக்கினேன். அது அவனல்ல. அவ்வாறே அனைத்து பிணங்களையும் பார்த்தாயிற்று. அவனை காணவில்லை. இறைவனிடம் அவன் பத்திரமாக இருக்க வேண்டும் என வேண்டிக் கொண்டே திரும்பலானேன். வரும் வழியில் எனக்கு ஒரு இன்ப அதிர்ச்சி. துன்பமும் இன்பமும் எவ்வாறு சேர்ந்து வரும் என்பதை நான் அன்று உணர்ந்தேன். பிரேத அறைக்கு வரும் வரிசையில் சுனிலும் நின்று கொண்டிருந்தான். அவன் என்னைக் கண்டதும் என் பெயரை சொல்லிக் கூப்பிட்டவாறே ஆனந்தக் கண்ணீருடன் என்னை வந்து தழுவிக் கொண்டான். எனக்கு பேச்சே வரவில்லை. சாரதி " மஹத்தயாவ ஹெம தெனம அபி ஹெவ்வா " என சுனிலிடம் கூறினான். சாரதிக்கு ஒரு தொகைப்பணத்தை வழங்கி விடைபெற்றுக் கொண்டு நான் சுனிலுடன் எனது பிறந்த ஊரான கண்டியை நோக்கி நடந்தேன். பேரழிவொன்றை சந்தித்தும் எதுவும் தொலைக்காதவன் போல.

ஏ. அர்ஷாட் அஹமட்
13T விஞ்ஞானபிரிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய உலகில் தமிழ்மொழியின் நிலை

மொழிகளில் பழம் பெருமைகளையுடைய செம்மொழியாகத் திகழ்வது தமிழ்மொழியாகும். பல்லாயிரம் வருடங்களாக சொற்சுவை பொருட்சுவை பொருந்திய பல இலக்கியங்களை எமக்களித்தது மட்டுமல்லாமல் பல பண்டிதர்களையும் புலவர்களையும் எம்மத்தியிலே தமிழ்மொழி உருவாக்கியுள்ளது. கம்பர், ஔவையார், நக்கீரர், பாரதியார், காளமேகப்புலவர், திருவள்ளுவர் மற்றும் பண்டிதமணி என்று பல அறிஞர்களைக் கூறலாம். இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட தமிழ்மொழியை மேலும் வளர்ச்சி இன்னும் பல கவிஞர்களும், பண்டிதர்களும், பெரியார்களும் அரும்பாடுபட்டு வருகின்றனர்.

ஆனாலும் இந்த நவீனயுகத்தில் வாழும் மக்கள், தமிழுக்கு அரும்பணிபுரிந்த அந்த தமிழ்ப் பெரியார்களின் முயற்சிகளை வீணடித்து சிதறடிக்கும் வகையில் நடந்து கொள்கின்றனர். இம்மக்கள் தம் தாய்மொழியாம் தமிழ்மொழிக்கு தொண்டாற்றுவதற்கு மாறாக அந்நிய மொழிகளான ஆங்கிலம், சிங்களம் போன்றவற்றை தம் வாழ்வோடு இணைத்துக் கொண்டு அவற்றை மேம்படுத்த முனைகின்றனர்.

இதனால் நற்றமிழின் பாரம்பரியம் மற்றும் தனிச்சிறப்புக்கள் குன்றி காலத்தோடு சிதைந்து அழிந்து போகக்கூடிய ஒரு நிலை எதிர்காலத்தில் ஏற்படக்கூடும் என்பதில் ஐயமேதுமில்லை. ஆதலினால் நம் தாய்மொழியாம் தமிழ்மொழியின் அந்த அவலநிலையை தவிர்ப்பதற்காக தமிழர்கள் நாம் ஒன்றுபட்டு செயற்படுதல் அவசியமாகும்.

இன்று கூடுதலான தாய்தந்தைமார்கள் தங்கள் பிள்ளைகளை ஆங்கிலமொழி மூலம் இயங்கும் பாடசாலைகளில் சேர்ப்பித்து விஞ்ஞானம், கணிதம், வரலாறு போன்ற எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்தில் கற்பிக்க முன்வருகின்றனர். தங்கள் பிள்ளைகளை தாய்மொழியில் கல்வி கற்பிக்க அவர்கள் தயக்கம் காட்டுகின்றனர். ஏனெனில் இன்று உயர்தரக் கல்வியிலும் ஏனைய உத்தியோக அலுவல்களிலும் ஆங்கிலமே முக்கியத்துவம் வகிக்கின்றது அன்றி தமிழல்ல.

ஆதலால் இந்நிலை மாறி நம் கல்வி நடவடிக்கைகளிலும் தொழில் ரீதியான செயற்பாடுகளிலும் தமிழிற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். தமிழர்கள் தங்கள் தாய் மொழியான தமிழிற்கே முன்னுரிமை அளிக்க வேண்டும்.

அடுத்ததாக தமிழின் முன்னேற்றத்திற்கு பெரும் தடங்களாக தமிழ் சினிமாவும், ஊடகங்களும் அமைகின்றன. இன்று வெளிவரும் திரைபடங்களில் தமிழின் சிறப்புத் தன்மைகளை அவமதித்து இகழும் வகையில் தமிழ் உபயோகப்படுகின்றது. இன்று தயாரிப்பாளர்கள் அரசியல் விவகாரம், காதல், கொலை, களவு, பழிதீர்த்தல் போன்ற கருப்பொருள்களை மையமாகக் கொண்டு திரைப்படங்களை உருவாக்குகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் எமக்கே உரித்தான தமிழ்பாங்கும், எமது கலாசாரமும் தமிழிசையும் இதைக்கொண்டு கெடுக்கப்படுவதனை எம்மால் அவதானிக்க முடிகின்றது. சினிமாவைப் போலவே ஊடகங்களும் தமிழை வளர்க்கத் தவறுகின்றனர். ஆதலால் ஊடகங்களும் தமிழை வளர்க்கத தவறுகின்றனர். ஆதலால் ஊடகங்களும் மொழியினை வளர்க்கக்கூடிய நிகழ்ச்சிகளை நடாத்த வேண்டும்.

நாளைய உலகில் தமிழை ஒரு அவலநிலைக்குத் தள்ளிச் செல்லும், இந்த மக்களின் அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தை நாம் அருள, வழிகளைக் கையாள வேண்டும். அதற்கு முன்பாக மக்களின் இந்த மாற்றங்களுக்கான காரணங்களையும் அறிய வேண்டும். கல்வி நடவடிக்கைகளிலும், சினிமா மற்றும் ஊடகங்களிலும் தமிழின் மாற்றத்தை இதற்கு உதாரணங்களாகக் கொண்டோம். இது போன்ற இன்னும் பல காரணிகளை, பலதுறைகளையும் உள்ளடக்கி நாம் சுட்டிக் காட்டலாம்.

இக்காரணிகளின் முன்னேற்றத்திற்கு மூலகாரணமாக அமைவது, இன்று தமிழ்மக்களிற்கு ஏற்பட்டிருக்கும் மேல்நாட்டு நாகரிகத்தின் மேலான விபரீதமான மோகமும், அவர்கள் தன் தாய்மொழியின் முன்னேற்றத்தை ஒரு பொருட்டாக எடுக்காத தன்மையும் ஆகும். இதனால் நம் தாயான தமிழ்மொழி எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொறுப்பு எமக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அதற்காக பள்ளி மாணவர்களாகிய நாம் இப்போதிலிருந்தே எம்மாலான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். ஆதலினால் நாம் மேற்குறிப்பிட்ட காரணிகளை கருத்திற்கொண்டு தமிழ்மக்களின் பூரண ஒத்துழைப்பையும் கொண்டு, நாளைய உலகில் நம் தாயான பைந்தமிழை போற்றி வளர்ப்போம். இதனை நாம் எல்லாம் வல்ல இறைவனை வணங்கி, அவரருளோடு, புகழ் மங்காத் தமிழை புவனமுழுவதும் ஒளிபரவச் செய்வோம்.

வாழ்க தமிழ்மொழி !

சி.கிஷோரி ஜெயாந்த்

தரம் - 10 D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவு

இம்மையின் முடிவே மறுமை
இளமையின் முடிவே முதுமை
பிறப்பின் முடிவே இறப்பு
துன்பத்தின் முடிவே இன்பம்
தகைப்பின் முடிவே நகைப்பு

முயற்சியின் முடிவே பலன்
ஆவேசத்தின் முடிவே அமைதி
ஆக்கத்தின் முடிவே அழிவு
ஆரம்பத்தின் முடிவே இறுதி
இருளின் முடிவே ஒளி

தொன்று தொட்டு வரும்
இவ்வுலக நியதிக்கு மானிடனின்
உயிருள்ளதும் உயிரற்றதும்
இடையிலான வாழ்வுதான்
விதிவிலக்கா? இருந்தும்
கருவில் புகும், சாவில் பிரியும்
உயிரின் முடிவுதான் என்னே? ?

ஜூட் பெனடிக்,
தரம் 10 T

## படிக்கனும் உயரனும்

நல்ல நல்ல புத்தகம் தேடி
நல்லாப் படிக்கணும் - அதை
நலமாய் முடிக்கணும் - உன்
உள்ளம் என்றும் இனிமை பொங்கி
உயரப் பறக்கணும் - அது
உலகில் சிறக்கணும் - இந்த
மண்ணில் உள்ள உயிர்கள் எல்லாம்
மகிழ்ந்தே சிரிக்கணும் - வெற்றி
சிறகை விரிக்கணும் - என்றும்
கண்ணைப் போல தமிழை போற்றி
வாழ்த்தித் துதிக்கணும் - மனதில்
ஏற்றி மதிக்கணும்
நல்லவர் தீயவர் ஒன்றாய் வாழ
நன்மை புரியணும் - நாளும்
உனக்குத் தெரியணும் - இந்த
மண்ணில் இருந்து விண்ணைத் தொடும்
விந்தை தெரிந்திருக்கணும்
இதை நன்றாக புரிந்திருக்கணும்

ப.மதூஷன்
தரம் 5 T

## கிடைக்குமா முடிவு?

தாய் மொழியாம் தமிழ்மொழி
சேய் தாயை அழைப்பது "மம்மி"
தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில்
அரட்டை அடிப்பது பெருமை என்றவன்
தமிழ் எனும் அழையாப் புதையலை
அலசினால் அவனுக்கு கிடைக்குமா
முடிவு ....... ?
முடியுமானால் நீயாவது பெற முயற்சி
என் அருமைத் தமிழனே ............

ஏம்.என்.சய்புல்லா
தரம் 10T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புத் தோழனாய் ஆலோசனை.....

என் மாணவனே ...............

தொட்டுப்பார் உன் மனசாட்சியை .......
கேட்டுப்பார் உன் சாட்சியை அது
வாயடைத்த ஊமையாய் - உன்முன்
ஆயிரம் ஊமை பாஷைகள் பேசும் - உன்
தந்தையின் கனவு வைத்தியராவது... தம்பியே..
நீ தந்தைக்காக வைத்தியராகவிட்டாலும்
பரவாயில்லை அவரை நீ
நோயாளி ஆக்கி விடாதே .... ஆபீசிலும்
அயலவரிடமும் ஆயிரமாயிரமாய் கடன்களை
வாங்கித்தானேடா உனை
அந்தோனியார் கல்லூரிக்கு அனுப்பினார்
அவருக்காய் இதைக்கூட செய்யமாட்டாயா?
உனைப்பற்றி புகழ்பாடும் - உன் சகோதரனை
பார், நீ 'பைலட்டாய்' மாறி வானவில்
பறக்க மாட்டாயா என பரிதவிக்கும் அவனை
பார் - நீ 'பைலட்டாய்' மாறாவிட்டாலும்
பரவாயில்லை. நீ தொங்க அவனை
'பர்சூட்டாக' மாற்றிவிடாதே .......
உன்னையும் புனிதனாக்க துடிக்க உன்னை
சுற்றியுள்ள உன் ஆசான்களைப்பார் - நீ
புனிதனாக மாறாவிட்டாலும் பரவாயில்லை
அவர்களையும் மனிதனாக பார்க்க மறந்து விடாதே
உன்னையே நம்பி உன்னையே தாங்கி
உனக்காய் எதையும் இழக்க
காத்திருக்கும் உன் அன்னையைப் பார்.
என் மகன் எத்தனை உயர்ந்த பாத்திரங்களாய்
அவள் முன் வருவதாய் கனவுகள் காண்கின்றாள்
மகனே நீ நல்ல பாத்திரமாய் வராவிட்டாலும்
பரவாயில்லை உன் தாய்க்கு நல்ல மகனாக
இருப்பதற்காகவாவது படைத்திடு நல்ல பண்புகளை
ஆசானாக அல்ல அன்புத் தோழனாய் என்
ஆலோசனை

S. வசந்தன்,(ஆசிரியர்)
புனித அந்தோனியார் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணயமுள்ளவன்!

**1952-ல் நடந்த உண்மை சம்பவம்**

லண்டனில் ஓர் இந்திய மாணவன் தெருவில் வந்துக் கொண்டிருந்த போது, ஓர் ஏழை ஆங்கிலேயன் கிழிந்த உடையுடன் அவனைப் பின் தொடர்ந்தான்.

இந்திய மாணவன் தன் வீட்டுக்குள் நுழைந்தபோது, ஏதோ நிழலாடவே திரும்பிப் பார்த்தான். ஆந்த ஏழை நின்று கொண்டிருந்தான்.

" உனக்கு என்ன வேண்டும்? "

"பழைய காற்சட்டை வேண்டும்?"

இந்திய மாணவன் வீட்டுக்குள் சென்றான். தன்னிடமுள்ள ஒரு பழைய காற்சட்டையைக் கொண்டு வந்து அவனுக்குக் கொடுத்து அனுப்பினான்.

மறுநாள் ........

இந்திய மாணவன் குடியிருந்த வீட்டுக்காரர் அவனிடம் ஐந்து ஷில்லிங் தாள் காசு ஒன்றைக் கொடுத்தார்.

"எதுக்கு சார் இந்தப் பணம்?"

நேற்று யாரோ ஒரு பிச்சைக்காரனுக்கு பழைய கால் சட்டை ஒன்றைக் கொடுத்தாயாமே ...... அந்த சட்டையின் பைக்குள்ளே இந்தப் பணம் இருந்ததாம். உன்னிடம் திருப்பிக் கொடுப்பதற்காக இங்கே வந்தான். நீ வீட்டில் இல்லை. என்னிடம் கொடுத்து விஷயத்தைச் சொன்னான். " அவன் நாணயமுள்ளவன்" என்று வியந்தான் இந்திய மாணவன்.

M.F.M. அர்ஷத் - 5 D

தொகுப்பு :- சுட்டி சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி

இரு நூறு ஆண்டுகளாக எட்டிப் பார்க்க....
இருப்புத இன்றும் இருபத்தைந்து வருடம்
இன்றைய நிலையும் அன்றைய நிலையில்
இரட்டிப்பாய் இருக்கணும் எம்மவர் வாழ்வு...?

இணையத்தின் இமயத்தில் இன்றைய எம் உலகம்
தவழ்கின்ற பொழுதினிலே தவிக்கின்றது உலகம்
காலத்தின் தேவைக்கு கண்டிடணும் பல மாற்றம்
புதுமைகள் படைத்திட புரியணும் பல வெற்றி....

ஆயிரம் தடைகள் ஆண்டாண்டு காலமாய்
எழுந்ததும் உயர்ந்ததும் மாண்டதும் போதும்
வையக வாழ்வில் வாலிப வாழ்வு
புரியணும் பலவும் புதுமைகள் தானே....

சமுதாய தேடல் கல்வியா? செல்வமா?
சரித்திரம் படைக்க தேவையோ கல்வி....
கசடறக் கற்க கல்வியை நாடி
கடந்ததும் உண்டு கண்ணீர் கதைகள்.....

இதனால் புறப்படு இன்றை இளைஞனே
புதுமைகள் படைத்திட புறப்புடு தோழா...
இத்தனை காலமும் ஏமாந்ததும் போதும்
எழுந்துப் பார் ஒரு தரம் விழித்தெழும் சமுதாயம்

இருந்தாலும் போதும் இடிப்பட்ட தெல்லாம் போதும்
இனிமேலும் நாமும் இணைவோமே ஒன்றாய்
இன்றில்லை நாளை விடியும் நற் பொழுது
இதனால் தான் நானும் தேடுகின்றேன் கல்வி
எனும் ஒரு விடியலை....!

ஆ.பிரபுராம்,
13T கணிதப்பிரிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்கள் எந்த வகை?

கோபமாகப் பேசினால்
குணத்தை இழப்பாய் !
அதிகமாகப் பேசினால்
அமைதியை இழப்பாய் !
வெட்டியாகப் பேசினால்
வேலையை இழப்பாய்!
வேகமாகப் பேசினால்
அர்த்தத்தை இழப்பாய் !
ஆணவமாகப் பேசினால்
அன்பை இழப்பாய் !
அவதூறாகப் பேசினால்
இறையருளை இழப்பாய் !
அநாகரீகமாகப் பேசினால்
ஆதரவை இழப்பாய்!

S.சாகில் மொகமட்
தரம் 3 T

## தாயே தெய்வம்

முந்நூறு நாட்கள்
கருவோடு எனைச் சுமந்து
உன் மடியினில் கனம்
என்றும் பாராமல் பசியோடு
நீ இருந்து என்னை
பெற்றெடுக்க நீ கல்லறைக்குச்
சென்று திரும்பினாய் தாயே !
உன் இரத்தத்தைப் பாலாக்கி
ஆதை நீ எனக் கூட்டித்
தாலாட்டிச் சீராட்டிக் கண்ணை
இமை காப்பது போல் என்னை
தினம் காத்தாய் தாயே ! உன்
பாசம் எனும் ஆழ்கடலில் அன்பு
எனும் முத்தெடுக்க வைத்தாய்
எனக்கு துன்பம் எனும் போது
மனத்திற்கு ஆறுதல் தருவாய்
நீயே என் கண்ணில்
கண்ணீர் வந்தால் துடித்திடுமே
உன் மனது தெய்வத்திற்கு
நிகர் நீயே. தரணியிலே நம்
கண்கண்ட தெய்வமும்
நீரே தாயே

மறிஷன் ரொஹிட் ஜோர்ஜ்
தரம் - 5 D

## சிறப்புறும் கண்டி நகர்

சிறந்த நகராம் கண்டி நகர்
எம் நாட்டின் மத்திய தலை நகரம்
அழகிய மலைகள் சூழ் நகராம்
சிறப்புக்கள் நிறைந்த திரு நகராம்

மலையின் அடியில் குளமொன்றை,
அமைந்தே அழகுறும் பெருநகராம்
புத்தர் அவரின் புகழ் மிகுந்த
புனித தலதா மாளிகையும் இங்குண்டாம்

நாட்டின் பெரிய தாவரப் பூங்கா
தழைத்தே ஓங்கும் தலை நகராம்
நான்கு இனமும் நண்பர்களாய்
சேர்ந்தே வாழும் இணை நகராம்

ரவிச்சந்திரன் சங்கீத்
தரம் - 4 D

## தாய்

உதிரத்தைத் தினமூட்டி
பால் என மெருகூட்டி
பசி தீர்க்க பாலூட்டினாள் - தாய்
பத்து மாதம் தன் கருவறையில்
பல இன்னல்கள் தாங்கி சுமந்து
மறுப்பிறப்பெடுத்து என்னை
இவ்வுலகிற்கு அறிமுகம் செய்த
என்னன்பு தாயே !

இன்பங்கள் நமக்களித்து
துன்பங்கள் அவள் சகித்து
பல தியாகங்கள் செய்து
எம்மை வெற்றியின் சிகரம் தொட
வைத்த சிறகங்களாய்
வையகம் எம்மை போற்ற
வழி செய்தவளும் என்னுடைய தாயே

F.M. இFாம்
தரம் - 3D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தங்கள் எங்கே?

காணாமல் போய்விடும் கல்லூரி வசந்தங்கள் - ஆனாலும்
என்ன தோழர்களே அமர்ந்திருப்போம் நினைவுகளில்
அந்தோனியார் கண்ட செல்வ புதல்வர்கள் - நாம்
எழில் கொஞ்சும் மலையக புதல்வர்கள்

பிடியெடுத்து போராடும் கோரமென்ன? எம் கல்லூரி
வசந்தங்கள் காணாமல் போய்விடும் ஆனாலும் என்ன?
தோழர்களே அழியாத கோலங்கள் அலையும்
கடல் போல அலைபாயும் வாழ்நாளில்

இறைச்சிக் கூழும் ஒடியற் கிழங்கும் முகிழும்
தீவிலே தேயிலை சொறியும் தேயிலை தேச
சஞ்சாரி நான் என்னுடன் சங்கமித்த பெருங்கடல்
இக்கல்லூரி ஆனாலும் என்ன தோழர்களே!

எம் ஆற்றாமை புரியாத நேசமிது
இந்துமா கடல், நடுவே செந்நீரை சொறிந்து
வரும் கூற்றுவர் நேசமிது! கழுகுகளாக நாம்
உலகமெல்லாம் பறந்து சென்றிடுவோம் - நாங்கள்

எங்கே தொழில் கிடைத்தாலும் - காணாமல்
போகும் எம் கல்லூரி வசந்தங்கள் - உங்கள்
நினைவுகள் என் - மனதில்
அலையும் ! அலைபாயும் ! நினைவுகளே

என். டென்சில் டேவிட்
13 T வர்த்தகம் பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி

- தமிழ்மொழி எந்தன் தாய் மொழி ஆகும்.
- தமிழ்மொழியின் சிறப்பு உலகெங்கும் பரவியுள்ளது.
- தமிழுக்கு அமுதென்று பெயர்.
- தமிழ் மொழியை தாயிலும் மேலாக போற்றுவோம்.
- தமிழ் மொழியை வளர்ப்பது எமது கடமையாகும்.

லுஷாந்தன்
தரம் - 2 D

# மயில்



- பறவைகளில் அழகானது மயிலாகும்.
- இது அழகாக தோகை விரித்து ஆடும்.
- இதற்குப் பல வர்ண நிறமுடைய இறக்கைகள் உண்டு.
- இது அதிகமாக காட்டில் வாழ்ந்தாலும் இதனை சில கோயில்களில் காணலாம்.
- இது பூச்சிகள், புழுக்கள், தானியங்களை விரும்பி உண்ணும்.

M.R.அப்துல்லா
தரம் - 2 D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மொழியான
# தமிழ் மொழியாம்

தமிழராய் பிறந்திட
மாதவம் செய்திட்டோம்
நம் தாய் மொழியாம் தமிழ்
இன்று செம் மொழியாய்
மலர்ந்து விட்ட மாண்பினைக் கண்டு
பேருவகை அடைந்திடுவோம்!

செம்மொழியாம் தமிழ்மொழியின்
சிறப்பினை போற்றிடவும்
என்றென்றும் தமிழ் மணம்
உயிர்ப்புடன் பரவிடவும்
தமிழ் எங்கள் உயிருக்கு
நேராய் வாழ்ந்திடுவோம்

தரணி எங்கும் தமிழ் ஓசை
இடி ஒலியாய் முழங்கிடவும்
அவணி எங்கும் தமிழ் மக்கள்
மேன்மையுடன் வாழ்ந்திடவும்
நம் அன்னையாம் தமிழ் மொழியை
சிரம் தாழ்த்தி வணங்கிடுவோம்.

கி. சந்தீப்
தரம் - 9T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானம்

கீதாவிற்கு சிறுவயதில் இருந்தே கண் தெரியாது. இதுவே அவள் பெற்றோர்களுக்கு பெருங்குறையாகவும் கவலையாகவும் இருந்தது. சீதாவை அவள் பெற்றோர் நிறைய மருத்துவர்களிடம் கூட்டிச் சென்று அவளது கண்களை பரிசோதித்தனர். ஆனால் யாராவது ஒருவர் கண் தானம் செய்ய முன் வந்தால்தான் சீதாவிற்கு கண் பார்வை கிடைக்கும் என்று மருத்துவர்கள் கூறி விட்டனர். அன்று ஞாயிற்றுக்கிழமை ஆதலால் அனைவரும் வீட்டில் இருந்தனர். அப்போது அங்கு ஒரு பிச்சைக்காரி வந்தாள். "அம்மா தாயே பிச்சை போடுங்கள்" என்றாள். சீதாவின் தந்தையோ "ஒன்றும் இல்லை போ! போ!" என்று தட்டி விட்டார்.

நாட்கள் ஓடின. ஒரு நாள் சீதாவின் குடும்ப டாக்டர் தொலைபேசியில் பேசினார். அதாவது யாரோ ஒருவர் இறந்ததாகவும் அவரின் கண்களை சீதாவிற்கு பொருத்தினால் நிச்சயம் கண் கிடைக்கும் என்று கூறினார். இதைக் கேட்ட சீதாவின் பெற்றோர் சீதாவை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றனர். அங்கு இறந்து கிடந்தவளை பார்த்ததும் சீதாவின் பெற்றோர் அதிர்ச்சி அடைந்தனர். அது வேறு யாரும் இல்லை. சீதாவின் தந்தை விரட்டிய பிச்சைக்காரி. பிறகு சீதாவிற்கு கண் பார்வை கிடைத்தது. சீதாவும் பெற்றோரும் இறந்த பிச்சைக்காரிக்கு அஞ்சலி செய்தனர்.

எம்.எப். இமாத்
தரம் - 5 D

# நல்லொழுக்கம் ஒருவரின் வாழ்வை உயர்த்தும்

நல்லொழுக்கத்தைப் பற்றி வித்துவான் க. வேந்தனார் கூட ஓர் பாட்டை இயற்றியுள்ளார். அதில் முதலாவது பந்தி அல்லும் பகலும் நல்ல ஆர்வத்தோடு நீங்கள் கல்வி கற்று நன்மை கருதி வாழ வேண்டும்" என்று தொடங்குகின்றது. நல்லொழுக்கத்தோடு வாழ்ந்தால் தான் சமூகம் எம்மை மதிக்கும். நாம் எவ்வளவு பணக்காரனாக இருந்தாலும் எமக்கு ஒழுக்கம் வேண்டும். ஓர் அரசனின் குடும்பமாக இருந்தாலும் ஒழுக்கமும், நேர்மையும் வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒருவர் தீய பழக்கத்தைப் பின்பற்றினால் அவரின் குடும்ப மானமே போய்விடும். நாம் சிறுவயதிலிருக்கும் போதே எமது பெற்றோர்கள் எமக்குப் பல நல்லொழுக்கங்களைக் கற்றுத் தருகின்றார்கள். ஆனால் மாணவர்கள் ஒரு வயதில் நண்பர்களுடன் சேர்ந்து பல தீய பழக்கங்களைப் பின்பற்றுகின்றார்கள். திருவள்ளுவர் "ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து வேண்டும். பனுவல் துணிவு" என்று அவர் இயற்றிய திருக்குறளில் கூறி இருக்கின்றார். எனவே நாம் ஒழுக்கமுடையவர்களாயிருந்து எமது வாழ்வை உயர்த்துவோமாக.

S.சிதுர்ஷன்
தரம் - 5 D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக்கோர் அழைப்பு

அன்பே,
அன்று நீ உலாவித் திரிந்த காலம்
இன்னலின் நிழலற்றிருந்தது ஞாலம் - இன்று
கருமையின் பிடியில் சிக்கி நின்று
கடிகையில் திசையின்றி திண்டாடிடுமே

முதிகெட்டது மாண்பின் மிகையாய்
விதியிழந்தது விருப்பின் வினையாய் - நிர்
கதி நிலை நிலை பெற்றிட இந்த
சதி யார் இட்ட நியதியோ

சுட்ட பொன் கிரீடமாய் திகழ்ந்திட
தட்டிய கரும்பொன் வாளாய் மிளிர்ந்திட உளி
செதுக்கிய கல் சிற்பமாய் பொதிந்திட
பதுக்கிய அன்பு ஏனோ அற்பமானதே

தோழனின் தோல்வியிலே எழுச்சி
தோள் கொடுத்த உறவுக்கே சூழ்ச்சி தன்
வழி தவறியவனின் விழி பறித்திட்டால்
வாழி என்றிடுவர் இன்று பாரினிலே

சுவாசக் காற்றினில் வாசம் தேடி
மூச்சை எடுத்திடும் ஜீவனிங்கே வெறும்
நாலடி முல்லை நலமாய் நின்றிட
தேரடி கொடுத்த பாரிதான் எங்கே

அஞ்ஞாதவாசம் இராமனுக்கு பாரதத்தில்
அஞ்ஞானவாசம் மானிடனுக்கு நிஜத்தில் - உயிர்
கொலை அறுபத்தைந்தாம் கலை
களவு கற்றிட குருகுலம் இங்கே

மண்ணகம் நீ பிரிந்தது தெரியவில்லை
என்னகம் உதிரம் சிந்தும் வரை நீ
காரிருள் கரைந்திட பொழிந்திடு உன்
திருவருளை இருமுறை மட்டும்

S. மோபிர்சாந்த்,
2011 A/L (Bio)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்களும் இலக்கியப் படைப்புகளும்

1. மகாபாரதம் (வடமொழி) - வேதவியாசர்
2. தமிழ்மொழி - வில்லிபுத்தூர் ஆழ்வார்
3. இராமாயணம் - வால்மீகி
4. கம்பராமாயணம் - கம்பர்
5. சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள்
6. மணிமேகலை - சீத்தலைச் சாத்தனார்
7. சீவகசிந்தாமணி - திருத்தக்கதேவர்
8. குண்டலகேசி - நாதகூத்தனார்
9. நளவெண்பா - புகழேந்திப்புலவர்
10. தொல்காப்பியம் - தொல்காப்பியர்
11. இராம நாடகம் - அருணாசலக் கவிராயர்
12. சீறாப்புராணம் - உமறுப்புலவர்
13. பெரியபுராணம் - சேக்கிழார்
14. தேம்பாவணி - வீரமா முனிவர்
25. சாகுந்தலம்/மேகதூதம் - காளிதாசர்
26. கீதாஞ்சலி, சாண்டாலிகா - ரவிந்திரநாத் தாகூர்
27. ரத்னாவளி, பிரியதரிசிகா - ஹர்ஷர்
28. இரட்சனிய யாத்திரிகம் - கிருஷ்ணப்பிள்ளை
29. மதங்கசூளாமணி - சுவாமி விபுலானந்தர்
30. பாஞ்சாலி சபதம் - சுப்பிரமணிய பாரதியார்

ஆக்கம் :வாஹிட் அஹமட் சனா
தரம் - 8T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பு

மனிதனை மனிதனாக வாழவைப்பது அறிவு. இந்த அறிவினை மனிதன் பல வழிகளில் இருந்து பெற்றுக் கொள்கின்றான். அவற்றுள் சிறந்த சிக்கனமானதோர் வழியே வாசிப்பு ஆகும். ஒரு தனி மனிதன் தன் நாளாந்த வாழ்விலே கிடைக்கும் நூல்களை, கட்டுரைகளை, மாதாந்த ஏடுகளை தினசரிகளை கண்ணினால் பார்த்து மனதிலே பதித்துக் கொள்ளுதலை வாசிப்பு என்று வரையறுக்கலாம்.

"கற்றது கை மண்ணளவு கல்லாதது கடலளவு" என்பதற்கிணங்க நாம் கற்றுக் கொள்ள வேண்டியது இன்னும் ஆயிரம் மடங்காகின்றது. ஆகவே பள்ளியிலோ, பல்கலைக்கழகத்திலோ எம்மால் தெரிந்து கொள்ள முடியாத விடயங்களை எம் வாழ்நாளில் ஒரு நூல் நிலையத்தில் கழிக்கும் சில மணிநேரம் எமக்கு சொல்லித் தருகின்றன. வாசிப்புக்கு வயதில்லை. எம் உடலை விட்டு உயிர் பிரியும் வரை வாசித்துக் கொண்டே இருக்கலாம். எம்மில் பலருக்கு வாசிப்பு என்றாலே பாகற்காயைப் போல் கசக்கும். கசக்கின்ற வாசிப்பை இனிப்பாக்கி இதிலே ஆர்வமூட்டும் விதத்தில் "புத்தகங்கள் ஞானப் பெட்டகத்தை திறக்கும் சாவிகள்" என்கிறார் அறிஞர்.

எனவே அன்றாடம் எம்மோடு பழகும் அறிவுக்களஞ்சியங்களை, அறிவுப் பெட்டகங்களை வாசித்துக் குறைகளை நீக்கி நிறைகளைப் பெற்று " வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுகின்றார்" என்பதற்கிணங்க எதையும் தாங்கும் இதயத்தோடு நாளைய உலகின் நம்பிக்கை நட்சத்திரமாக வாழ்வோமாக.

ஆக்கம் :- சஞ்சீவ்
தரம் - 3[D]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழை சொல் அம்பலம் ஏறுமா?

ஒரு ஊரில் ஒரு பணக்காரர் வீடு இருந்தது. அந்த வீட்டில் நாற்பது வயதுடைய ஆணும் அவனின் மனைவியும் அவர்களுக்கு இரண்டு குழந்தைகளும் இருந்தனர். அந்த வீட்டில் ஒரு வேலைக்காரன் இருந்தான். அவன் பெயர் குப்புசாமி. அவன் மிகவும் சாந்தமாக இருப்பான். எல்லா வேலையும் சொன்னவுடனே செய்வான். அந்த வீட்டின் குடும்பத் தலைவனின் பெயர் ராஜா. அவன் ஒரு பணக்காரனாக இருந்தாலும் ஒரு பேராசைக்காரன். அவன் மனிதர்களிடமிருந்து பணம், நகை ஆகியவற்றை மிரட்டி எடுத்து வீட்டிற்கு கொண்டு செல்வான்.

அதுவே அவனுடைய தொழிலாக இருந்தது. அவனுக்கு பத்து அடியாட்கள் இருந்தனர். அவர்களை வைத்துதான் மனிதர்களிடமிருந்து பணம், நகை ஆகியவற்றை எடுப்பான். அந்த பத்து அடியாட்களும் இரவில் நகை கடைக்குச் சென்று நகைகளை திருடிக் கொண்டு போய் ராஜாவிடம் கொடுப்பார்கள். ஒவ்வொரு நாளும் இப்படியே நடந்தது. வழக்கம் போல் அன்று இரவும் நகைக் கடைக்குச் சென்று நகைகளைத் திருடி வந்து ராஜாவிடம் கொடுத்தார்கள். ராஜா நகைகளை ஒளிப்பதை கண்டு விட்டான். ராஜா குப்புசாமி கண்டுவிட்டான் எனபதை பார்த்தவுடன் பயந்து விட்டான். அவனை வாய்க்கு வந்தபடி ஏசினான். குப்புசாமி எதுவும் பேசாமல் நின்றான். ராஜா இது தொடர்பாக யாருக்கும் கூற வேண்டாம் என்று மிரட்டிக் கூறினான்.

மறுநாளும் வழமை போலவே பத்து அடியாட்களையும், கூடவே குப்புசாமியையும் அழைத்துக் கொண்டு திருட்டுக்குப் புறப்பட்டான் ராஜா. நகைகளை திருடிக் கொண்டு திரும்பிய போது பாதையில் போலீஸ்காரர்கள் இருப்பதைக் கண்ட ராஜாவும் அடியாட்களும் ஒன்றும் செய்ய முடியாமல் திகைத்தார்கள். அப்போது ராஜா நகைகளை குப்புசாமியின் பாக்கெட்டில் போட்டுவிட்டு அடியாட்களோடு வாகனத்தில் ஏறிச் சென்று விட்டான். போலீஸ்காரர்கள் குப்புசாமியைக் கண்டவுடன் அவனிடம் வந்தார்கள். அவனை சோதித்து பாக்கெட்டில் இருந்து நகைகளை எடுத்தார்கள். குப்புசாமி திடுக்கிட்டான். ராஜா அப்போதுதான் ஒரு பயணம் செல்வது போல் அவ்வழியே வந்தான். குப்புசாமியை சோதித்து கொண்டிருக்கும் இடத்திற்கு வந்து கீழே இறங்கி போலீஸ்காரரிடம் இது தொடர்பாக ஒன்றும் அறியாதவன் போல் விபரம் கேட்டான். போலீஸ்காரர்கள் நடந்தவற்றைக் கூறினார்கள். அப்போது ராஜா அவனைப் பற்றி தகாதவாறு கூறினான். அதைக்கேட்ட குப்புசாமி "இல்லை இல்லை இவர்தான் நகைகளை திருடினார்" என்று கூறினான். "ஏழை சொல் அம்பலம் ஏறுமா?" அவனை யாரும் நம்பவில்லை. அவனை நீதிமன்றத்தில் ஒப்படைத்து அவனுக்குத் தூக்குத் தண்டனை கொடுக்க வேண்டும் என்று நீதிபதி கூறினார். சட்டமும் இறந்து விட்டது. அவனும் இறந்து விட்டான். ஏழை சொல்லை யார் மதிப்பார்?

T.டிரோஷன்

தரம்-10T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தந்தையின் குமுறல்

கிராமப் பள்ளியிலே முதல்தரம்
பின் கிராம உயர் பள்ளியிலே சாதாரண தரம்
சித்தி பெற்றான் என் சின்னவன்.

ஊர் பள்ளியில் சித்தியடைந்தான்
உயர்தரம் படிக்க பட்டணம் சேர்த்தேன்
இரவும் பகலும் பாடுபட்டு பட்டினி கிடந்து
பணம் புரட்டி பட்டணம் சேர்த்தேன்
இதை என் வியர்வைத் துளிக் கூட சொல்லும்.

என் மகன் வைத்தியனாகக் கனாக்கண்டேன்
எனது ஊர் வைத்தியசாலையில் சின்னவன் வைத்தியம்
பார்க்கும் மனப்படமும் கண்டேன்.

சில மாதம் கழிய செய்தி கேட்டேன், என் மனம்
இரண்டாக வெடிப்பதை நானும் கண்டேன்
மாதாமாதம் அவன் கையில் கட்டுகட்டாக
பணம் வரவே கட்டுப்பாடு இல்லையென
மார்பு கட்டினான்.

பாடசாலை நேரத்தில் பாதையில் அலைந்தான்
பாமரனாய் இருந்தவன் பாதாளம் பாய்ந்தான்
நண்பரோடு சேர்ந்து தீ வழி சென்றான்
புகையோடு, மதுவும் கொண்டு மனதைக் கெடுத்தான்

பரீட்சை நெருங்கிடவே இரவுபொழுது விழித்து
படிப்பேன் என நினைத்தான் போதையில்
பாதையிலேயே பரலோகம் சென்றுவிட்டான்.

பரீட்சை வினாத்தாள்கள் அவனை
படபடக்கச் செய்தன இதுவரை நினைவிற்கு
எட்டாத தந்தையும் நினைவுக்கு வர
கண்ணீர் வார்த்தான் என் கண்ணப்பன்

பெறுபேறு வந்தது மூன்றும் முக்கால் புள்ளிக்கு
கூட தகுதியற்றது என உதறி விட்டார்கள்
பரீட்சகர்கள், கிராமப்புறம் வர பயந்தான்
தந்தை முகம் பார்க்க தயங்கினான்

மாணவர்களே, தீய நண்பனை விடுத்து
தீய வழிகளை துறந்து, தன் தாய், தந்தை
கஷ்டங்களை உணர்ந்து,
ஊரறிய அவர்கள் பெருமை படவேண்டுமென
உணர்ந்து பாடுபடு.

S. சிவதர்ஷன்,
தரம் 9 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்புக்குரியவர்கள்

நல்லவர்களிடம் நட்பு வைத்துக் கொள். அது உன்னை நல்லவனாக்கிவிடும். தீயவர்களிடம் தொடர்பு வைக்காதே ! காரணம் அது உன் கண்ணியத்தையும், ஒழுக்கத்தையும் கெடுத்து விடும்.

ஒரு மனிதன் எப்போதாயினும் தன்னுடைய இரகசியங்களைப் பகிர்ந்துக் கொண்டுள்ளானா? அவனை உன் நண்பனாக்கிக்கொள். மர்மங்களை கூறுகின்றவனே உண்மையான நண்பன். அவன் உன்னிடம் ஒப்படைத்த மர்மங்களை எப்போதும் மர்மங்களாகவே வைத்துக் காப்பாற்றுவான். அப்போதுதான் அவனுக்கு நீ உண்மை நண்பனாக இருக்க முடியும்.

உன் நண்பர்கள் உனக்கு உதவி செய்ய முன்வருகின்றார்களா? அந்த அன்பை ஏற்றுக் கொள்ளுங்கள். ஆனால் அவரின் உதவி உனக்கு அவமானத்தை தேடித்தரும் என்று நீ எண்ணினால் அதனை ஏற்றுக் கொள்ளாதே. உதவி செய்து விட்டு மானத்தை வாங்குபவர்கள் ஏராளம். சந்தேகப் பிராணிகளுடன் நட்பை வளர்த்துக் கொள்ளாதே. அது இறுதியில் அவமானத்தைத் தேடித்தரும். எதற்கும் ஒரு வரம்பை வைத்துக் கொள்.

உன்னைப் பார்த்து சிரித்துப் பேசுபவர்கள் பலர். அவர்களை நம்பிவிடாதே. நீ இல்லாத இடத்தில் உன்னைப் பாராட்டுகிறவனே உண்மையான நண்பன. நண்பனைத் தேர்ந்தெடுப்பதில் நிதானம் காட்டுங்கள். ஆனால் தேர்ந்தெடுத்த நண்பனை மாற்றும், முன்பு இன்னும் அதிக நிதானம் காட்டுங்கள் என்ற பழமொழிக்கேற்ப நல்ல நண்பர்களைப் பெற்று நாமும் சிறந்த நண்பர்களாகி நட்புறவான சூழலை இனிவரும் காலத்திலேனும் உருவாக்குவோம்.

ஆர். டேமியன் சொகான் மைக்கல்,
தரம் 13 வர்த்தகப் பிரிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவேந்தர் பாரதிதாசனின் வீரத்தமிழன்

தென்றிசையைப் பார்க்கிறேன்
ஏன்சொல்வேன் என்றன்
சிந்தையெல்லாம் தோள்களெலாம்
பூரிக்குதடா!
அன்றந்த லங்கையினை ஆண்ட மறத்தமிழன்
ஐயிரண்டு திசை முகத்தும்
தன்புகழை வைத்தேன் !
குன்றெடுக்கும் பெருந்தோளான்
கொடை கொடுக்கும் கையான்
குள்ளநரிச் செயல் செய்யும்
கூட்டத்தின் கூற்றம் !
என் தமிழர் பெருமான் இராவணன்காண்!
அவன் நாமம் இவ்வுலகம் அறியும் !
வஞ்சக விபூஷணனின் அண்ணனென்று
தன்னை வையத்தார்
சொல்லுமொரு மாயபழிக்கே அஞ்சும்
நெஞ்சகனை, நல்யாழின்
நரம்புதனை தடவி
நிறைய இசைச் செவியமுது
தரும் புலவன் தன்னை
வெஞ்சமரில் சாதல்வர நேர்ந்திடினும்
சூழ்ச்சி
விரும்பாத பெருந்தொகையைத்
தமிழ் மறைகள் நான்கும்
சஞ்சரிக்கும் நாபானை வாழ்த்துகின்ற
தமிழர் தமிழதென்பேன் மறந்தவரைச்
சழக்கரெனச் சொல்வேன்
வீழ்ச்சியுறு தமிழகத்தில்
எழுச்சி வேண்டும் !
விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்
சூழ்ச்சிதனை
வஞ்சகத்தைப்
பெறாமைதனை தொகையாக
எதிர்நிறுத்தித் தூள் தூளாக்கும்
காழ்ச்சிந்தனை மறச்செயல்கள்
மிகவும் வேண்டும்
கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்
கீழ்ச் செயல்கள் விட வேண்டும் !
ராவணன் தன் கீர்த்தி சொல்லி
அவன் நாமம் வாழ்த்த வேண்டும் !

இராஜரட்ணம் மனோஜ்,
தரம் 13 விஞ்ஞான பிரிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதனை மேம்படுத்தும் கலை

கலைகள் பொதுவாக கவின்கலை எனவும் பயன்கலை எனவும் இரு பெரும் பிரிவுகளுக்குள் அடங்கும். கண்ணையும் செவியையும் தன்பால் ஈர்த்து அதன் வாயிலாக மனதிற்கு இன்பம் பயப்பது கவின் கலையாகும். இதனை அழகியற்கலை எனவும் குறிப்பிடலாம். இதில் கவிதை, இசை, சித்திரம், பாட்டு, வீணை இவை பாற்படும். மனித வாழ்விற்கு பயன்படும் வகையில் பல்வேறுபட்ட பொருள்களை தோற்றிக் கொள்ளல் பயன்கலை ஆகும். பயன்கலை எனும்போது சிற்ப வேலை, தச்சு வேலை, நெசவு வேலை, கொல்ல வேலை, மட்பாண்ட வேலை என்பனவும் இவை பாற்படும் தொழில்களாம்.

கலை எனும் போது இதனை மேலும் பாகுபடுத்தி நோக்கின் மெய்யுணர்வுக்கலை, இன்பவுணர்க்கலை, மெய்யுணர்வுப் பொருட்கலை, இன்பவுணர்வுப் பொருட்கலை என நான்கு பிரிவுகளாக இருப்பதனை அறியலாம். மெய்யுணர்வுக்கலை, சமயம் பற்றியும், மெய்ப்பொருளான இறைவன் பற்றியும் கூறுகின்றது. மெய்யுணர்வுப் பொருட்கலை, ஐம்முதல் பொருள்களின் ஆராய்ச்சி பற்றிக் கூறுகிறது. வானநூல் இதிலடங்குவதாகும். இன்பவுணர்க்கலை, ஓவியம், சிற்பம் என்பன பற்றி பெரிதும் விபரிக்கின்றது. அதேபோல் இன்பவுணர்வுப் பொருட்கலையும் ஐம்முதல் பொருள்களை, மக்கள் தம் வாழ்வை மேம்படுத்த எவ்விதம் பயன்படுத்துவது என்பது பற்றிக் குறிப்பிடுகின்றது.

இக்கலைப் பொக்கிஷத்தை நம் தமிழ் முன்னோர் மிகவும் கூர்மையாகவும் ஆழமாகவும் ஆராய்ந்து அறுபத்தி நான்காகப் பாகுபடுத்தியுள்ளனர். இதனாலேயோ எம் சான்றோர் "ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என்னம்மை" எனக் கலைத் தெய்வத்தை விளித்தனர் போலும். சங்ககாலம் தொட்டு இருபத்தியோராம் நூற்றாண்டான இன்றுவரை தமிழர்தம் வாழ்வின் உயிர் நாடியாக அவர்களது வாழ்வில் கலை உணர்வு பிணைந்திருப்பதனை நாம் அறியக்கூடியதாய் உள்ளது. எனவேதான் ஆன்றோர் அன்றே ஆயகலை அறுபத்து நான்கினையும், அவை ஒவ்வொன்றையும் மேலும் அறுபத்து நான்காக வகைப்படுத்தியுள்ளனர். சான்றாக அரசியல் கலையை எடுத்து நோக்கின் அக்கர இலக்கணம் முதல் அறுபத்து நான்கு கலைகள் கூறப்படுகின்றது. மேலும் நாடகக் கலையை நோக்கின் யாழ் முதல் அறுபத்து நான்கு கலைகள் கூறப்படுகின்றன. இவற்றை நாம் சிலப்பதிகாரம் போன்ற ஐம்பெருங்காப்பியங்களில் காணலாம். இவை யாவும் நம் தமிழர்களின் வெளிப்பாடு என்பதில் எவ்வித அச்சமுமில்லை. கலைகள் முதலில் மன்னர்களின் அரண்மனைகளிலே சிறந்து விளங்கியிருக்கின்றன. உதாரணமாக நாட்டியக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, இலக்கியக்கலை என்பன அன்று மன்னர்களால் பெரிதும் போற்றப்பட்டும் பேணப்பட்டும் வந்திருக்கின்றன. பின்னர் பல்லவர் ஆட்சிக்காலத்தில் கோயில்களில் திகழ்ந்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக மன்னராட்சி அழிந்து மக்களாட்சி ஏற்பட்ட போதிலும் கலைகளும் தெய்வீகத்தன்மைப் பொருந்தி மக்கள் மத்தியில் சிறப்புற்றிருப்பதனை உணரக் கூடியதாக உள்ளது. இவ்வாறாக கலை எனும்போது இது மக்களுடன் பின்னிப் பிணைந்துள்ளதைப் போன்றே மக்களின் வாழ்விற்கு வழிவகுத்து மக்களின் வாழ்வினை இனிதாக்கி மனிதனை மேம்படச் செய்கின்றது. ஏனெனில் கலையை எப்பிரிவாக பிரித்து நோக்கினும் எப்பிரிவிலும் கல்வியின் சிறப்பு பொதிந்திருக்கின்றது. "கல்வி நலமற்ற கசடர் ஊரினைத் தீக்கிரையாக்க வேண்டும்" என கல்வியின் சிறப்பை, எல்லா அறங்களிலும் மேலானது. ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்பதனை இக்கலையே எடுத்துரைக்கின்றது. அதே போன்று கலைகள் எனும்போது அது சார்ந்த தொழில்களும் அதனுடன் வேறுபிரிக்க முடியாதவையாகக் காணப்படுகின்றன.

கலையே மனிதனை மேம்படுத்துகின்றது. "கலையில்லா ஆன்மா பணி செய்யாத சலவைக்கல்". எனவே கலைக்காக உயிரைக் கொடுப்பவன் ஒரு போதும் மரணமாவதில்லை. கலைக்கு சிறந்த உடையில்லை. கலையென்பது உருவகம். காண்பவர் வியக்க வைப்பது கலையாகும்.

கலைகள் யாவுமே இயற்கையின் போலிகள். உள்ள நிறைவில் பிறந்த கலை எப்போதும் உள்ளத்தை உயர்த்தும். ஆசையில் பிறந்த கலை உள்ளத்தைக் கொடுக்கும். மனிதனை மனிதனாக வாழ்விப்பது கலையாகும். செல்வர் விரும்புவது முன்னது. வறியவர் விரும்புவது பின்னது. முன்னதைக் காண பணமும், பின்னதைக்காண மனமும் வேண்டும். சுருங்கக் கூறின் மனிதன் இவ்வுலகில் சிறப்பாகத் தன் வாழ்வை மேம்படுத்திக் கொள்ளவும், தன் இன்பத்திற்காகவும் கண்டுபிடித்த கருவியே கலையாகும். எனவே "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்பது போல் கல்வியறிவம், அதுசார் தொழில்களும் சேர்ந்து சிறப்புறாவிடின் மனிதவாழ்வும் சிறப்புறா. எனவே கவின்கலை, பயன்கலை இரண்டையும் பெற்று மானிடனாகிய நம் வாழ்வை மேம்படுத்துவோமாக.

S. கிருஷாந்தன்
13T விஞ்ஞான பிரிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருவே உமக்கு நன்றி

என் அன்பு குருவே
நான் உமக்கு நன்றி கூறுகின்றேன்
கிடைப்பதற்கரிய இந்த மானிடப் பிறவியை
பயனுள்ளதாய் அமைக்க உதவிய உமக்கு நன்றி

வாழ்க்கையை வெற்றி கொள்ள
சரியான வழியைக் காட்டிய உமக்கு நன்றி
எம்மை நன்றாகப் போதித்து அரவணைத்த
உங்கள் அன்பிற்கு மிக மிக நன்றி.

ப. மதுூஷன்
தரம் - 5 D

## ஏன் இலக்கு

இருள் மிகுந்த வாழ்வதனை
ஒளிர்வாக்கி இருளகற்றும் ஆதவனாய்
மனிதமது மாண்புபெற மகிமை பெற
வழிகாட்டும் நற்குருவாய் நாதனுமாய்
பண்பாடு ஒழுக்கநெறி நிதமும் ஊட்டிவிட்டு
அன்பால் அணைத்து நிற்கும் தாயவளாய்
கல்வியது கரையில்லாக் கடலமுது
எனவிளக்கிக் கற்கத்தூண்டும் கலங்கரை விளக்குகளாய்
நோய் நொடிகள் அற்றவராய் வலிமைபெற்று
மனமகிழ்ந்து வாழ வழிசொன்ன வைத்தியராய்
இனத்திடையே, மொழியிடையே, சமயத்திடையே
ஒற்றுமைக்காண் என்றுரைத்த நீதியின் தேவதையாய்
இன்னுமின்னும் ........ எதனுக்கு எத்தனைக்கு
ஒப்பிடுவேன்
ஐயையோ ஒப்பில்லா நல்மணிகாள், ஆசான்காள்
ஊறுதிகொண்டோன் அந்தோனி கலைக்கூடத்தின்
உங்களைப்போல் நானும் ..... இதுவே என் இலக்கு

S. நிலாஞ்சலன்
தரம் - 6 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் அட்டையின் அனுக்கூலமும் பிரதிக்கூலமும்

தற்போதைய நடைமுறை காலக்கட்டத்தில் கடனுக்கு பொருட்கள், சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு கடன் அட்டை முறை (Credit Card) பயன்படுத்தப்படுகிறது. வங்கியின் வாடிக்கையாளர் அல்லது வாடிக்கையாளர் அல்லாத ஒரு நபருக்கு பெற்றுக் கொள்வதற்கு வழங்கப்படும் அட்டையே கடன் அட்டையாகும்.

கடன் அட்டை (Credit Card) தொழிற்படுகின்ற முறையை கண் நோக்குவோமானால், கடன் அட்டையைப் பெறும் நுகர்வோரின் பெயரில் வங்கி, ஓர் தனியான கணக்கினை கொண்டிருக்கும். இவ்வட்டையை வைத்திருக்கும் அல்லது கையாளும் நுகர்வோர் இதனை பயன்படுத்தி குறிப்பிட்ட எல்லைவரை பொருட்கள், சேவைகளை கடனுக்கு பெற்றுக் கொள்ள முடிகின்றது. கடன் அட்டையில் பொருட்களை விற்ற சில்லறை வியாபாரிக்கு வங்கி உடனடியாக பணத்தை வழங்கும். இவ் அட்டையுடன் தொடர்புடைய நுகர்வோர் வங்கிக் கணக்கினை கொடுத்து தீர்த்தல் வேண்டும். இவ்வாறான பல வசதிகளை கடன் அட்டை பிரதான தொழிற்பாடாக கொண்டு செயற்பட்டு வருகின்றது. இக்கடன் அட்டையை பெறுவதன் மூலம் வாடிக்கையாளர் பல்வேறு வசதிகளைப் பெறுகின்றனர். இப்போது இந்த பிளாஸ்டிக் பணத்தை வைத்துக் கொள்ளாதவர்களே இல்லை எனலாம்.

இவ் கடன் அட்டையில் பல நன்மைகள் காணப்படுகிறது. அதே போல் அதற்கு எதிர்மாறாக பல தீமைகளும் காணப்படுகிறது. வாங்கும் சம்பளத்தை அடிப்டையாக வைத்து சில லட்சம் வரை கடன் தர இந்த கடன் அட்டை பயன்படுத்தப்படுகிறது. ஆனால் குறிப்பிட்ட அவகாசத்தில் ஓரளவு வட்டியும் அசலும் செலுத்தியாக வேண்டும். இது தாமதப்படும்போது பிரச்சினை தடுமாறுவதும் உண்டு.

தற்போது பாவனையிலுள்ள சில கடன் அட்டை கம்பனிகள் பல புதிய திட்டங்களை அறிவித்து வருகின்றன. கடன் அட்டை வைத்திருப்பது ஒரு நன்மையான விடயம்தான். ஆனாலும், அதிலும் சமமான நிலையை பேணிவருதல் மிகவும் சிறந்ததாகும்.

எஸ்.எ.வினிஸ்டர் ரொசய்ரோ,<br>
12[T] வர்த்தக பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# With Best Compliments From SACKOBA - Qatar



Committee 2009/2010



Members of SACKOBA Qatar

Email: sackobaqatar@yahoo.com FB: SACKOBA - Qatar

Tel: +974 - 33810317 Fax: +974 - 44674788

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WIth Best Compliments From

1986 Batch (Tamil Medium)

K.Srikanth
M.Sivaneson
S.Ragunath
S.Sathyamorthy
A.J.M.Mustaq
J.Prathapasekar (U.S.A)
Ravi Vamadevan (U.S.A)
A.R.S. Lopez (U.K)
M.Ganeshraj
P.Balamurugan
T.Manohar (Qatar)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் சிவஞான சுந்தரம் (நந்தி)

ஈழத்தின் இலக்கிய வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தவர்களில் பேராசிரியர் செ.சிவஞான சுந்தரம் என்ற நந்தி குறிப்பிடத்தக்கவர். கலை இலக்கியம் சார்ந்த பல்வேறு துறைகளிலும் தனது ஆக்கத்திறனை செப்பமாக பதித்து இருக்கும். நந்தி ஒரு நாவலாசிரியர். சிறுகதைப்படைப்பாளி. 1947ல் "சஞ்சலமும் சந்தோஷமும்" என்ற சிறுகதையில் தொடங்கி 2005ம் ஆண்டுவரை பன்நெடுங்காலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் முத்திரை பதித்தவர்.

செல்லத்துரை செல்லம்மா தம்பதிகளுக்கு 1928.03.30 அன்று அருந்தவப் புதல்வராக யாழ்ப்பாணத்தின் இணுவில் என்ற ஊரில் அவதரித்தார். இவரது தந்தை தமிழ் பேராசிரியர் வி.செல்வநாயகத்தின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது. 1937ல் சாந்தி என்ற பெண்ணை திருமணம் செய்த நந்தி நான்கு பெண் குழந்தைகளினது தந்தையுமாவார்.

பளை தமிழ்க்கலவன் பாடசாலையில் தனது பாடசாலை கல்வியை தொடங்கிய இவர் காங்கேசன்துறை கத்தோலிக்க பாடசாலை, இடைக்காடு தமிழ் பாடசாலை, யாழ். செயின்ற் ஜோன்ஸ் கல்லூரி, றோயல் கல்லூரி ஆகியவற்றில் தொடர்ந்து கற்றார். பின்னர் கொழும்பு வைத்தியக் கல்லூரியில் வைத்தியப்பட்டம் பெற்ற இவர் தனது மேற்படிப்பினை லண்டன் பல்கலைக்கழகத்தில் முடித்தார்.

தனது வைத்திய தொழிலை குருநாகல் பொது வைத்தியசாலையில் தொடங்கி ஹரிபிடிய கிராம வைத்தியசாலை, கொழும்பு லேடி றிஜ்வே குழந்தைகள் வைத்தியசாலை, நாவலப்பிட்டி வைத்தியசாலை, யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை என்பவற்றில் தனது பணியை தொடர்ந்தார். பின்னர் 1965ல் பேராதனை பல்கலைக்கழகத்தில் வைத்திய விரிவுரையாளராக பதவியேற்ற இவர் சிரேஷ்ட விரிவுரையாளராக, இணைப் பேராசிரியராக கடமை ஆற்றி யாழ் மருத்துவ பீட தலைவராகவும் சேவை ஆற்றி உள்ளார். இவற்றை விட உலக சுகாதார ஸ்தாபனத்தின் கருத்தரங்குகளிலும் பங்கேற்று உள்ளார். ஆராய்ச்சி துறைகளிலும் ஈடுபட்டு உள்ளார்.

இவ்விதம் தனது மருத்துவ பயணத்தை தொடர்ந்து இவர் ஈழத்தின் தமிழ் இலக்கிய துறையிலும் தடம் பதித்து உள்ளார். நாவல்கள், சிறுகதைகள், மருத்துவ அறிவுரை கட்டுரைகள், சிறுவர் அறிவுரை நூல்கள், ஆத்மீக நூல்கள், நாடகம், இளைஞர் அறிவுரை நூல் போன்ற பல வடிவங்களில் படைத்துள்ளார். இவற்றுள் மலைக்கொழுந்து, தங்கச்சியம்மா, நம்பிக்கைகள் (நாவல்கள்) சஞ்சலமும் சந்தோஷமும், புத்தாகே பொத், விசித்திர மூக்கு கண்ணாடி, கதையும் சாமியாரும், கிழவனும் கிழவியும், பச்சைப்பூக்கள், பார்த்தால் தெரியும், பாததரிசனம், ஆசையின் ஓசை, காதலுக்கு மருந்து, ஊர் நம்புமா? கனவான், கண்ணாடி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரி, நூலைப்போல, மிஸ்.சுகிர்தம், பூச்சட்டை, கல்லோ கடவுளோ, யானையின் காலடியில், சுக்ரன், அடிவளவு அன்னாமன்னா, சரஸ்வதியின் வேண்டுகோள், ஒரு பாவாடை கொடியாகிறது, பார்வைகள், சிங்களத்து மருத்துவச்சி (சிறுகதைகள்) அருமைத் தங்கைக்கு, அன்புள்ள நந்தினி, இதய நோயும் தடுப்பு முறைகளும் (மருத்துவ அறிவுரைகள்),உங்களை பற்றி (சிறுவர் அறிவுரை) தம்பி தங்கைக்கு (இளைஞர் அறிவுரை), அன்பார்ந்த சாயி அடியார்களுக்கு, சாயியின் குரலும் வள்ளுவர் குறளும் (ஆத்மீக நூல்கள்), குரங்கு (நாடகம்) என்பனவற்றை குறிப்பிடலாம். இவரது சிறுகதைகள் ஊர் நம்புமா, கண்களுக்கு அப்பால், நந்தியின் கதைகள், தரிசனம், நந்தியின் சிறந்த சிறுகதைகள் என்ற தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இவரது கதைகள் தினகரன், வீரகேசரி முதலான பத்திரிகைகளிலும், காதல், மரகதம், வசந்தம், குமுதரம் முதலான சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன.

இவர் சிலகாலம் இலங்கையின் வானொலியில் வானொலி வைத்தியராகவும் வலம் வந்துள்ளார். இவர் ஒரு நடிகருமாவார். ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ளார். 1952 1953 காலப்பகுதியில் இருபத்தி ஐந்து வானொலி நாடகங்களில் நடித்துள்ளார். தர்மசேன பதிராஜாவால் இயக்கப்பட்ட "பொன்மனி" என்ற இலங்கை திரைப்படத்திலும் நடித்துள்ளார்.

ஈழத்தின் நவீன தமிழிலக்கியத்துறையில் அடியெடுத்து வைத்து குறிப்பிடத்தக்க படைப்புகளை தந்து மருத்துவ அறிவியலாளர் என்ற வகையிலும் மலையகப் பிரதேசத்தினை தமிழ் நாவலுக்கு களமாக்கிய முதல்வர் என்ற வகையிலும் நந்திக்கு ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் நிரந்தர இடம் உண்டு என்கிறார் அவரின் படைப்பிலக்கியத்தைப்பற்றி பொதுமதிப்பீடு ஒன்றை செய்த கலாநிதி நா.சுப்பிரமணியன்.

மலையகப்படைப்புகளை தந்தவர்களாக அ.செ.முருகானந்தன், அ.ந.கந்தசாமி, வ.அ.இராசரத்தினம், செ.கணேசலிங்கன், யோ.பெனடிக்ட் பாலன், கே.ஆர் டேவிட் என நீண்டதொரு பட்டியலே இடலாம். என்றாலும் மருத்துவத்துறை சார்ந்த நந்தி, தி.ஞானசேகரன், புலோலியூர் க.சதாசிவன், ஆகிய மூவருக்கும் மலையக இலக்கிய வரலாற்றில் ஒரு முக்கிய இடம் இருக்கிறது. அதிலும்கூட பிந்திய இருவருக்கும் ஒரு முன்னோடியாக திகழ்ந்தவர் பேராசிரியர் நந்தி என்பதை மறுக்க முடியாது.

"மலைக்கொழுந்து என்ற நாவலின் மூலம் தன்னுடைய மலையக பரிச்சயத்தை வெளிப்படுத்தியவர் நந்தி. அதன் கதாநாயகன் மலையப்பனை இலட்சிய பாத்திரமாகவும் படைத்து இருந்தார். இவர் நாவலப்பிட்டியில் தொழில் புரிந்த காலத்தில் தோட்டங்களுக்கு சென்று தோட்ட தொழிலாளர்களை சந்தித்து மிகவும் அன்புடன் உரையாடி அவர்களது பிரச்சினைகளை கேட்டும் அவதானித்தும் அறிந்தவர். இக்காலகட்டத்தில் மலையக மக்களின் வாழ்வு நிலைமைகளை ஆழமாக உற்று நோக்கக்கூடிய சந்தர்ப்பம் அவருக்கு கிட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் நிமித்தம் மலைநாட்டு தேயிலை தோட்டங்களிலே சுகாதார சொற்பொழிவுகள் ஆற்றிய வேளைகளில் அத்தோட்டத் தொழிலாளர்களுடன் நெருங்கிப் பழகி அவர்களது வாழ்க்கைப் பிரச்சினைகளை புரிந்து கொண்டார்.

இந்தப் பின்னணியில் தோன்றிய படைப்புகள் தான் இவரது மலைக்கொழுந்து, தங்கச்சியம்மா, ஊர் நம்புமா? பார்த்தால் தெரியும், பச்சைப் பூக்கள், அடிவளவு அன்னாமன்னா, சுக்ரன், சரஸ்வதியின் வேண்டுகோள், ஒரு பாவாடை கொடியாகிறது போன்ற படைப்புக்கள். பேராசிரியர் நந்தி ஒரு சிறந்த அவதானிப்பாளர். தனது செயற்பாடுகளில் அன்றாடம் கண்ட மக்களையே தனது நாவல்களில் பாத்திரமாக்கியிருக்கிறார். அவரது அதிகமான கதைகளில் சுகாதார சம்பந்தமான செய்திகள் பொதிந்து இருக்கும். இலங்கை தமிழ் இலக்கியத்தில் வைத்திய அனுபவங்களை அறிமுகப்படுத்தியுள்ளார். நாவலப்பிட்டியில் கடமையாற்றிய பொழுது தான் பெற்றுக் கொண்ட அனுபவங்களையே மலையகத்தை களமாகக் கொண்ட படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார். ஹரிபிடிய என்ற இடத்தில் கடமையாற்றிய போது உள்ளூர் மருத்துவ மாதுவின் பாத்திரத்தை "சிங்களத்து மருத்துவிச்சி" என்ற கதையில் வெளிப்படுத்தினார். யாழ்ப்பாணத்தில் கொலரா தொற்று நோய் பரவுவதை தடுக்கும் அனுபவங்களை கொண்டு தங்கச்சியமமா என்ற நாவலை எழுதியுள்ளார்.

மருததுவத்துறையில் இருந்து கொண்டே இலக்கிய துறையிலும் முத்திரையை பதித்து பல இலக்கியவாதிகளுக்கு வழியாட்டியாக அமைந்தவர். பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் என்ற இராஜகோபாலாச்சாரியரால் (இராஜாஜி) நந்தி என்ற நாமம் பெற்று இவரது நாமம் மருத்துவ உலகிலும் தமிழ் இலக்கிய உலகிலும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு நிலைத்து வாழும்.

**சான்றாதாரங்கள் -** பேராசிரியர் நந்தியும் மலையகமும்
ஈழத்து சிறுகதை வரலாறு (கலாநிதி.க.குணராசா)

ஏ.எம்.அதீக்
13T விஞ்ஞானப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

**OMEGAA MEDICALS**
Pharmacists - Druggists & Grocers

*L.Sivanathan*
*Proprietor*

465, Galle Road,
Colombo 06.

Tel : 2364255
077 - 6161798

**BEACON HILL ACADEMY**

No.18, Wedderburn Rd,
Nuwara Eliya
T.P. 052-222-3492

**D.P. Fredrick**
*Proprietor*

**CENTRAL HARDWARE**

Branch:
**Central Picture Palace**
29,30, Cargills Ground,
Nuwara Eliya, Sri Lanka.
Phone: 052-2223322

No.39A, Lawson Street,
**Nuwara Eliya, Sri Lanka.**
Phone : 052-2223862
Mobile : 0777-204426
E-mail : centhard@yahoo.com

*Mr.A.Ganeshamoorthy*


Delmar,Middle division,
Halgranoya
Tel : 052-3531252

**P.Rajamohan**

LAUGFS
Lanka Gas

**IONA DISTRIBUTOR**
No. 277,Vajirapura,Boralanda,
Nuwara Eliya.
Tel: 052 2223342
Fax: 052 2223342

**NUWARA ELIYA MOTOR ENTERPRISE**



No.30,Kandy Road,
Nuwara Eliya.

Tel: 052 2223099
Fax: 052 2223099

M.R.M. Minhaj
PARTNER
Hot Line. 0777-806551

**TRI STAR PLASTIC INDUSTRIES**

**Manufacturing Polythene, P.P,HDPE,LLDPE & Printing & All Kinds of Shopping Bags.**

Factory -
Tri Star Plastic Industries,
No.2,Hapugahayatathenne,
Handessa,
Kandy.
Tel.: 081-2315453

Office-
Tri Star Polythene Traders,
33/2, Yatinuwara Patumawathe,
Kandy.
Tel : 081-2236912, Fax : 081-2236912

**SAROJINI STORES**

No.164, Colombo Street,
Kandy.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை தெரேசா

ஆதரவற்றவர்களின் அன்புத் தெய்வம், கருணையின் வடிவம், என்றெல்லாம் போற்றப்படும் பெருமை மிக்கவர் அன்னை தெரேசா. ஐரோப்பாக் கண்டத்தில் அல்பேனியாவில் விவசாயக் குடும்பம் ஒன்றில் பிறந்தார் அன்னை தெரேசா. அவ்வூர் அரசினர் பாடசாலையில் தமது ஆரம்பக் கல்வியைப் பெற்றார். குழந்தைகள், பெரியோர்கள், நோயாளிகள் போன்ற பலரோடும் இளமையிலேயே அன்பாகவும் மரியாதையாகவும் பழகி வந்தார். மக்களுக்கு தொண்டாற்ற வேண்டும் என்ற நோக்கில் மக்கள் சேவைக்காகவே தம்மை அர்ப்பணித்தார்.

1928ம் ஆண்டில் இவர் லோரேட்டா கன்னியர் மடத்தில் சேர்ந்தார். பின்னர் இந்தியாவிற்கு வந்து டார்ஜிலிங்கில் ஆசிரியர் பயிற்சி பெற்றார். ஆசிரிய பயிற்சியின் பின் கல்கத்தாவிற்கு வந்து அங்குள்ள கன்னியர் மடத்தில் நிரந்தர உறுப்பினராகச் சேர்ந்து கொண்டார்.

கல்கத்தா வீதிகளில் அம்மையார் கண்ட காட்சிகள் அவரது உள்ளத்தை பெரிதும் நெகிழச் செய்தன. பசிக் கொடுமையினாலும் நோயாலும்மக்கள் வருந்துவதைக் கண்டு மனம் வருந்தினர். பஞ்சத்தால் வாடும் மக்களுக்கு உணவு அளிப்பதோடு ஏழைக்குழந்தைகள் கல்வி பெற வழிசெய்ய வேண்டுமென அவரது கருணையுள்ளம் விரும்பியது. இது குறித்து உரோமாபுரியில் உள்ள தலைமை மதகுருவிடம் அனுமதி பெற்றுக் கொண்டார். அதன்பின் கன்னியர் மடத்து உடைகளைக் களைந்து நீலக்கரையுடன் கூடிய வெள்ளைப் புடைவையை உடுத்திக் கொண்டார்.

சேரியின் மத்தியிலே ஒரு குடிசையை வாடகைக்கு எடுத்துக் கொண்டார். சேரியைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டார். சேரி வாழ் மக்களுடன் அன்புடனும், மரியாதையுடனும் பழகினார். அவர்களுடைய பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினார். சேரியில் உள்ள சிறுவர்களுக்கு கல்வி புகட்ட முற்பட்டார்.

1950ஆம் ஆண்டு 'அன்பின் தூதுவர்கள்' என்று பொருள்படும் இயக்கம் ஒன்றை ஆரம்பித்தார். இவ்வியக்கம் மக்கள் ஆதரவுடன் வளரத் தொடரங்கியது. சாதி, மத வேறுபாடு எதுவுமின்றி இவ்வியக்கத்தில் பலர் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். பாடசாலைகள் அமைத்தல், மருத்துவ வசதி இல்லாத இடங்களில் மருத்துவ மனைகள் அமைத்தல், குழந்தைகள் காப்பங்கள், அநாதை இல்லங்கள் அமைத்தல் ஆதியாம் பணிகளை இவ்வியக்கம் நோக்கமாகக் கொண்டு செயற்பட்டது.

அனாதை குழந்தைகளை ஆதரிக்கும பொருட்டு 'நிர்மல் கென்னடி இல்லம்' என்ற இல்லத்தை நிறுவினார். தொழுநோயாளிகளுக்கு தொழு நோயாளர் இல்லத்தை தொடக்கினார். சாவின் விளிம்பில் தவிக்கும் அநாதைகளுக்கு உதவும் பொருட்டு தருமசாலையை ஏற்படுத்தினார். இந்த இல்லங்களை நடத்துவதற்காக அன்னை தாமே வீதிகளில் இறங்கி நிதி திரட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையின் புகழ் உலகெங்கும் பரவிய நிலையிலும் அவர் நிலை மாறவேயில்லை. வறுமையை விரும்பி வரித்த அன்னையாகவே அவர் விளங்கினார்.

ஒரு முறை அமெரிக்க நாட்டின் செனட்டர்களில் ஒருவரான றொபேட் கென்னடி அன்னையை காண அவரது ஆசிரமத்திற்கு வந்திருந்தார். அப்போது அன்னை தொழுநோயாளர் பிரிவில் துணி துவைத்துக் கொண்டிருந்தார். அன்னைக்கு கைகுலுக்கும் பொருட்டு கென்னடி கை நீட்டுகிறார். பதிலுக்கு அன்னை கை நீட்டாமல் ' என் கைகள் அழுக்காக இருக்கின்றன என்றார் அன்னை. 'அன்னையே அழுக்கடைந்துள்ள இந்தக் கரங்களை நான் தொட விரும்புகிறேன். அதை எனது பேறாகக் கருதுகின்றேன்' என்றார் கென்னடி.

அன்னையின் அரும்பணிகளுக்காக அவருக்கு நோபல் பரிசு உட்பட பல பரிசுகள் கிடைத்தன. அனைத்து உயிர்களிடத்தும் அன்பையும் நம்பிக்கையையும் துளிர்க்கச் செய்த அன்னை தெரேசா தமது 87ஆம் வயதில் காலமானார். கருணை பொழியும் அத்திருவடிவம் மறைந்து விட்டாலும் அன்னாரின் திருநாமம் அனைத்துலகிலும் என்றும் நின்று நிலவும் என்பது திண்ணம்.

P. அஜய்
13T வர்த்தகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

## CLOTH CENTRE



151,Keyzer Street,
Colombo-11
Sri Lanka.

Tel : 2423429
Fax : 2436399

## Y.P.M.MANICKAVASAGA MADAR & CO.

PAPER MERCHANTS & STATIONARY
AGENT FOR CONQUEROR PAPER & BOARD

37,MALIBAN STREET,
COLOMBO-11.
TEL : 2324114, 4862270,5628364
FAX : 2328795



## MICHEAL RAYAPPAN

No.2. Staford Cross Road,
Ragala Bazzar Halgranoya

Tel : 052-2265410,071-6559715
www.Damionshohan@yahoo.com

## Navaratnam's and Company

ANC

Accountants & Auditors, Tax Consultant

4/6, Cargills Ground,
Kandy Road,
Nuwara Eliya.

Tel: 052-7451510,
052-4920565,
Fax: 052-2223597

E-mail: nenavaratnamscom@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**NEW**

**SELLIAH STORES**

**No. 109, central Market, Kandy**

**T. P. No. 081-2225958**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச் செல்வம்

"கண்கள் இன்றி காணாது உலகம்
கல்வி இன்றி வராது செல்வம்
நானிலத்தில் நிலைப்பது கல்வி
நாளும் எம்மை சிகரத்தில் வைப்பது கல்வி"

"கல்விச் செல்வம் காத்திடுவோம்
கண்ணில் இமையால் பேணிடுவோம்
காலம் முழுதும் காத்திடுவோம்
கண்களில் ஒளியை பெற்றிடுவோம்."

எம். எப். இமாத்
தரம் - $5^D$

## விண்ணைத் தாண்டியும் பறக்கலாம்!

மாணவன் என்றவன் வானில் மிதந்திடும
பட்டத்தைப் போன்றவன் - தூய
கல்வி என்பது பட்டத்தை தாங்கிடும்
நூலைப் போன்றது

ஆசிரியரானவர் அதனை இயக்கிடும்
சிறுவனைப் போன்றவர் - வளமிகு
பாடசாலை என்பது அதனை ஏந்திடும்
காற்றைப் போன்றது

சிறுவன் இயக்கிய நூல், காற்று ஆதரிக்க
பட்டம் எந்த உயரம் சென்றிடுமோ?அதை விட
மாணவன் ஆசிரியரையும், பாடசாலையையும்
கல்வியையும்
ஆதரித்தால் விண்ணைத் தாண்டியும் பறக்கலாம் ! !

M.N. சைபுல்லா
தரம் - 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

## HTN
Information Systems

*Powered by Connectivity.....*

N.Uthayakumar
B.Sc(Eng),AMIE,Consultant (ISO 9000)
Chief Executive Officer
M: +94 714 357 257
E: ceo@htnsys.com
#41 1/1, Rathnakara Place,
Dehiwala,Sri Lanka.

T:+94 114 862 520
F:+94 112 728 740
www.htnsys.com

Blue Lotus

---

## Style

PHONES & COMMUNICATION

Tel : 075 8896962
081 4994806
E-mail : stylephones@yahoo.com

Dealers in All kinds of Phones, Accessories,
Memory Cards,Pen Drives,Wrist Watches,
All kind of Pre-paid cards
Phone ( software & Hardware) Repairing

Dialog Mobitel Etisalat Hutch Airtel

# 40/A, KURUNEGALA ROAD,
KATUGASTOTA

---

## Little Flower Pre School

Little Flower Pre School,
Pansala Road,
Ragala.

Tel : 077 1507121

---

## Mr. Periyanayagam Antonprabhath



No.09. Peter Palace,
Lindulla.
Tel : 071-8142606
E-mail : www.1976_anton@yahoo.com

---

NLS

## NEW LANKA STATIONERS

**Dealers in Paper,Office Stationary,Typing, Digital Duplicating,Ink, Master Roll,Binding Machine,Laminating Machine, Computer Stationery & All type of Stationery**

No.45,MALIBAN STREET
COLOMBO - 11
TEL : 2348181,2320190,5735816
FAX : 94-11-2348181

---

## KANDY KING MEDICAL

51, PERADENIYA RAOD
KANDY

TEL : 081 - 2202306

---

## RAJ. MEDICAL (PVT) LTD.



Peradeniya Road,
Kandy.
Tel : 077 2346024

---

## S-D- MARKTING

Wholesale & Retail in Shoping Bags etc.



No.46, Ambitiya Road,
Thennakumbura
Tel : 072 3693248
072 8053527

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

To Go
From
Start-up

# TO SUCCESS

make just

# ONE STOP

DFCC
BANK

**NO.5,DEVA VIDIYA**
**KANDY**

# OUR SERVICES

**Project Loans under Small & Medium Scale Enterprises**

**Finance Leasing for Vehicles & Heavy Equipments**

Attrective Interest Rates for **Fixed Deposits**

Contact on
Tel. - 081-2234411/2234260
Fax No. 081-2228460

# MONEY & MUCH MORE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***



T.Selvamogan

**Vigneswaran Stores**

Colombo Street,
Kandy.
Tel : 081 - 2223014

M.L.M. Hilmy(Partner)
0777-805015

**NEW CITY HARDWARE**



DEALERS IN GENERAL HARDWARES
& ALL BUILDING MATERIALS

No. 357, Main Street, Kaduruwela
Tel : 027-2222273,2222924,5870[illegible]3
Fax : 027-2222055

**NEW KAMAL JEWELLERS**
( Experts in Old and New Jewellery)



Telephone no - 081-2300446
E-mail - k.ashkar@yahoo.com
Tel : 081-2300016



**CITY POINT**



No : 27, New Town,
Digana, Rajawella.
Tel : 081 - 2374136

**S.Johnson**

115/5, Anuradapura Road,
Puttalam.
075-4579844

Anthonyraj

**J.A.J. GROCERY**



No.204 Colombo Street,
Kandy
081-4473086

**Central Stationeries**

Wholesale and Retail Dealers in Papers,Stationeries,Greeting Cards,
Birthday Cards, Wedding Cards and Fancy Goods



No.134A, Colombo Street,
Kandy.
Tel/Fax : 081-2205157
081-4903303
081-7215550

Branch :
No.31, Kotugodella Veediya,
Kandy.
Tel : 081-2222045,077-3153346
081-7215548

**R.J.Jude David**



464/G/6, Goodwill Park,
Gohagoda,
Katugastota.
0776591610



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின்

**55 ஆண்டுகால வாழ்க்கைக் குறிப்புகள்**

1892- பங்குனி 27ம் திகதி அடிகளாரின் அவதாரம்.
இடம்: மட்டக்களப்பைச் சேர்ந்த காரைதீவு.
தந்தையார்: சின்னத்தம்பி சாமித்தம்பி விதானையார்
தாயார்: இராசகோபாலப்பிள்ளை கண்ணம்மை.
பேயர்:மயில்வாகனம் வித்தியாம்பர்

1904- கல்முனை மெதடிஸ்த மிஸன்லீஸ் ஆங்கிலப்பாடசாலையில் கல்வி.

1906- கல்முனை மெதடிஸ்த மிஸன் மத்திய கல்லூரியில் கல்வி.

1906- மார்கழி-"கேம்பிரிஜ்"ஜீனியர் பரீட்சையில் சித்தி.

1908- மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் கல்வி.

1908- மார்கழி-"கேம்பிரிஜ்"சீனியர் பரீட்சையில் சித்தி.

1910- மட்.புனித மிக்கல் கல்லூரியில் ஆசிரியர்.

1911- தாயாரின் மறைவைத் தொடர்ந்து கல்முனை கத்தோலிக்கமிஷன் பாடசாலையில் ஆசிரியர்.

1912- கொழும்பு அரசினர் ஆசிரியர் கல்லூரியில் பயிற்சி.

1914- புனித மிக்கேல் கல்லூரியில் ஆசிரியர்.

1916- அரசினர் பொறியியற் கல்லூரியில் விஞ்ஞானம் கற்று "விஞ்ஞான டிப்ளோமா" என்னும் பட்டம் பெறல்.

1916- மதுரைத்தமிழ்ச் சங்கப் பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்து இலங்கையின் முதற் பண்டிதர் எனும் பெருமையினைப் பெறுதல்.

1917- அரசினர் பொறியியற் கல்லூரியில் வேதிநூல் உதவி ஆசிரியர்.

1920- யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியில் வேதிநூல் ஆசிரியர்.

1920- இலண்டன் ( London )பல்கலைக்கழக விஞ்ஞான (B.Sc )பட்டம் பெறுதல்

1921 யாழ்.ஆரிய திராவிட பாஷர்பிவிருத்திச் சங்கத்தினை நிறுவுவதில் உதவி புரிதல்.

1922- யாழ்.மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபர்.

1922- துறவறத்தினை விழைந்து மைலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தைச் சேர்தல்.

1924- ஞானோபதேசம் பெற்று சுவாமி சிவானந்தரால், விபுலானந்தர் என்னும் பெயர் சூட்டப்படல்.

1926- மாசி யாழ்.வைத்தீஸ்வ வித்தியாலயம்,விவேகானந்த வித்தியாலயம் ஆகியவயற்றைப்பொறுப்பேற்றல்
பங்குனி- கொழும்பில் விவேகானந்த வித்தியாலயம் தொடங்கி வைக்கப்படுதல்.

1926- "மதங்கசூளாமணி"என்னும் நாடகத்தமிழ்நூல் மதுரைத்தமிழ்ச்சங்கத்தால் வெளியிடப்படல்.

1931- தை-அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர்.

1938- தமிழ்ச்சங்கம் "கலைச்சொற்கள்"என்னும் அகராதி நூலினை வெளியிடுதல்.

1947- இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் பதவி.

1947- ஆனி 5,6-திருக்கொள்ளம்பூதூரில் கரந்தைத் தமிழ்ச்சங்க வெளியீடான "யாழ்நூல்"அரங்கேற்றப்படல்.

1947- ஆடி 19-வீடுபேறு (மறைவு)

ஆக்கம் - தேஜோய் றயான்.
தரம்-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

Z.M.INSHARD
Proprietor

## BAIYOCKE SHOE PALACE

*Quality and Fashionable Shoes*

**High Quality Ladies & Gents Shoes, Ladies Hand Bags,**
**High Quality Traveling Bags & Car Accessories**

**No.61, COLOMBO STREET,**
**KANDY.**
**Tel & Fax : 081 - 2202620**

---

## RT RANJITHA TRADERS

IMPORTERS,GENERAL MERCHANTS &
COMMISSION AGENTS

180,Colombo Street,
Kandy.
Tel : 081 - 2232350, 2229155
Fax : 081 - 2229156

---

## LENIN VISION

Filming, Wedding Video, Photo Album's,
Puberty Ceremony, Birth Day Invitation,
Video Chapter Make
DVD,VCD,
Screen,Wedding Card's Printing,Plastic Sing Bord's, Sticker Work
Banner's Materieal Printing,

14,Old Matale Road,
Alawathugoda.
Tel : 072 - 4833446
071 - 8808079

---

KANDY STORES

" THE SUPER STORE THAT GIVES YOU MORE"

Since 1952

## KANDY STORES

**DEALERS IN TEXTILES & READYMADE GARMENTS**

65,Bazaar Street,
Kurunegala.

Tel : 037 - 2222446
Fax : 037 - 2233596
E-mail : kandycny@sltnet.lk

OWNED BY C & Y EXPORT AGENCY LTD.

---

## KANDASAMY STORES

**Wholesale & Retail.**



**No. 68 Puttalam Road,**
**Kurunegala.**

---

**K.Nakulendran**
***Proprietor***

## THEIVEEGAA STORES



**No.25,Negambo Road,**
**Kurunegala**
**Tel ; 037 4914353**
**077 3440234**

---

Balasundaram Parthiban

ஓம்



## M.R.SOMASUNDARAM

64, Newtown, Ranawana Road,
Katugastota.
Tel - 081 - 2498299

---

**VIJAY**



**DEALERS IN PHARMACEUTICAL & GROCERIES**

**No.344, Galle Road, Wellawatte, Colombo - 06.**
**Tel : 011 4889911, Mobile : 077 9179900**
**FREE DELIVERY SERVICE**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE DAY GOD CALLED YOU HOME

**God has given it On**

06 - 04 - 1989



**God has taken it On**

01 - 20 - 2011

God Looked around his Garden
And He Found an empty place.
He then looked down upon this earth,
And saw your tired face.

He put arms around you
And lifted you to rest
God's garden must be beautiful
He always takes the best

EVENTHOUGH YOU ARE NOT HERE YOU LIVE IN OUR HEARTS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008 Batch - S.A.C.K

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சு (ய) தந்திரம்

"வீட்டைச் சுற்றி நாற்புறமும் சுவர்களை
எழுப்பிக் கொள்ளவோ ஜன்னல்களையெல்லாம் அடைத்தே
வைத்துக் கொள்ளவோ நான் விரும்பவில்லை எல்லா உணர்வுகளும்
என் வீட்டினுள் காற்று போல்
தாராளமாக வீசிக் கொண்டே இருக்கட்டும் ஆனாலும்
எவையேனும் என் காலினை வாரிவிடுவதற்கு ஒப்ப மாட்டேன்"

எஸ். மனோரஞ்சன்

### அம்மா

உன்னுயிர் பிரியுமுன்
அவளுயிர் பிரிய வேண்டும் ( என்ன கொடுமை)
உன் மலர்வைத் தாங்கிய மடி
உன் உதிர்வைத் தாங்கிடாது .........

### பிறப்பு

என்னை ஏன் பெற்றாளோ?
திட்ட மொழியியலாமல்
அழுகிறது கு[illegible]

### தாலாட்டு

எல்லை மீறிய தொல்லையை நிறுத்த
தாயின் அன்புக் கட்டளை
இசையினூடு .......

### மனிதன்

உடலின் உரிமையாளனா?
உயிரின் உரிமையாளனா?

### இறப்பு

ஒரு பிணத்தைச் சுற்றி
இனிவரும் பிணங்கள்
ஒத்திசை பார்க்கும்
தருணம்.

### உயிர்

அவள் (ன்) திருடிவிட்டால்
பெயர் காதல்
எமன் அபகரித்தால்
ஏனோ சாதல்

M. F. A. சரிப்
கணிதப் பிரிவு
தரம் 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருமு

இனிமையும் மாண்புமிகு இனியரும் ஈகை மாந்தரும்
இனியன செய்யும் இளமையும், சரியென செய்யும்
வலிமையும், உண்டென உருமு !

சந்துருவும் சதகம் பாடும் சதுரனும் சரியென
உரைக்கும் சம்போகமும், சமநிலை வகிக்கும்
சமயமும் வேண்டுமென உருமு !

நீசலும், நீம்பும் தீய் சொல்லும் தீயோரும்
பேய் காட்டும் பெரியோரும் தீட்டுக்கொடுக்கும்
தீமையும் வேண்டாமென உருமு !

பரிவேடமும், பருந்தும், பருவதமும் பருவரல் வராத
காலமும் பருவா கொள்ளாத உழைப்பும்
பல்லவமும் உன்னை சுற்ற வேண்டுமென உருமு !

வயனம் சொல்லும் வாலிபரும் கல்வி வயா
கொண்ட மாணாக்கரும் தீமைப்பால் வயிர்
கொள்ளும் வர்க்கமும் வமிசப்பரம்பரையாக
வேண்டுமென உருமு !

சி.இதர்ஷன்,
தரம் - 13T

## என் இனிய தமிழ் மொழி

என்னைத் தாலாட்டிய மொழி
எனதருமைத் தாய்மொழி
என் இனிய தமிழ்மொழி
எண்ணமெல்லாம் நிறைந்த மொழி

என்னை நான் தொலைத்தபோது
என்னுள்ளே புதைந்த போது
எண்ணெய் ஆக மிதந்தது என்
எண்ணங்களை ஒளிரச் செய்த மொழி

இதயத்தின் நாளங்கள் முஹாரி மீட்டினாலும்
இனிமையான கல்யாண இராகம் பாடினாலும்
இதயத்தின் வலி மறக்க உதவும் மருந்தாய்
இனிய என் தாய் மொழி என்றும் என்னுடனே

எப்போதும் அணைத்துக் கொண்ட மொழி
எப்போதும் கவிபாடிக் களித்த மொழி
என்னுடல் கருகி சாம்பலானாலும்
என் சாம்பலோடு பூத்துக்கமழ்ந்திருக்கும் தமிழ்மொழி

ஜோசப் மைக்கல்
13 வணிகப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

**CENTRAL MEDICALS**

+CM

No.92,Dalada Veediya,
Kandy.
Tel : 081-2223677 5624206
Fax: 081-4479309

**SUJATHA JEWELERIES**

278, Main Street,
Matale.
Tel : 066-3689246
066-4908309

**RAILWAY NURSERY SCHOOL NAWALAPITIYA**

**S.M.M.Lukman**
**M.N.M.Nazick**
**S.Tharaniydharan**
**Grade 11D**

**LAKSHANA TRADERS**

213/3,Colombo Street,
Kandy.
Tel : 081-4988628

**RATHNAYAKE AND KURKULASOORIYA STORES**

No. 03,68,Central Market
Kandy.
Tel : 081-2233984

**FRIENDS**
**VIDEO CENTER**
ALL RELOADS AND CARDS
LOCAL & IDD CALLS
VCD,DVD & AUDIO CD
S.Yoga
No.20,
A.ADharmasena Mw,Kandy.
081-2202027
077 6116491,075 8899102.

**P.SELLAIAH (J.P)**

518, BALAGOLLA
KENGALLA
071-2420001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

**Quick Medical DIAGNOSTICS**

No.2,Ramakrishna Garden,
Colombo-06,Sri Lanka.
Tel/Fax : +94-11-2362620
Mobile : 0777-847856
E-mail : [illegible]mpaa@sol.lk
qm_pushpaa@sltnet.lk

**Pushpaa Chandradasan**
Dip.In physio.Dip.In MLT
Director

No.18/1,Pathingiya Road,
Nawayalatenna,Katugastota.
Tel : 08-12497146,077-3292739

---

# A.G.M. Hazzary
# (Old boy)
# A.G.M.Arshad
# (Present)

---

UNS

Al Haj A.F.M.Nizamdeen

# U.N.S. FAREED & SONS

**General Merchant Whole Sale & Retail**

**No.90,Main STreet, Kekirawa.**
**Tel : 025-2264190,025-2264324 Fax: 025-2264190**
**Mobile : 0777-886715 Residence : 081-2301175**

---

# M.H.M. RISVI

**No-46 - Udathalawinna madige**
**Udathalawinna**
**Tel - 0779981041**

---

# Asiatic Commercial Agency

**AGENTS FOR LANKA TOR STEEL**
**IMPORTERS & GENERAL HARDWARE MERCHANTS**

**457/1 Old Moor Street**
**Colombo - 12**

**Tel : 2338513**
**2348058**
**2437023**

---

**J M Ameer**
**PROVINCIAL MANAGER**

**Provincial Office - Eastern Province**
**Central Bank of Sri Lanka**
5th Mile Post, Sumedhankarapura,Trincomalee,
Sri Lanka.
Tel : 94 26 2242333,94 26 2242331 (Off.)
Tel : 94 66 2244829 (Res.), 94 77 6214428 (Mobile)
Fax : 94 26 2242332, E-mail : ameercbsl@yahoo.com,
cbsltrinco@gmail.com

---

# Sivaram

Tel : 081-4936356
077-3525054

*Manufacturers of Quality Gold Jewellery*

251/4,D.S.Senanayake Veediya, Kandy.

---

M.A.M.Jiffry
Partner
0777-811774

CHS

# CENTRAL
**HARDWARE STORES**

No.55,Kurunegala Road, Katugastota.
Tel: 081 - 2499466,2499274,4901322
Tele/Fax : 081-2499503
E-mail:centralkgt@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியுணர்வுடன் ..............................


- "செந்தமிழின் சிம்மாசனமாய்த் திகழ வேண்டும், எமது கலைவிழா" என்பதே கண்டி, புனித அந்தோனியார் கல்லூரியின் தமிழ்மொழி மூல மாணவராகிய எம்மவரது அசையாத எதிர்பார்ப்பு. இவ்வண்ணம் எவ்வித குறைகளுமின்றித் தமிழன்னையின் பாதக்கமலங்களில் இப்பெருவிழாவினைச் சமர்ப்பிக்க அருள்பாலித்த வல்லவனாம் இறைவனுக்கு எமது இதயபூர்வமான நன்றிகள்.
- காலத்தைத் துச்சமென மதித்து மாண்புறும் தமிழே உன்னதமானதென உணர்ந்து எம் பெருவிழாவின் சிறப்பிற்கு வளம் சேர்த்த விழா நாயகர் மத்திய மாகாண கல்வியமைச்சர் மாண்புமிகு அனுஷ்யா சிவராஜா அவர்கட்கும்,
- என்றுமே எமக்குப் பக்க பலமாகவும், ஆதாரமாகவும் திகழ்ந்து தாய்மையின் வழிகாட்டலுடன் ஆதரித்துவரும் எம் கல்லூரியின் முன்னர் பிரதி அதிபரும் இளைப்பாறிய கண்டி வலய மேலதிகக் கல்விப் பணிப்பாளருமான திருமதி.இ.சிவரத்தினம் அவர்கட்கும்,
- தொடர்ந்தும் எம் குரல் கேட்டுத் தம் நல்லாசிகளை வழங்கி வருபவருமான மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் திரு.இராசையா அவர்கட்கும்,
- தமிழ் மணம் கமிழும் எம் வாழ்க்கைப் பயணத்தில் நாம் அமைதியில் உலவிட வளமளிக்கும் சிறப்பு அதிதிகளான திரு.M.நமசிவாயம்பிள்ளை, திரு.M.செல்வராசு, மற்றும் திரு.இரா. மோகன் அவர்கட்கும்,
- தவத்தின் அருள்வடிவால், தமக்கே உரித்தான தலைமைத்துவத்திற்கு இலக்கணமாய் அமைந்து எம்மவரை வழிநடத்தி வசந்தமாம் எம் விழா வனப்புடன் நடந்தேற வாய்ப்பளித்த முன்னாள், இந்நாள் அதிபர் பெருந்தகைகட்கும்,
- மொழி கடந்த தமிழ்ப்பற்றுடன் அருளொளியேற்றி எம்மை வாழவைக்கின்ற எம் உளங்கவர் ஆசிரியப் பெருந்தகைகட்கும், சகோதர மொழிப் பண்பாளராம் ஆசிரியப் பெருந்தகைகட்கும்,
- நினைவுகளில் துலங்கிடும் அம்சமிகு கலைநிகழ்வுகளை அரங்கேற்றி, விழாவிற்கு அழகு சேர்க்கும் லலிதகலாவேதி மா. இந்திரராசு அவர்கட்கும், சகோதர மொழி மூல நடன ஆசான் திரு. அஞ்சன கமகே அவர்கட்கும், மற்றும் நடன ஆசிரியர்களான திரு. ஹரிஸ், செல்வி. தனுஜா அவர்கட்கும்,
- எம்மவர் படைப்புகளால் பொக்கிஷ ஏடாகும் கலைமதிதனை முழுமதியாக்கி உலவிட அருளிய நந்தன் அச்சகத்தினருக்கும் விழா அழைப்பிதழ்தனை அழகுற வடிவமைத்து வழங்கிய ருச்சிர (Ruchira) அச்சகத்தினருக்கும்,
- பின்னணி இசைமூலம் பண்ணுற, நிகழ்வுகளை நிஜமாக்கி முன்னணியில் ஒளிர்வித்த பல்துறைக் கலைஞர்கட்கும்,
- ஊடக அனுசரணை மூலம் எம்மவர் மாண்பினை மென்மேலும் உலகறிய விளைந்த அனுசரணையாளர் வெற்றி FM மற்றும் வெற்றி TV நிறுவனத்தாருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றதாயும் தெய்வமே ! அவ்வகையில் கற்ற கல்லூரி சொர்க்கமாகாதோ என எண்ணித் தோள் கொடுக்கும் ஒவி, ஒளி அனுசரணையாளர் 1992ம் வருடத்தினர், அழைப்பிதழ், மற்றும் பின்னணி இசைக்கு அனுசரணை வழங்கிய 1996ம் வருடத்தினர், ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு ஆகியவற்றிற்கு அனுசரணை வழங்கிய 1997ம் வருடத்தினர், அரங்க அலங்காரத்திற்கு அனுசரணை வழங்கிய 1995ம், 1999ம் வருடத்தினர், புலமைப் பரிசில்களுக்கு அனுசரணை வழங்கிய 1998ம் வருடத்தினர் மற்றும் நிகழ்ச்சி நிரலினை அச்சிட்டு வழங்கிய செல்வன்.பிரதீப் (2008) அவர்கட்கும் மற்றும் பல்வேறு வழிகளில் எம்முடன் கைகோர்த்து வேண்டிய ஒத்துழைப்புகளை நல்கி வரும் செல்வன்.ஹிஷாம், செல்வன். பெட்ரிக், செல்வன் கவாஸ்கர் ஆகியோருக்கும்,

- ஏககாலத்தில் நிதியுதவிகளையும், ஆசிர்வாதங்களையும் வழங்கிய விளம்பர நிதியுதவியாளர்களுக்கும், பெற்றோர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும்,
- பல்வேறு சந்தர்ப்பங்களிலும் ஊக்குவிப்பையும், ஆக்க பூர்வமான உதவிகளையும் நல்கிய சகோதர மாணவர்களுக்கும், நண்பர்களுக்கும்,
- கலையின்பத்தைப் பெற்றிட வருகை தந்துள்ள கலா ரசிகப் பெருமக்களுக்கும், பெயர் குறிப்பிடப்படாத ஏனைய அன்பர்களுக்கும் வந்தனங்கள் கூறி,

நன்றிகள் பல புனைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From***

UK

SACK

OBA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compilments From*

**M.SELVARAJ**
**Managing Director**

# NEW SRIYANI DRESS POINT

37. Main Street,
Kegalle
Tel : 035 2222374,2223156
Fax : 035 2221240

Branches :-

No-36 Perakumba Street,
Kurunagala.
037-2233240

No-55a, Peradeniya road,
Kandy.
081-2220880

# S.I.S. APPAREL

38/11 Circular road,
Anniewatte,
Kandy.
Tel : 081-2204227

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Wishes From*




This Page is dedicated to
our dearest friend
**NIROSHAN FRANCIS**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# LUCKYLAND
## BISCUITS

NATHARAMPOTHA, KUNDASALA
TEL# 081-2420217, 081-2420574,081-2227041
Fax# 081-2420740, 081-2234961

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org